ஆடி - 2023 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண் சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 2 பாடல் 7




ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்
79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி
பொது 'இ' சேவை மையம்
அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்
AADHAAR
Pradhanmantri Fasal Bima Yojana
பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT
fssai
Passport Seva
Service Excellence
ELECTION COMMISSION OF INDIA
குடும்ப அட்டை / FAMILY CARD
G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com
'கண்ணாமூச்சி' இலக்கிய பணி தொடர வாழ்த்துகள்...

# இலக்கியம்

# சோறு போடுமா...

இலக்கியம் சோறு போடுமா என்ற கேள்விக்கு சோறு போடாது.

ஆனால் பசியோடு இருப்பவனுக்கு சோறு போட வேண்டும் என்ற ஈவு இரக்கத்தை அது சுரக்கச் செய்யும் என்றார் கவிக்கோ அப்துல் ரகுமான் பயிர் பூத்த வயல்களில் இயந்திரங்களை இறக்கி கால்வாய் வெட்டும் அளவுக்கு இன்று ஈவு இரக்கம் செத்துக் கிடக்கிறது.

மறுபுறம் பசியோடு இருக்கும் ஒரு மனிதன் முன் தயிர்சாதப் பொட்டலத்தை நீட்டி அதைப் படம் பிடித்து லைக்காகவும் கமெண்டாகவும் மாற்றுகின்ற மலினமும் நடக்கிறது. கொடுக்கும் மனிதனுக்கு அது பெருமையாக இருக்கலாம். கைநீட்டி வாங்குபவனின் மனநிலையை யோசிக்க வேண்டாமா? படைப்புகளில் வரும் கதாபாத்திரங்களுக்காக மனம் வருந்தும் ஒரு மனநிலை நம்மிடம் இருந்தது தானே.

ஒரு வீடு ஒரு உலகம் ஒரு மனிதன் ஹென்றியையும் மோகமுள் பாபு யமுனாவையும் இரும்புக் குதிரை விஸ்வநாதன் காயத்ரியையும் நாம் இன்னும் ஞாபகம் வைத்துதானே இருக்கிறோம்.

மனம் நெகிழச் செய்யும் படைப்புகளும் படைப்புகளுக்கு நெகிழும்... மனமும் எல்லாக் காலங்களிலும் தேவையாகத்தான் இருக்கிறது...

பாமணியாற்றுப் படுகையிலிருந்து

அன்பின் ஈரங்களுடன்,

கோ.அருணாகிரி,

ஆசிரியர்

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2054
ஆடி - 2023

நிறுவனர்
ப. பரிதிபாண்டியன்

ஆலோசகர்
அம்ரா பாண்டியன்

ஆசிரியர்
கோ.அருணகிரி

ஆசிரியர் குழு
கலை பாரதி
த.ரெ.தமிழ்மணி
சா.தமிழ்ச்செல்வன்
ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
க.தங்கபாபு
பாலகுமரன் பரிதி
தமிழாதன்

இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்

அட்டைப்பட உதவி
கிஷ்கிந்தா பாலாஜி, சின்னமனூர்

தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

## உள்ளே...

சிறுகதை:
**பயணம்**
- நாணற்காடன் | 12

கட்டுரை:
**நிறப்பிரிகை**
– சு.இராமசுப்பிரமணியன் | 16

சிறுகதை:
**தோழர்**
- த.ரெ.தமிழ்மணி | 23

கட்டுரை:
**தேவக்கார பெரியம்மா**
– இரா.மோகன்ராஜன் | 26

அகழ்தல்:
**தாங்கல்**
- ஆ.அரிமாப்பாமகன் | 35

கவிதை:
**இடங்காண்கோட்டை**
**சிவகுமார் கவிதைகள்** | 44

சந்தா விவரம்:

**தனி இதழ். 30**

**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட

**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட

சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# சிந்தாமணி அத்தையும் செண்பகா தியேட்டரும்

## கோ.அருணகிரி



'வேப்பத்தாங்குடி ஆத்துக் கரையில வச்சிக்கிட்டு,என்னவுட்டுட்டு நீபோயிட்டா நா என்ன பண்ணுவேண்னுன மனுசன், எல்லாப் பேருகிட்டேயும் மொத்துப்பட்டு வான்னு என்ன வுட்டுட்டுதா போயிட்டே..

தலையில வச்சா பேனு கடிக்கும். தரையில வுட்டா எறும்பு கடிக்குமுன்னு ஊசிமுத்தான் வூட்டுல ஒரு பொண்ணா வளந்த நா இங்க வந்து சீரழியுறேன்..'

"என்ன ராசம்மா... யாருல்ல வூட்டுல, யாருக்கிட்ட பேசிக்கிட்டு இருக்கேன்னு" கேட்டப்படி வந்திச்சி முத்தாளு அக்கா.

"வாடியாயா.. நா யாருக்கிட்டப் பேசுறது ஐயனாருக்கிட்டத் தா பேசனும். என்னம்மோ ஏ வவுத்தெறிச்ச பொலம்பிக்கிட்டு இருக்கேன் தனியா"

"புள்ளையோ எங்க...?"

"கெட மாடு வர்ற நேரல்ல.. சாணி பொறுக்க போயிருக்குவோ.."

"பாலு இல்ல.. கெடந்த காபி வில்லையைப் போட்டு தலைய வலிக்குதுன்னு வரத்தண்ணி வச்சேன். நீ ஒரு மொறடு குடியேன்..?"

"ம்..ம்.. நீ குடி எனக்கும் தலைய வலிக்கிறாப்புல இருந்துச்சி. இப்பத்தான் சோறு வடிச்ச சுடுதண்ணில உப்பப்போட்டு குடிச்சிட்டு வாறேன்.."

முத்தாளு அக்காவும் அம்மாவும் பேசிக்கிட்டு இருக்கும் இதே நேரத்துல நானும் நடக்காவும், நா வெய்யிலுக்கு மே சட்டையையும் அக்கா தாவணியையும் தலையில போட்டுக்கிட்டு கெடமாடுவோ வருதான்னு பாத்தபடி அறுப்பறுத்த அடித்தட்ட கால்ல குத்த நின்னுக்கிட்டு இருந்தோம் வயக்காட்டுல.

தைமாசச் கடைசில மாட்ட கெடக்கி ஓட்ட ஆளுவ வருவாங்க. ரொம்ப நாளா செனப்படாத மாடு, வீட்டுக்கு அடங்காத

மாடுவொள கெடையில ஓட்டி உடுவாவோ.. ஆனி மாசக் கடைசிலோயோ, ஆடி மாச ஆரம்பத்துலயோ மாட்ட கொண்டாந்து வுடுவாவோ. ஆனிமாசக் கடைசிலேயே எப்படா மாடு வீட்டுக்கு வரும்முன்னு மாட்ட பாக்குற ஆச வந்துடும். வைக்க கூளமா இருந்தாக் கூட திங்காது. இந்த சேப்பு மாடு எப்படி கெடக்கேன்னு அம்மாவும் மாட்டப் பத்தியே பேச ஆரம்பிச்சுடும்.

திடீர்ன்னு ஒரு நா பள்ளியோடம் விட்டு வரயில வீட்டுல மாடு கட்டிக் கெடக்குது. தூரத்துலேயே பாத்துட்டு 'ஏய்.. எப்ப வந்தேன்னு..' தடவிக் கொடுப்போம். முன்னால கிட்ட போனாலே முட்டுற மாடு.. இப்ப ஒனக்கையாத் தடவிக் கொடுக்குறத வாங்கிக்கிட்டு நிக்கும். ரெண்டு மூணு நாளைக்குப் பாசமா எல்லாஞ் செய்வோம். அப்புறம் அதுவும் முட்ட ஆரம்பிச்சுடும். நாங்களும் திட்ட ஆரம்பிச்சுடுவோம். சென படாத மாடும் செனப்புடிச்சி வந்துடும்.

அப்படி மேச்சலுக்கு வார கெட மாடெல்லாம் தண்ணிக்காட்ட பாமணி ஆத்துக்குத்தான் ஓட்டி வருவாவோ. தண்ணிக் குடிக்கிற மாடு ஆத்துக் கரையில இருந்து வயக்காட்டுக்கு வந்ததும் மூத்திரம் போகும். அப்புறம் சாணி போடும். அந்தச் சாணியப் பொறுக்கத்தான் நானும் அக்காவும் நின்னுக்கிட்டு இருக்கோம். இப்படி சாணி பொறுக்குறதுல ஒருத்தருக்கு ஒருத்தர் சண்டை கூட வந்துடும். ஏஞ் சாணிய நீ எடுத்துட்ட ஓஞ்சாணிய நா எடுத்துட்டேன்னு இதுக்காகவே எந்த மாடாவது வாலத்தூக்குனாலே பின்னாடியே ஓடிப்போய் நா சாணிய ஒதுக்கி அடையாளம் வச்சிடுவேன். அப்புறம் அக்கா ஒதுக்குன சாணிய கொட்டுக் கூடையில அள்ளிப் போட்டுக்கிட்டே வரும்.

நடவுநாத்துக்குப் போவமுடியாத கோடைக் காலத்துல சாணி பொறுக்கி ராட்டித்தட்டி விக்கிறது ஒரு பொழப்பா ஓடும் எங்களுக்கு. 'ராட்டி சின்னதா இருந்தா அஞ்சி காசு. பெருசா இருந்தா பத்துகாசு, பத்துகாசு ராட்டிய அஞ்சிகாசுக்குப் பேரம் பேசுற பொண்டுவக்கிட்ட அம்மா சொல்லும்'

"ஏட்டி இது என்ன, மத்தவளுவ விக்கிற மாரி ராட்டி இல்லடியாயா.. இது அவ்வளவும் வேப்பஞ்சருகையும், வக்க கூளத்தையும் ஒக்காந்து இடுப்பு வலிக்க வலிக்க அருவாமனையில பொடுசா வெட்டிப்போட்டுத் தட்டுன ராட்டி யாயா.. ஒரு ராட்டிய அடுப்புல எடுத்து வச்சேன்னா சோறு, கொழும்பு எல்லாஞ் செஞ்சி மீதிக் கெடக்குற அனலுல சுடுதண்ணிப் போட்டுக்கூட குளிக்கலாம்! அப்படி நின்னு எரியும். காலம்பற பல்லு வெளக்க சாம்ப தவுட்டுத் தூளாட்டம் கெடக்காது. அப்படியே வெள்ளிக்கட்டி மாதிரிக் கெடக்கும்."

"அது தெரியாமலாக்கா இம்மாந்தூரம் வாரேன். எங்க தெருவுலேயே அருமக்கண்ணு அக்கா விக்குதே."

"ஆமா.. அருமக்கண்ணு ராட்டியப் போட்டு அடிச்சாங்கடி. நாத்த சாணிப் பொறுக்கி, ஈரராட்டிய விப்பா.. தெரியாதா எனக்கு..?"

இப்படி அப்படிக்கி அஞ்சி காசு, பத்துக்காசு ராட்டிய விக்கிறத விட அக்கம் பக்கத்துலேயே ஏதும் துக்குமுன்னா பொணம் எரிக்க, ராட்டி வாங்க வருவாவோ, இருபது முப்பதுன்னு யாவாரம் நடக்கும். அன்னைக்கி அம்மா பேச்சுலயும் மொகத்துலயும் ஒரு செண்டிப்புத் தெரியும். நல்ல கொழம்பு தின்னு நாளாச்சிடி யாயா.. நாக்கு செத்தாப்புல வருது. ஆத்துமீனு புடிச்சா வாங்கியாரனும்னு கெளம்பும், கருவாட்டுக் கொழும்புனா ரெண்டு அவிச்ச முட்டை வவுந்துக் கெடந்து எச்சி ஊறவைக்கும்.

"கணக்கா எண்ணி வைக்காம பத்துராட்டிய கூட வையிங்க ஆயி. ஏதோ ஒங்கப்பேரச் சொல்லி நாங் டீ குடிசிட்டுப் போறோம்."

"என்ன செல்லகண்ணு இப்படி சொல்லிட்டே நா ஒங்கக்கிட்ட கணக்குப் பாத்தா கொடுப்பேன்?"

"இன்னொரு கேசு இழுத்துக்க.. பறிச்சுக்கன்னு கெடக்கு. அதுக்கும்

ஒங்கக்கிட்டத்தான் ராட்டி வாங்க வரணும்..”

“வா..வா.. நா செத்தா மட்டும் நெறைய ராட்டி வெறவ வச்சி நல்லா வேவ வச்சிடுங்க. என்ன ஒன்னு நெஞ்சு மட்டும் வேவாது. ஊருபட்டக் கத உள்ள கெடக்குறதாள”

“அதுக்கென்ன ஆயா பத்து ராட்டிய சேத்து அடுக்குனா எல்லாக் கதயும் வெந்து மாவுமாவா போயிடும்னு” சொல்லிச் சிரிச்சப்படி போவாங்க செல்லக்கண்ணும் அவரு கூட்டாளிகளும்.

தூரத்துல மாடுங்களோட மணிச்சத்தம் கேட்டதும் ஏய்.. மாடுவோ வருதுரான்னு அக்கா ஓட நானும் ஓடுனா, தொரதொரன்னு களிஞ்சாப்புல மாடுகப் போட்ட சாணிய உட்டுட்டு, நல்ல சாணிய நா ஒதுக்கி ஒதுக்கி வைக்க, அக்கா கொட்டுக் கூடையிலப் பொறுக்கிப் போட்டுக்கிட்டே வந்துச்சி. ஒரு கூட ரொம்புனதும் அத ஒரு எடத்துல கொட்டி வச்சிட்டு அடுத்தக் கூட அதுலயும் கெடவச்ச வயலுள பொறுக்க முடியாது. அது வயக்காரவுவருக்கு, மாடு நடையில தான் பொறுக்கனும். இப்படிப் பொறுக்கி மாடுக எல்லாம் போனதும் பாத்தா ஏழெட்டுக் கூட சேந்துடும்.

“ஏய்.. தம்பி இன்னைக்கு சாணி நல்லா சேந்துட்டுடா, எல்லாத்தையும் ஒரே முட்டா வீட்டுலக் கொட்டாம தெருப்பக்கம் பாதி, கொல்லப்பக்கம் பாதிய பிரிச்சிக் கொட்டணும்டா தம்பி.. யாராவது பாத்தா கண்ணு வப்பாளுவ.”

“அக்கா இன்னைக்கித்தா நெறைய சாணி பொறுக்கி இருக்கோமுள. அம்மா சினிமாவுக்குப் போவ காசு தருமா?”

“தரும்”

“க்கு.. அன்னைக்கும் அப்படித்தான் வேப்பங்கொட்ட நெறய பொறுக்குனப்பயும் சொன்ன, அம்மா தரவே இல்ல’’.

‘‘அது இல்லாமத் தெருவுல ரெண்டு பேரு இழுத்துக்கப் பறிச்சுக்கோன்னு இருக்காவோ.. அமாவாச வேற வருது. யாரும் போயிட்டா ராட்டி தேவப்படுமுள. அதனால நிச்சயம் சாணிப் பொறுக்குனதுக்குக் காசு தரும் அம்மா.”

“அப்பன்னா நா சிந்தாமணி அத்தக்கிட்ட சொல்லி வைக்கவா... சினிமாவுக்குப் போனா என்னையும் கூட்டிட்டுப் போன்னு..”

சிந்தாமணி அத்தை தான் எங்கத் தெருவுல சினிமாவுக்கு அடிக்கடிப் போற ஆளு. அத்தையோட அம்மா சினிமாவுக்குப் போனப்ப இடுப்புவலி வந்து கொட்டகையிலேயே பொறந்துட்டாம். அப்ப ஓடுன படம் பேரு ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ



சிந்தாமணி. அதனால, அத்தை பேரையும் சிந்தாமணின்னு வைச்சிட்டாங்க. எந்த சினிமாவ இருந்தாலும், மொத ஆளா பாத்துட்டு வந்து கத சொல்லும், அப்ப மன்னாருடில நாலு கொட்டகை இருந்துச்சி. கல்கி டாக்கீஸ், ஸ்ரீராம் டாக்கீஸ், சாந்தி தியேட்டர், செண்பகா டாக்கீஸ் இதுல செண்பகா கொட்டகைக்குத் தான் அத்த அதிகமாப் போவும். அதுக்கு, ரெண்டு காரணம் பழைய படங்க அதுல தான் எடுப்பான். குறிப்பா எம்சார் படங்க. அத்தை தீவிர எம்சார் ரசிகை. ரெண்டாவது காரணம் ஆயிரம் தல வாங்கிய அபூர்வ சிந்தாமணி படம் பார்க்கையில் அது பொறந்தது அந்தக் கொட்டகையில தான்.

அந்த அத்தையோட புருசன் ஏதோ மன வருத்தத்துல கோச்சிக்கிட்டுப் போனவரு வரவே இல்ல. புள்ளக் குட்டியோளும் கெடையாது. பூ, பொட்டு வச்சி வலக்கொண்டைப் போட்டு அது

சினிமாவுக்குப் போறத பாக்குற பொண்டுவ,

'போன புருசன் செத்தான்னா, பொழச்சானான்னு தெரியல. இவ சிங்காரிச்சிக்கிட்டுப் போறத பாத்தியான்னு பேசுறத அது காதுல போட்டுக்கிறதே இல்ல' பொழுது சாயுற நேரத்துல ஒரு கறிக்கடை பாய் சிந்தாமணி அத்தை வீட்டுக்கு வருவாரு.

"வெயில் நேரத்துல வாசல்ல தண்ணித் தெளிச்சு வுட்டா, சாயந்தரம் குந்துறதுக்கு நல்லா இருக்குமுள"

"ம்.. தெளிச்சிவிட்டது தான். அடிக்கிற வெய்யிலுக்கு அப்படி புழுதிப் படர்ந்து கெடக்கு.."

"மணி.. இந்தக் கொடல கொழம்பு வச்சிக்க. வாட்டுன காலு இருக்கு. அம்மியில வச்சி, ரெண்டு தட்டுத்தட்டி தண்ணிசாறு மாரி வச்சேன்னா.. அத நான் குடிச்சுக்குவேன்."

"கொண்டார்ற நீ நேரத்துல வரணும். எல்லாத்தையும் இருட்டிப் போய் கொண்டாந்தா எப்படி செய்யுறது..?"

"அட.. நீ ஒரண்ட காலு கேட்டவன் வரல. கொடலுதான் ஒனக்கு எடுத்து வச்சேன். வர்ற வழில நல்ல ஆத்துமீனு சட்ரசில புடிச்சிட்டு இருந்தானுவ. எல்லாத்தையும் வாங்கியாந்தா நீ இப்படி திட்டுவேன்னு தெரியும். நாளைக்கு வாங்கியாறேன்" ஆணியில மாட்டி இருக்குற எஞ் சட்டையில வெத்தல சீவலும் சுருட்டும் இருக்கு எடுத்துக்க. ஆமா.. நீ இன்னைக்கு சினிமாவுக்குப் போவல..?"

"ம்.. நெனச்சந்தான். செண்பவாவுல குடியிருந்த கோவில் கடைசின்னு வேற ஒட்டி இருந்தான்."

"செண்பவாவுல ரெண்டாவது ஆட்டம் போட பத்தரை, பதினொன்னு ஆவும். நா எல்லாத்தையும் கழுவித் தாரேன். நீ அடுப்ப பத்த வை."

கடக்குப் பொடக்குனு அம்மி அரைக்கிற சத்தம் கேட்கும். கருவமுள்ளோட ராட்டி வச்சு அடுப்பு ஒரு பக்கம் பொகஞ்சி பொகஞ்சி எரியும். எல்லாம் சமச்சிக் கிமச்சி வாசல்ல பாய் விரிச்சி ரெண்டு பேரும் நெலவு வெளிச்சத்துல சாப்புடுவாங்க. ஆட்டுக்காலு ரசம் நல்லா இருக்குன்னு, அக்கம்பக்கத்துல வீடுவோளுக்கும் கொடுத்து உட்டுட்டு சினிமாவுக்கு கௌம்புவாங்க. ஒருநாளும் பாய் அந்த வூட்டுக்குள்ள போய் ஒக்காந்தோ, படுத்தோ யாரும் பாக்கல. திண்ணையிலேயே ஒக்காந்து பேசுவார். வாங்கிட்டு வந்த சாமஞ்சட்டுவளக் கொடுப்பார். வாசலுல பாய் விரிச்சுப் போட்டு சாப்புடுவார். செத்தப் படுத்து இருப்பார். மணி நா கௌம்புறேன்னு போயிடுவார். ஆனாலும், பாய் வந்து போறதப் பத்தி பலரும் பலவிதமா பேசுறதுண்டு.

"அப்படியென்ன சினிமா கண்ணோடயா வருது? சிந்தாமணிக்கென்ன எல்லாம் அந்தக் கறிக்கடை பாய் வாங்கியாந்து கொடுத்துடுறான். நமக்கு முடியுமா? நா ஊரக்கோலி கடன வாங்கி வச்சிட்டு ஒழவடக்க முடியாம திண்டாடித் தெருவுல நிக்கிறேன். ஏதோ நடவுநாத்து நட்டு, சாணிப் பொறுக்கி, வேப்பங்கொட்டப் பொறுக்கி.. கட்டியத் திங்கிறத கரச்சிக் குடிச்சிட்டு கவுரவமா குடும்பம் பண்றேன்! நீ என்னடான்னா சினிமா சினிமான்னு கெடந்து ஆடுறே..?"

ஒவ்வொருமுறை அம்மா 40 காசு சினிமா டிக்கெட்டுக்கு காசு கொடுக்குறப்பவும் இப்படி எல்லாம் திட்டித்தான் தரும். சாணி நெறயப் பொறுக்குன்னா நீ தர்றேன்னு சொன்னியா.. தம்பி சொன்னான்னு, அக்கா சொன்னாலும்,

"ஆமாண்டி சாணிப் பொறுக்கிட்டா ஆச்சா.. அத நா இடுப்பு வலிக்க மிதிச்சித் தட்டி இந்தத் திருட்டுச் செறுக்கியக் கிட்ட காவந்துப்பண்ணி காசாக்குறதுக்குள்ள எனக்கு உசுறுபோயி உசுறு வருதுன்னு கத்தும்."

செண்பகா தியேட்டருல மேட்னி எல்லாம் கிடையாது. சாயந்தரம் மொதக் காச்சி. அப்புறம் செகண்ட் சோன்னு ரெண்டுக் காச்சி தான். செண்பகா தியேட்டருல கடைசியா எடுத்தப் படம் உதிரிப்பூக்கள். அதோட அந்தக் கொட்டாய

மூடியாச்சு. பஸ் ஸ்டாண்டுக்கும் செண்பகா தியேட்டருக்கும் ஒரே ஒரு சொவுருதான் குறுக்கே இருக்கும். தஞ்சாவூர் பஸ்ல ஏறி ஒக்காந்துப் பார்த்தா தியேட்டர் உட்புறச் சுவருல மகேந்திரனின் உதிர்ப் பூக்களுன்னு ஒட்டுன போஸ்டர் ரொம்பநாளு வரை இருந்துச்சு.

ஊரு கடைசில உள்ள ஸ்ரீராம் தியேட்டருல படம் பார்த்துட்டு தெற்கு வீதி சுத்திவர அலுப்புப் பட்டுக்கிட்டு மேலக் கோபுரம் வழிலப் புகுந்து, பெரிய கோபுரம் வழியா குறுக்க வுழுந்து வரயில, உயர்ந்து நிக்கிறப் பஞ்சு மரமும், தென்னை மரமும் காத்துல அசஞ்சி இருட்டுல பாக்குறதுக்கு வவுத்துல புளி கரைக்கும். ஒன்னு கெடக்குற கடைத்தெரு ரெண்டாவது ஆட்டம் படம் வுட்டதும் தொண்டைய செருமி புருண்டு படுக்குறமாரி ஒரு அசைவு கொடுக்கும். டீக்கடைகள்ல ரெண்டு லிட்டர் பால வச்சிக்கிட்டு படம் வுட்டு சனங்க போவட்டுமுனு அப்பறம் சாமஞ்செட்டுவள கழுவ காத்திருப்பாங்க.

ஊருக்கு வெளியே போற ரோட்டுல எல்லாம் கினிங்..மணிங்..ன்னு சைக்கிள் மணிச்சத்தமும், சனங்க பேசிக்கிட்டுப் போற சத்தமும் கேட்கும். வாசலுல பாய்விரிச்சுப்படுத்திருக்குற சனங்க படம் வுட்டுட்டானேன்னு தனக்குத் தானே பேசிக்கிட்டு அரைத் தூக்கத்துல எந்திரிச்சு ஒண்ணுக்கிருந்துட்டுப் படுப்பாவோ.

கடைத்தெருவுக்கு வேலைக்கு வந்தப்புறமும் ரெண்டாவது ஆட்டம் படத்துக்கு ஆர்வமாய்ப் போயிட்டு எடவேளை நேரத்துல படம்வுட்டு தனியாப் போவ பயமா இருக்குன்னு, யாராவது தெரிஞ்ச சனம் இருக்கான்னு கண்ணுதேடும். படம் உட்டதும் நானும் வாரேன்னு சொல்லிட்டு வந்து குந்திக்கிறது எடம் இருந்தா அவுங்க பக்கத்துலேயே ஒக்காந்துக்குறது.

செண்பகா தியேட்டருக்குப் போனா மட்டும் சிந்தாமணி அத்தையைத் தான் கண்ணுதேடும். என்ன ஒன்னு பொம்பளக் கூட்டத்துலப் போயி பாக்க, கூச்ச நாச்சமாய் இருக்கும். சுருட்டு நெருப்பு வெளிச்சம் தெரிஞ்சு போய் பாத்தா அத்தையா இருக்கும்.

“ஏலேய்.. எப்ப வந்தே, படம் போட்டப்பவே வந்துட்டே..?”

“நீ போறப்ப என்னையும் அழச்சிட்டுப் போறியா?”

“ஏல.. ஓயி நா ஒன்ன சினிமாக்கு அழச்சிட்டுப் போயி கெடுக்குறேன்னு சொல்லுவாடா, தெருக்கிட்டப் போயி ரெண்டுபேரும் தனித்தனியாப் பிரிஞ்சி வீட்டுக்குப் போயிடுவோம். ம்.. சரி படம் வுட்டதும் நீ வாசலுல நில்லு.”

படம் வுட்டதும் நானும் அத்தையும் படத்தப் பத்திப் பேசிக்கிட்டே வருவோம். ஒளிவிளக்கு படத்துல எம்.ஜி.ஆர் திருடனா நடிச்சி இருப்பார்.

“என்னத்த எம்.ஜி.ஆர் நல்லவரு. இந்தப் படத்துல திருடுராருன்னு கேட்டா,

“அட.. நீ என்னடா படம் பாத்தே.. இந்த அசோகன் சாண்டக் குடிக்கித்தான் எம்.சார். செய்யாத கொலப்பழிய அவருமேலப் போட்டு, மெரட்டி மெரட்டில்ல அவரத் திருடச் சொல்றான்..!”

இதயக் கனியோ, நாளை நமதோ ஏதோ படம் பார்த்துட்டு வரையில் கதாநாயகிகளுடன் அவரு நெருக்கமா நடிப்பது பற்றி,

“என்னத்த இப்படி பொம்பளை எல்லாம் கட்டிப்புடிச்சி எம்.ஜி.ஆர் அசிங்கமா நடிக்கிறாருன்னு..” கேட்டா,

“அட நீ ஒரு வெவரம் புரியாதவன்டா.. அவரு எங்கடா அசிங்கமா நடிக்கிறாரு? இந்தப் பொம்பல இல்லடா கனவு காணுறா.. இது எம்.ஜி.ஆருக்கே தெரியாதுடா..”ன்னு விளக்கம் கொடுக்கும்.

இப்படிப் பேசிக்கிட்டே தெருக்கிட்ட வந்ததும் ரெண்டுபேரும் பிரிஞ்சி நடப்போம். நா வீட்டுக்கு வர்ற வரைக்கும் அம்மா ஒரு சின்ன சிமிலி விளக்க திண்ணையில ஏத்தி வச்சிருக்கும். அது மண்ணெண்ண கொறஞ்சி சின்னதா எரியும். நடந்து போற அத்தையின் சுருட்டு நெருப்பும் அந்தச் சிம்லி விளக்கு வெளிச்சமும் இருட்டுல தனியா தெரியும்.

●

# நல்ல மேய்ப்பர்

## பாலகுமரன்பரிதி

சிறுவயதில் அப்பா வாழ்க்கை அவ்வளவு சந்தோசமாக அமையவில்லை. மகனின் வாழ்க்கை சந்தோசமாக அமைய வேண்டுமென கஷ்டங்கள் தெரியாமல் என்னை வளர்த்தார் அப்பா.

எங்கள் குடியிருப்பு பகுதியில் புத்தாண்டு கொண்டாடும் வழக்கமிருந்தது. நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போதே இளைஞர்களுடன் இணைந்து கொண்டாடினேன். இரவு இரண்டு மணிக்கு வீட்டுக்கு வருவேன். வாசல் லைட் எரிந்து கொண்டிருக்கும் கதவை தட்டினால் அப்பா திறப்பார் "என்னடா கொண்டாட்டம் முடிஞ்சுதா" எனக் கேட்பார்.

பள்ளி படிக்கும் போது உறவினர் திருமணம், ஊர்த் திருவிழா என நான் விரும்பும் போது விடுப்பு எடுத்துக் கொள்ள அப்பா அனுமதிப்பார்.

கிரிக்கெட் விளையாடுவோம். ஊர் ஊராகச் சென்று போட்டிகளில் பங்கு பெறுவோம். ஒரு சில நேரங்களில் ஓரிரு நாட்கள் ஏதோ ஊரில் தங்கி கிரிக்கெட் விளையாடி வருவோம். அப்பா ஒரு போதும் என்னடா இப்படி ஊர் சுத்துற என்று என்னைக் கண்டித்ததில்லை.

படிப்பில் கூட அப்பாவின் தலையீடு ஒருபோதும் இருந்ததில்லை. நான் பாட்டு பாட வேண்டும். டான்ஸ் ஆட வேண்டும், ஓவியம் வரைய வேண்டும். நீச்சலடிக்க வேண்டும். கராத்தே கற்றுக் கொள்ள வேண்டும், குத்துச் சண்டை போட வேண்டும், குதிரையேற்றம் தெரிந்து கொள்ள வேண்டும் என எந்த ஒரு நிர்ப்பந்தத்தையும் அப்பா எனக்கு அளித்ததில்லை.

பள்ளி படிக்கும் போது சில நாட்கள் நான் அயர்ந்து தூங்கிவிடுவேன்.

"8 மணி ஆயிட்டுடா எந்திரி" என அம்மா கத்துவார்கள்.

"அட, அவனைத் தூங்க விடு, ஒரு நாள் ஸ்கூல் போகாட்டி குடி முழுகியா போயிடும்" என்பார் அப்பா.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது டியூசன் ஆசிரியர் சொன்னார்.

"காலைல மூணு மணிக்கு எந்திரிச்சு படிங்கடா"

"அது எப்படி சார் மூணு மணிக்கு எந்திரிக்கிறது"

"நைட்டு படுக்குறதுக்கு முன்னாடி ரெண்டு சொம்பு தண்ணி குடிங்கடா, மூணு மணிக்கெல்லாம் முட்டிக் கிட்டு வந்துடும் அப்படியே எந்திரிச்சு படிக்க ஆரம்பிச்சிடுங்க" என்றார்.

அவரின் ஐடியா படியே இரண்டு சொம்பு தண்ணீர் குடித்தேன் எனக்கு முட்டிக்கொண்டு வரவில்லை. ஆனால் விழித்து விட்டேன் மணி மூன்றே கால். பல் விளக்கி விட்டு வாசல் லைட்டை போட்டு படிக்க ஆரம்பித்தேன். அடுத்த பத்தாவது நிமிடத்தில் அப்பா எழுந்து வந்தார்.

"என்னடா பண்ற?"

"படிக்கிறேன்"

"மூணு மணிக்கு என்ன படிப்பு? போய் படுடா" என அதட்டினார். அப்படியே போய் படுத்து விட்டேன்.

காலையில் என்னை அழைத்தார்.

"இந்த மதிப்பெண்கள் உன் வாழ்க்கையை மாற்றி விடும் என நம்பாதே ஏமாந்து போவாய். ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஒரு திறமை இருக்கும் எல்லோரும் முதல் மதிப்பெண் பெற்றுவிட முடியாது. உன்னால் முடிந்ததை மட்டும் செய் உடலை வருத்திக் கொள்ளாதே" என்றார்.

பத்தாம் வகுப்பில் 390 மதிப்பெண் பெற்றேன். பன்னிரண்டாம் வகுப்பில் 780 மதிப்பெண் பெற்றேன். நான் அதிகாலை 3 மணிக்கு எழுந்து படித்திருந்தால் இன்னும் இருபது முப்பது மதிப்பெண்கள் கூடுதலாக பெற்று இருப்பேன் அவ்வளவு தான்.

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் அப்பா

“என்ன படிக்கப் போற” என்று கேட்டார். கணித ஆசிரியர் மேல் இருந்த பற்றால் கணிதம் படிக்கப் போறேன் என்று பூண்டி புஷ்பம் கல்லூரியில் பிஎஸ்சி கணிதம் சேர்ந்தேன். கல்லூரிப் படிப்பின் போது கூட அப்பா தலையீடு இருந்ததில்லை. செமஸ்டர் கிரேட் சீட் வாங்கி வந்து அப்பாவிடம் கொடுப்பேன். அதை வாங்கி மதிப்பெண்களை ஆராய மாட்டார். என் திருப்திக்காக ஒருமுறை பார்த்துவிட்டு பீரோவில் பத்திரமாக வையிடா என்பார்.



கல்லூரிப் படிப்பு முடிந்தது. நண்பர்கள் அனைவரும் எம்.சி.ஏ படிக்க வேண்டும் என முடிவெடுத்தோம். அப்பாவிடம் சொன்னேன். முதன் முறையாக அப்பா எனக்கு ஒரு அறிவுரை சொன்னார்.

“கம்ப்யூட்டர் துறையைப் பற்றி எனக்கு ஒன்னும் தெரியாது. ஆனா ஆசிரியர் துறையைப் பற்றி தெரியும் நீ ஒரு வருஷம் மட்டும் பி.எட் படி அதுக்கப்புறம் நீ விரும்புவதைச் செய்யலாம்.”

அப்பா சொன்னாரே என்பதற்காகத் தான் பி.எட் படித்தேன். 40 நாட்கள் ஆசிரியர் பயிற்சிக்காக பைங்காநாடு அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சென்றேன். அங்கு தான் நான் முழுமையான ஆசிரியர் என்பதை உணர்ந்தேன். என் எதிர்காலம் ஆசிரியர் பணி தான் என முடிவெடுத்தேன்.

ஆசிரியர் பணி அவ்வளவு எளிதாக கிடைத்து விடவில்லை. ஐந்து ஆண்டுகால போராட்டம். ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சிப் பெற்றேன். வெயிட்டேஜ் இல்லை என்றார்கள். அதற்குள் எனக்கு திருமணம் நடந்தது. குழந்தை பிறந்து விட்டது. அப்பாவிற்கும் எனக்கும் இடையே சுவாரசியமான உரையாடல்கள் நின்று போயின. நாட்கள் கடினமானதாகவே இருந்தது.

ஒருநாள் அப்பா “கடைக்கு வாடா” என்றார். சென்றேன். தினத்தந்தி நாளிதழை என் கையில் கொடுத்தார். ஒரு மூலையில் ஆசிரியர் தேவை என்ற விளம்பரம் வந்திருந்தது. ஆச்சரியம் என்னவென்றால் எங்கள் வீட்டிற்கு ‘இந்து தமிழ்’ நாளிதழ் தான் வரும். கடைத்தெருவுக்குச் சென்ற அப்பா எதேச்சையாக தினத்தந்தி நாளிதழை வாங்கி வந்திருக்கிறார்.

தூய செபஸ்தியார் மேல்நிலைப்பள்ளி, காமேஸ்வரம் கிழக்கு. பட்டதாரி கணித ஆசிரியர் தேவை. தகுதி உள்ளோர்கள் விண்ணப்பிக்கலாம். இதுதான் விளம்பரம். அந்த ஊர் எங்க இருக்கு என்று தெரியவில்லை. நானும் அப்பாவும் தேடிச் சென்றோம். அந்த வேலைக்கு விண்ணப்பித்தேன். அந்தப் பணியும் எனக்கு கிடைத்தது.

முதல் நாள் பணியில் சேர செல்கிறேன் அப்பாவும் உடன் வருகிறார்.

எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் “சார் இந்தப் பணியிடத்துக்கு உள்ளூர்ல கடுமையான போட்டி ‘வாத்தியார் வீட்டு பிள்ளை’ என்பதற்காக மட்டும் தான் உங்க பையனுக்கு இந்த வேலையை கொடுத்தோம்“ என்றார்.

அப்பா கண்களில் நீர் கசிந்திருந்தது. தலைமை ஆசிரியரை எழுந்து நின்று வணங்கினார். அப்பாவின் கைகளைப் பற்றிக் கொண்டார் தலைமையாசிரியர்.

“சின்ன வயசிலிருந்து இதைச் செய் அதைச் செய் என்று நான் அவனை வற்புறுத்தியதில்லை. முதன் முறையாக நான்தான் பி.எட் படிக்க சொன்னேன். வேலை கிடைக்கவில்லை. அவன் போக்கிற்கே விட்டிருக்கலாமோ? தவறாக வழிகாட்டி விட்டோமோ? என்று மன வருத்தத்திலே இருந்தேன். இப்போது என் மகன் ஆசிரியர் ஆகிவிட்டான் இது போதும் எனக்கு”, என்று தழுதழுத்த குரலில் அப்பா பேசினார்.

நான் முதல் மாதம் சம்பளத்தை வாங்கி அப்பாவிடம் கொடுக்க நினைத்தேன். ஆனால் அப்போது அப்பா என்னோடு இல்லை. உண்மையாகவே அப்பா ஒரு நல்ல மேய்ப்பர் தான். ●

சிறுகதை

# பயணம்

## நாணற்காடன்

“நாகர்கோவிலில் கிளம்பி திருவனந்தபுரம், வர்கல சிவகிரி, காயங்குளம், எர்ணாகுளம், திருச்சூர் என கேரள மாநிலம் முழுவதும் ஓடி, பாலக்காடு தொட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், காட்பாடி என தமிழ்நாட்டுப் பகுதிகளுக்குள் திரும்பி, சித்தூர், திருப்பதி, நெல்லூர், பல்சா என ஆந்திர மாநிலத்தில் தவழ்ந்தோடி, புவனேஸ்வர், கட்டாக், பல்சூர் ஆகிய ஒரிஸ்ஸா பகுதிகளைக் கடந்து மேற்கு வங்காளத்தின் ஷாலிமர் நகரத்தை அடையும் குருதேவ் எக்ஸ்பிரஸ் ரயிலில் எனக்கு எதிரில் அமர்ந்திருந்த ஜெய்தேவ் ஷாலிமர் நகரைச் சேர்ந்தவன்.

பால்ராஜ் சஹானி நூலை வாசிக்கலாமென பையைத் திறக்கும் போது இராசிபுரத்தில் அம்மா வறுத்துக் கொடுத்த கடலைக்காய் கைக்குச் சிக்கியது.

முன்னதாகக் குமரியில் இருந்து நாகர்கோவில் ஜங்ஷன் வரை பைசலுடன் பைக் பயணம் புதிய காட்சிகளை, புதிய மனிதர்களை, புதிய திறப்புகளை உருவாக்கியது. சுசீந்திரம் கோயில் வாசல், குளக்கரை மற்றும் அந்த ஒரு மனிதன் ஆகியவை மறக்க முடியாதவைகளாகி விட்டன. (அந்த மனிதன் எனக்கும், கலியன் மற்றும் பைசல் மூவருக்கும் மட்டுமே தெரிந்தவனாக இருந்து விட்டுப் போகட்டும்)

அவ்வப்போது உள்ளங்கையில் தம்பாகு கொட்டி, சுண்ணாம்பு இனுக்கி, தேய்த்துத் தட்டி, உதடு இழுத்து வைத்துக் கொள்பவன் ஜெயதேவ். புகையிலைக்கு ஹிந்தியில் தம்பாகு, சுண்ணாம்புக்கு? பிறகு சொல்லலாம் என்று தோன்றுகிறது.

மிகச் சரியாக 14.45க்குக் கிளம்பிய வண்டி திருவனந்தபுரம் தாண்டிவிட்டது. அதற்கு முன் வரை அங்கங்கே ரப்பர் தோட்டங்கள் தென்பட்டன. அதன்பிறகு ரப்பர் தோட்டங்கள் அவ்வளவாக என் கண்களுக்குத் தென்படவில்லை.

கேரளச் சுவர்களில் எழுதப்பட்டிருந்த மலையாளப் பெயர்களைப் படித்துப் படித்துப் பார்த்து மலையாள எழுத்துகளை நினைவுக்குக் கொண்டு வர முயல்கிறேன். பயணம் நல்லபடியாகத் தொடங்கி விட்டது. நல்லபடியாக நாளை காலை 3.55க்கு சேலத்தில் எனக்கு முடிய வேண்டும் ரயிலின் பயணம் முடியப் போவதில்லை.

கடலைக்காயைத் தொலித்தபடி பால்ராஜ் சஹானி நூலை வாசிக்க விரித்து வைக்கிறேன் கம்பார்ட் மெண்டில் அப்போது அதிகமாகக் கூட்டமில்லை. எதிரில் அமர்ந்திருந்த ஜெய்தேவ் 27 வயது மதிக்கத்தக்க இளைஞன். அவனிடம் கடலைக்காய்ப் பையை நீட்டி எடுத்துக் கொள்ளச் சொன்னேன். எவ்விதத் தயக்கமும் காட்டாமல் ஒரு கைப்பிடி எடுத்துக் கொண்டான் ஜெய்தேவ். தோழர் சி.மகேந்திரன் அவர்களின் நூலறிமுகம், வழக்கறிஞரும் நூலாசிரியருமான கே.சுப்பிரமணியன் அவர்கள் குறித்த அறிமுகம் கடந்து, பால்ராஜ் சஹானி எனும் மகத்தான கலைஞன் குறித்துப் படிக்கத் தொடங்குகிறேன். பால்ராஜ் சஹானி ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனில் ஹிந்தி ஆசிரியராகப் பணிபுரிந்து இருக்கிறார். காந்தியுடனும் இணைந்து பயணம் செய்த அனுபவமும் பால்ராஜ் சஹானிக்கு இருக்கிறது. இப்படியாகப் போகத் தொடங்கிய நுலைச் சட்டென மூடி வைத்துவிட்டேன். பாலங்கள் வழியாகப் புழாக்களைக் கடக்கும் ரயில் வேறு விதமான ஓசையை இசைக்கிறது. அந்த ஓசை நுலைத் தொடர்ந்து படிக்க விடவில்லை. நூலைப் பிறகு படித்துக் கொள்ளலாம் என்று மூடி வைத்தது அத்துணை நல்லதாக ஆகிவிட்டது.

வெளியே வேடிக்கை பார்த்தபடி ஜெயதேவிடம் பேச்சு கொடுக்கத் தொடங்கினேன். ஹிந்தியில் தான் பேசிக் கொண்டோம் இருவரும்.

“உன் பெயரென்ன?”

“ஜெயதேவ்”

“எந்த ஊர்?”

“ஷாலிமர். வண்டி கடைசியா அங்கு தான் நிற்கும்“

“இங்கு என்ன செய்யற?”

“அந்த கிராமம் இருக்கில்ல”

“ஆமா..”

“அங்கே நியூக்ளியர் பவர் ப்ளாண்ட்ல வேலை பார்க்கிறேன்”.

“அஞ்சுகிராமம் பக்கத்துல கூடங்குளம் இருக்கே அங்கேயா?”

“ஆமாமா.. அங்கே தான்.”

வண்டி ஒரு தீவு மாதிரியான பகுதிக்குள் நுழைகிறது. எங்கும் நீர் நிலைகள், நீர் நிலைக்கு நடுநடுவே சதுரம் சதுரமாகக் கட்டப்பட்ட வீடுகள். வீடுகளுக்குப் போக நீள நீளமான தோணிப்படகுகள் அங்கங்கே ஒதுங்கி நிற்கின்றன. ரம்மியமான காட்சிகள், இதுவரை பார்த்திராத புதுமையான காட்சிகள். நல்லவேளை பால்ராஜ் சஹானி நூலை மூடி வைத்து விட்டேன்.

வண்டி ஒரு ரயில் நிலையத்தைக் கடந்து போகிறது. மஞ்சள் போர்டில் கறுப்பு எழுத்துகள் மலையாளத்திலும் ஹிந்தியிலும். இரண்டிலும் படித்துப் பார்க்கிறேன்.

முன்றோட்டுருட்டு.

ரயிலின் வேகத்தில் இப்படித் தான் படிக்க முடிந்தது கூகுளாண்டவரிடம் போய் தேடினேன். Mundrothuruthu என்று ஆங்கிலத்தில் காட்டியது குழப்பம் தீரவில்லை. மறுபடியான தேடலில் மலையாளத்தில் காட்டினார் கூகுளாண்டவர் நன்றி கூகுளாண்டவரே.

மன்றோ துருத்து.

அதைக் கடந்து போகையில் ஒரு புழாவைக் கடக்கும் பாலம் புழாவில் பேருந்தை விடவும் நீளமான நீண்ட படகில் பயணம் செய்யும் மக்கள். இந்தப் பயணம் இப்படியான அழகியலை வழங்கி இருக்கிறது. அது கல்லாடா ஆறு என்று கூகுளாண்டவர் மேலும் விளக்கினார். இந்த மன்றோ துருத்து குறித்து விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு தெரிந்து கொள்வோம். கொல்லம் மாவட்டத்தில் ரயில் விரைந்து கொண்டிருக்க மழைச் சாரல் முகத்தை நனைக்கிறது. அந்தி சாயும் ஆறு மணி. அதுவரை இருந்த வெயில் மட்டுப்பட்டு கறுத்த மேகங்களின் ஆறுதல். நானும் ஜெய்தேவும் ஜன்னல் கதவுகளை இறக்கி விடுகிறோம்.

“கூடங்குளம் ப்ளான்ட்ல நீ என்ன வேலை செய்கிறாய்?”

“கன்ஸ்ட்ரக்சன் ஓர்க்“

“பில்டிங் கட்டுற வேலையா”

“ஆமா.. சென்டரிங் வேலை”

“ஓ.. நீ இங்கே எவ்வளவு நாளா வேலை செய்யற?”

“ஒரு வருசமா”

“இப்ப வேலை முடிஞ்சி ஊருக்குப் போறயா?”

“லீவு போட்டுட்டு ஊருக்குப் போறேன். என் மகளுக்குப் பிறந்தநாள் வருது? அதனால் போறேன். திரும்பி வருவேன்”

“ஓ.. அப்ப இந்த வேலை எப்ப முடியும்?”

“ஆறேழு வருசமா வேலை நடக்குது. இன்னும் ஆறேழு வருசத்துக்கு வேலை இருக்கும்“

இறக்கி விடப்பட்ட ஜன்னல் கதவுகளைத் தாண்டி, ரயிலின் தடக் தடக் சத்தத்தை மீறி சடாரென இடிச் சத்தம் கேட்கிறது. டிக்கெட் பரிசோதகர் பயணிகள் ஒவ்வொருவரிடமும் டிக்கெட் வாங்கிப் பார்த்து விட்டு பேனாவில் இரண்டு கோடுகளை இழுத்து விட்டுத் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அன்ரிஸர்வடு கம்பார்மெண்டில் இனி அவர் வரவே போவதில்லை என்பது அப்போது எனக்குத் தெரியாது.

காயங்குளத்தில் வண்டி நிற்கிறது. நிற்க இடமில்லாத அளவு மக்கள் கூட்டத்தில் நிறைந்து வழியத் தொடங்கியது கம்பார்ட்மெண்ட். இந்தக் கூட்டத்தில் நுழைந்து டிக்கெட் பரிசோதனை செய்ய இனி பரிசோதகர் வாய்ப்பேயில்லை.

என் அருகில் இரண்டு இளம் பெண்கள் நிற்கிறார்கள். ஐ.டி துறையில் வேலை பார்ப்பவர்களாக இருக்கும் என்று நானே நினைத்துக் கொண்டேன். வ்ணடி நகரத் தொடங்கியதும் அவர்களில் ஒருத்தி என்னிடம், "ஈ பண்டி பெங்களூரு ஹோகுதா?" என்று கேட்டாள்.

"சிக்குலார்து" என்றேன் நான்

"நீவு எல்லி ஹோகுதிரி?"

"சேலம்"

"ஓ.. எத்ன கண்ட்டய சேலம் ரீச் மாடாது ட்ரெயின்?"

"நாக்கு கண்ட்டய"

அடடா.. புழக்கத்தில் பேசாமலிருந்த கன்னடம் நாக்கில் வந்து ஒட்டிக் கொண்டதே.

இந்தக் கூட்டத்திற்கு நடுவில் கடலைக்காய் தொலித்துச் சாப்பிட மனம் வரவில்லை. அமர்ந்திருந்த சீட்டு ஓரத்தில் கடலைக்காய் பையை மடித்து வைத்துக் கொண்டேன். பால்ராஜ் சஹானியும் எனது பைக்குள் நுழைந்து உறங்கிப் போனார். மழை விட்டிருந்தது. ஜன்னல்களைத் திறந்தோம் நானும், ஜெய்தேவும்.

"எவ்வளவு சம்பளம்?" என்று கேட்டேன் ஹிந்தியில்தான்.

"பதினைந்தாயிரம்" என்று அவன் பதில் சொன்னதும் ஹிந்தியில்தான்.

உணவு பற்றி விசாரித்தேன்.

"சமைக்க ஆள் இருக்காங்க. மூணு வேளையும் அவர் சமைச்சிடுவார் அதுக்கு மாசம் மூவாயிரம் போயிடும்."

அடுத்து தங்கும் இடம் பற்றியதாக இருந்தன என் கேள்விகள்.

"தங்குவதற்கு கம்பெனி இடம் தந்து இருக்கு. அஞ்சு கிராமத்துல. அதுக்கு பணம் இல்லை. மற்றபடி உணவும் மருத்துவ செலவும் எங்களுடையது"

அவன் எங்களுடையது என ஜெய்தேவ் தன்னுடன் வேலை செய்யும் அனைவரையும் இணைத்துக் கொண்டான்.

மறுபடியும் இடியும் மின்னலும் ஆனால் மழை இல்லை. இருளத் தொடங்கியிருந்தது. காற்றில் மெல்லிய குளிர் நேரமாக ஆக இந்தக் குளிர் கூடிவிடும் என்று நினைத்தேன். ஆனால் சேலம் போய்ச் சேரும் வரை இந்தக் குளிர் கூடவும், குறையவும் இல்லை. திரும்பி விடப்பட்ட வண்டி செங்கண்ணூர் போகாமல் வேறு பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. ஆலப்புழா தாண்டி கொச்சி நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

"ஜெய்தேவ்" உரிமையோடு பெயர் சொல்லி அழைக்க ஆரம்பித்து விட்டேன்.

"ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் வேலை?"

"பன்னிரண்டு மணி நேரம் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை"

"நி என்ன படிச்சிருக்க?"

"அஞ்சாம் வகுப்பு படிச்சிட்டு இருக்கும் போது என் அப்பா இறந்துட்டார். அதோடு சரி.."

"உங்கள் ஷாலிமர்ல என்ன மொழி பேசுவாங்க?"

"பெங்காலி"

"உனக்கு பெங்காலி தெரியுமா?"

"ஏன் தெரியாது, எங்க வீட்டுல, ஊருல பெங்காலிதான் பேசுவோம்."

"ஹிந்தியும் நல்லா பேசறியே"

"ஹிந்தி பேசத் தெரியும் படிக்க எழுதத் தெரியாது"

"பெங்காலி படிக்க எழுதத் தெரியுமா?"

"நல்லா தெரியும்"

ரயில்வே ஆப் இல் ரன்னிங் ஸ்டேடஸ் பார்க்கின்றேன். அது அரை மணிநேரம் தாமதமாக வண்டி போய்க் கொண்டு இருப்பதாகத் தகவல் சொன்னது. ஓ.. 3.55 மணிக்கு சேலம் போய்ச் சேர வேண்டிய வண்டி 4.25 க்கு தான் போய்ச் சேரும் போலிருக்கிறது என்று மனசுக்குள் ஒரு கணக்கு ஓடுகிறது.

கொச்சியில் வண்டி நின்றதும், ஜெய்தேவ் ஒரு அண்டா பிரியாணி வாங்கிப் பிரித்துச் சாப்பிடுகிறான். இன்னும் கூட்டம் ஏறுகிறது மூச்சுத் திணறும் கூட்டம்.

நான் எதுவும் சாப்பிடவில்லை. பசிக்கவும் இல்லை. மதியம் பைசலுடன் வரும்போது சுசீந்திரம் தாண்டி ஆளுக்கொரு இளநீர் குடித்தோம். அதன்பிறகு நான் மட்டும் நாகர்கோவிலில் சோறு சாப்பிட்டேன் பைசல் அப்போது எதுவும் சாப்பிடவில்லை முகாமில் சாப்பிடட்டும் என நானும் விட்டுவிட்டேன்.

எர்ணாகுளத்தில் தேநீர் வாங்கிக் கொடுத்தான் ஜெய்தேவ். நானும் மறுக்காமல் வாங்கிக் கொண்டேன்.

"உங்கள் ஊரில் வேலை கிடைக்காதா?"

"ஒரிசா, பஞ்சாப் ல இருந்தெல்லாம் வெஸ்ட் பெங்கால் ல வந்து வேலை செய்வாங்க. ஆனால் எங்களுக்கு தான் வேலை கிடைக்காது. கிடைச்சாலும் இப்படி நிரந்தரமா சம்பளம் கிடைக்கிற மாதிரி வேலை கிடைக்காது. அந்த மாதிரி வேலை வேண்டும்னா நாலஞ்சு லட்சம் பணம் கொடுக்கணும்."

"ஓ.. ஒரு வருசமா இங்கு இருக்கறயே.. கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசத் தெரியுமா?"

"நஹி நஹி நஹி" சிரித்தபடி சொன்னான்.

சட்டென யோசனை. பைக்குள் இருந்த பால்ராஜ் சஹானியை வெளியே எடுத்து இவரைத் தெரியுமா? என்று கேட்டேன்.

"தெரியல" என்றான்.

இவர் சாந்தி நிகேதனில் ஹிந்தி ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் சினிமா ஹீரோ ஆனவர்.

"ஓ.."

"கொல்கத்தா சினிமால சூப்பர் ஸ்டார் யார் இப்ப?"

"மிடுன் தெரியுமா? ஹிந்தியிலும் நடிப்பார். பெங்காலி படத்திலும் நடிப்பார்"

மிடுன் யாரென்று எனக்குத் தெரியவில்லை.

வண்டி அங்கமாலி தாண்டி போய்க் கொண்டிருக்கிறது. அங்கமாலி டைரிஸ் படத்தைப் பாதி வரை மட்டுமே பார்த்திருப்பது நினைவுக்கு வந்தது. ஊருக்குப் போய் இந்த வாரத்தில் இந்தப் படத்தை முழுமையாகப் பார்த்து விட வேண்டும்.

கடலைக்காயைக் காட்டி, "இதை ஹிந்தியில என்ன சொல்வாங்க?" என்று கேட்டேன்.

"மூங்பலி"

"பெங்காலியில என்ன சொல்வாங்க?"

"பாதாம்"

"பாதாம்?"

"ஆமாம் பாதாம்"

"அதை பெங்காலில எழுதிக் கொடுக்க முடியுமா?"

என் கையில் இருந்த பால்ராஜ் சஹானி நூலை வாங்கி முதல் பக்கத்தில் "பாதாம்" என பெங்காலியில் எழுதிக் கொடுத்தான்.

தூக்கம் என் கண்களைத் தழுவத் தொடங்கியது. அப்படியே அசந்து கண்களை மூடினேன். அரைகுறை தூக்கம் தான் எனினும் கண் இமைகளைத் திறக்க முடியவில்லை. மீண்டும் கண்களைத் திறந்து பார்த்த போது வண்டி ஈரோடு ஜங்ஷனில் நின்று கொண்டிருந்தது. மணி பார்த்தேன். விடியற்காலை 3.45 ஜெய்தேவ் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். தூக்கம் கலைந்து சேலத்தை எதிர் நோக்கிக் கொள்ளத் தொடங்கினேன் நான்.

4.55 க்கு சேலத்தை வண்டி நெருங்கியது. எனது பேக்கை எடுத்துக் கொண்டு ஜெய்தேவை எழுப்பினேன். எனது சீட்டு ஓரத்தில் வைத்திருந்த கடலைக்காய் என்கிற மூங்பலி என்கிற பாதாமை எடுத்து அவனிடம் கொடுத்தேன். மறுக்காமல் வாங்கி தன் சீட்டில் வைத்துக் கொண்டான். அவனது தண்ணீர் பாட்டிலைக் கேட்டு வாங்கி தண்ணீர் குடித்தேன் வண்டி சேலத்தில் கிறீச்சிட்டு நின்றது. இறங்கிக் கொண்டு கை காட்டினேன். சிறு புன்னகையுடன் கை காட்டினான் ஜெய்தேவ்.

மெல்ல நகரத் தொடங்கிய வண்டி பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்த என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

●

கட்டுரை

# நிறப்பிரிகை

சு.இராமசுப்பிரமணியன்



வட்டார வழக்கு என்று சொல்லப்படும் மண்சார் பேச்சுவழக்கு அந்தந்த நிலப்பகுதியைச் சார்ந்திருக்கும். ஒரு வட்டாரத்தில் உள்ள பேச்சுவழக்கு அனைத்து வட்டாரங்களிலும் தெரிந்திருக்கும் என்றோ பயன்பாட்டில் இருக்கும் என்றோ சொல்லமுடியாது. ஆனால் மாணவர்கள் அல்லது வேலை செய்பவர்களைத் திட்டும் போது 'எருமை மாடு' என்று சொல்லித் திட்டுவது தமிழ்நாடு முழுவதற்குமான பயன்பாட்டுச் சொல்லாக உள்ளது. சரியாக படிப்பு வராத மாணவனை எருமை மாடு மேய்க்கப்போ என்று ஆசிரியர்களும் அவர்கள் பங்கிற்குத் திட்டுவது வழக்கம்.

ஏன் எருமை மாடு என்று திட்டுகிறார்கள்? அப்படித் திட்டுபவர்களுக்கு எருமை மாட்டைப்பற்றி என்ன தெரியும்? அவ்வளவு ஏன்? மாடுகளைப் பற்றி என்ன தெரிந்திருக்க முடியும்? அப்படி எதுவுமே தெரியாமல் எருமை மாடு என்று திட்டுவதன் உளவியல் என்ன? இப்படியெல்லாம் என்னைக் கேள்விகேட்க வைத்த ஒன்றாகத் தான் எருமை மாடு வசைச்சொல்லைப் பார்க்கிறேன்.

எங்கள் ஊரில் (சிவந்திபுரம், அம்பாசமுத்திரம்) ஓடும் தாமிரபரணி ஆறு 20 அடிக்கும் மேலான ஆழம் கொண்டது. மாத்திரமல்ல, அகலமும் அதிகம். மாடுகளை மேய்ப்பதற்கு ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்வது வழக்கம். மாடுகளை ஆற்றில் இறக்கிவிட்டு நாங்கள் தோணியில் செல்வோம். சில நாட்கள் தோணி எதிர்க்கரையில் இருக்கும் யாராவது வந்தால் தான் தோணி இக்கரைக்கு வரும் அதுவரையிலும் காத்திருக்க முடியாது. காரணம், அக்கரை முழுவதும் நெல் பாசனம். அதனால் நாங்கள் மாடுகளுடன் ஆற்றைக் கடப்போம். அப்போது ஒரு தந்திரம் செய்வோம். எங்கள் தலையை தண்ணீருக்கு மேல் வைத்துக் கொண்டு மாட்டு வாலின் அடிப்பகுதியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வோம். நீச்சல் அடித்துக் களைத்துப் போகாமல் மாடுகளுடன் எளிதில் ஆற்றைக் கடந்து விடலாம்.

அப்படி ஒருநாள் ஓர் எருமையின் அடிவாலைப் பிடித்துக் கொண்டு ஆற்றைக் கடந்து கொண்டிருந்தேன். சரியாக நடு ஆறு

வந்ததும் எருமை தண்ணீருக்குள் மூழ்கியது. கீழேகீழே சென்றது. எனக்கு நன்றாக நீச்சல் தெரியும் என்பதால் மீதி ஆற்றை நீந்திக் கடந்து சென்றேன். தண்ணீருக்குள் மூழ்கிய எருமை மறுகரையில் வந்து தான் தண்ணீருக்கு மேல் எழுந்தது. நாங்களும் இப்படி நீந்துவோம். அதற்குப் பெயர் 'முங்கு நீச்சல்'. ஆனால் எருமை மாதிரி மூச்சடக்கி பாதி ஆற்றைக் கடக்க மனிதர்களால் முடியாது. பசுமாடோ, காளைமாடோ இப்படி ஒருபோதும் செய்ததில்லை. அவற்றால் அப்படிச் செய்யவும் முடியாது.

வழக்கமாக மாடு மேய்க்கும் சிறுவர்கள் பசு அல்லது காளை மாட்டின் அடிவாலைப் பிடித்துக் கொண்டு ஆற்றைக் கடப்பதைப் பார்த்திருக்கிறேன். அது ஏன் என்பது அன்றுதான் எனக்குப் புரிந்தது. இதனைச் சொல்வதற்குக் காரணம் மாடுகளின் இயல்பைத் தெரிந்து கொள்ளாமலேயேத் தான் பெரும்பாலானவர்கள் பேசுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கே (அறிவில் லாமலா, எருமை நடு ஆற்றில் மூழ்கியிருக்கும்?)

'எருமை மாட்டின் மீது மழை பெய்தாற்போல" என்றொரு பழமொழி உண்டு. காரணம் எவ்வளவு மழை பெய்தாலும் எருமை மாடுகள் தாங்கும் அதே வேளையில் பசுமாடுகள் சிறு மழைச்சாரல் விழுந்தாலும் தாங்கமாட்டாமல் மறைவிடம் நோக்கி ஓடிவிடும். இந்தக் குணத்தால் பசுமாடுகள் எருமைகளைவிட உயர்ந்தனவாக பார்க்கப்படுகின்றனவா என்னும் கேள்வியும் எழத்தான் செய்கிறது.

உண்மையில் எருமைகள் மழை தாங்கும். ஆனால் வெயில் தாங்காது. அதனால் தான் கோடைக் காலத்தில் நண்பகலில் எருமை மாடுகள் ஆறு, குளம், குட்டை என்று நீர்நிலைகளைத் தேடிச் சென்றுவிடும். ஆளு, சேறு என்னும் பாகுபாடெல்லாம் மனிதர்களுக்கானது. அதனை மாட்டின் மேல் ஏற்றிப் பார்ப்பது சரியாக இருக்காது. வெயிலும், வெப்பமும் நிறைந்த மதியப் பொழுதில் நீர்நிலைகள் அருகில் இல்லையென்றால் ஆலமரம் போன்ற பெருமரங்கள் தரும் அடர்த்தியான நிழலில் எருமைகள் ஓய்வெடுக்கும்.

**'வைகு புலர் விடியல்' மை புலம் பரப்ப**

*– அகநானூறு பாடல் 41, வரி 1)*

பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றத் தலைவன் அதிகாலையில் கண்விழித்த போது, தலைவியின் ஊரில் மங்கலகரமான காலைப் பொழுதில் தலைவி மட்டும் தனது பிரிவால் வாடி வதங்கியிருப்பாளே என்று தனக்குள் எண்ணிப் பார்க்கும் காட்சிகளைக் கொண்ட பாடல்.

'மை' என்றால் எருமை. இருள் அகன்று, பொழுது புலரும் அதிகாலைப் பொழுதிலேயே எருமை மாடுகள் தொழுவத்திலிருந்து அவிழ்த்துவிடப்பட்டு மேய்ச்சலுக்காகப் புல்வெளிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன என்பது இந்த அகநானூற்றுப் பாடலின் முதல் வரி சொல்லும் செய்தியாக உள்ளது. எருமைகளால் வெயில் தாங்கமுடியாது என்பதனால் தான் அவை பொழுது புலரும் இளங்காலை வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பப்பட்டன என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது. அது, அன்றைய தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வையும் புலப்படுத்துகிறது.

மற்றொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும். மழைதாங்காத பசுமாடுகள் எவ்வளவு வெயில் அடித்தாலும் தாங்கும். பசு மாட்டின் மேல் வெயில் அடித்தாற்போல என்று ஒரு பழமொழி ஏன் இல்லாமல் போனது என்பதும் சிந்தனைக்குரியது தான். ஆயிரம் நாள் பாவத்தைத் தாங்கலாம். ஒரு நாள் புண்ணியத்தைத் தாங்க முடியாது என்று வெயிலையும், மழையையும் சுட்டி, அம்மா சொல்லும் பொருத்தமான ஒரு சொலவடை நினைவுக்கு வருகிறது.

சங்ககாலத்தில் பசுக்கள் ஒருவரின் செல்வத்தை வெளிப்படுத்தும் சொத்தாக இருந்திருக்கின்றன. காரணம் அவை தரும் பாலும், பாலிலிருந்துப் பெறப்படும் தயிர், மோர், வெண்ணை, நெய் ஆகிய உணவுப் பொருட்களும் ஆகும். ஆநிரை கவர்தலும் மீட்டலும், அவற்றின் காரணமாக மோதல்களும் நிகழ்ந்திருக்கின்றன.

பெரும்பாணாற்றுப் படையில், முல்லைநிலத்து ஆயர்குடியின் விருந்தோம்பல் பற்றிய குறிப்பு வருகிறது.

**“அளவிலை உணவிற் கிளையுட னருத்தி**
**நெய்விலைக் கட்டி பசும்பொன்கொள்ளாள்**
**எருமை நல்லார் கருநாகு பெரூஉம்**
**மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்**
**இருள்கிளை ஞெண்டின் சிறுவார்ப் பன்ன**
**பசுந்தினை மூரல் பாலொடும் பெருகுளிர்**

– பெரும்பாணாற்றுப்படை
வரிகள், 163–168

‘ஆயர்குடிப்பெண் நெய் விற்றாள்’ அதற்கு விலையாக கட்டித்தங்கம் தரப்படுகிறது அதனை வேண்டாம் என்று மறுக்கும் அப்பெண் பால் தரும் பசுக்கன்றுகளையும், எருமைக்கன்றுகளையும் ஈடாகப் பெறுகிறாள் என்னும் குறிப்பு இப்பாடலில் உள்ளது. எனில், சங்க சங்க காலத்தில் பசு X எருமை என்னும் பாகுபாடு பெரிய அளவில் இருந்ததாகத் தெரியவில்லை.

பால் தருவதனால் மட்டுமே பசுக்கள் உயர்வாகக் கருதப்பட்டனவா? எருமைகள் பால் தரவில்லையா? என்பதும் அவற்றின் பாலில் தயிர், மோர், வெண்ணை, நெய் போன்ற உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லையா? என்னும் கேள்வியும் இயல்பாகவே எழும்.

இக்கேள்விக்கானப் பதிலை அறிந்து கொள்வதற்கு, கொஞ்சம் அறிவியலும் மனிதர்களின் வரலாறும் தேவைப்படுகிறது.

காடோடியாகத் திரிந்து கொண்டிருந்த மனிதன் வேட்டையை விட்டு விட்டு ஓரிடத்தில் தங்கி வேளாண்மைத் தொழில் செய்ய ஆரம்பித்த பிறகு நாய், குதிரை, ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வீட்டில் வளர்க்கவும், ஆடு, மாடு, தரும் பாலை உணவாகப் பயன்படுத்தவும் ஆரம்பித்தான். ஆனால் பாலானது அப்படி ஒன்றும் உடனடியாக மனிதனின் உடலுக்கு ஒத்துப்போகும் உணவாக இருக்கவில்லை. மாறாக ஒவ்வாமையையே தந்தது. பாலானது மனிதனின் உணவாக மாறிய பிறகும் அது மனிதனின் உடம்புக்கு ஒத்துப்போவதற்கு 11,000 ஆண்டுகள் தேவைப்பட்டதாக வரலாற்று அறிஞர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சங்க காலத்திற்கும் நமது காலத்திற்கும் இடையில் 2000 ஆண்டுகள் இடைவெளி உள்ளதையும் மனதில் நிறுத்தி எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றும் கூட, பொதுவாகவே பால் மனிதர்களுக்கு ஏற்புடையதாக இல்லை உணவில் குறைத்துக் கொள்ள வேண்டிய மூன்று வெள்ளைப் பிசாசுகளில் (White Devils) பாலும் ஒன்று, (உப்பும், வெள்ளை சர்க்கரையும் மற்ற இரண்டு), அவற்றிலும் எருமைப்பாலின் அடர்த்தி பசும்பாலின் அடர்த்தியைவிடவும் அதிகம். பசும்பாலில் இருக்கும் கொழுப்பைவிட எருமைப் பாலில் இருக்கும் கொழுப்பு அதிகம். வேறுவகையில் சொல்வதென்றால் எருமைப்பால் மற்றும் அதன் துணைப் பொருட்களை விடவும் பசும்பால் மனித உடன்பிற்குக் கூடுதல் ஏற்புடையதாக இருந்திருக்க வேண்டும்.

எனது இளமைக்காலங்களில் (70–களில்) எங்கள் ஊர்களில் பசும்பால் விலை அதிகமாகவும், எருமைப்பால் விலை குறைவாகவும் இருந்தது. எளிதில் செரித்துவிடும் என்பதாலும், அதன் பொருட்டு குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் ஏற்ற உணவாகக் கருதப்பட்டதாலும் பசும்பாலின் விலை அதிகமாக இருந்தது. அதே காலகட்டத்தில் படிப்பு முடிந்து வேலை கிடைத்து சென்னை மாநிலக் கல்லூரியில் பணியில் சேர்ந்த போது சென்னை திருவல்லிக்கேணியில் தங்கியிருந்தேன். அப்போது நான் தெரிந்து கொண்ட ஒரு செய்தி சென்னையில் பசும்பாலை விடவும் எருமைப்பால் விலை அதிகமாக இருந்தது. ஒரு லிட்டர் எருமைப்பாலில் 15 கோப்பைகள் காப்பிப் போடமுடியும் என்று அதற்கான காரணத்தையும் சொன்னார்கள்.

ஆக, இதே தமிழ்நாட்டில் ஒரே காலகட்டத்தில் பட்டிக்காட்டில் பசும்பால் விலை அதிகமாகவும் பட்டணத்தில் எருமைப்பால் விலை அதகிமாகவும் இருந்தது. இப்போதெல்லாம் பாக்கெட் பால் அதில் இருப்பது பசும்பாலா எருமைப்பாலா கள்ளிப்பாலா என்றெல்லாம் பிரித்தறிய முடியாது.

பால் தவிர்த்தப் பயன்பாட்டிற்கு வருவோம். காளை மாடுகளைப் போலவே வேளாண் பணிகளில் உழவுக்கும் பிணையல் அடிப்பதற்கும் எருமைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

**“கயிறு இடு கதச் சேப் போல”** – என்னும் 36–வது அகநானூற்றுப் பாடல் வரி, எருமைகள் வண்டி இழுப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன என்பதைத் தெரிவிக்கிறது.

கதச்சேய்–கதம்+செய் சினமுடைய எருது

கயிறு இடு – மூக்கில் கயிறு கட்டிய

மூக்கணாங்கயிறு கட்டப்பட்ட சினம்கொண்ட எருது என்று பொருள்படும். பயன்பாட்டில் பசுக்களும், எருமைகளும் சமமாக இருந்தும், பசு உயர்வாகவும் எருமைத் தாழ்வாகவும் கருதப்பட்டதற்கு அவற்றின் தோலின் நிறவேறுபாடுகளே கூடுதல் காரணம் என்று கருத நிறையவே வாய்ப்புண்டு காரணம் மனிதர்களும் கூட அப்படித்தான் தோலின் நிறம்சார்ந்து மேல் X கீழ் என்று வகைப்படுத்தப்பட்டனர்.

**மனிதர்களின் தோல் நிறம் சார்ந்த பிளவுகள்**

18 – ஆம் நூற்றாண்டில் மாந்தவியலாளர்களாலும் (anthropologists) தத்துவவாதிகளாலும் (Philosephers), வாழ்விடம் (Location) மற்றும் தோலின் நிறம் போன்று பாரம்பரிய உடற்கூறுகளை (anatomy) வைத்து மக்களை வகைப்படுத்தும் கருத்தியல் உருவாக்கப்பட்டது. அது மனிதர்களில் பல தனித்தனி இனங்கள் (Race) இருப்பதாகவும் அவற்றிற்கிடையேயான வேறுபாட்டிற்கு உடற்கூறுகளே அடிப்படையானது என்னும் கருத்தியலுக்கு இட்டுச்சென்றது.

இப்படிப்பட்ட ‘இனம்‘ பற்றிய தவறான புரிதல்கள் மனிதர்களிடையே ஏற்றதாழ்வுகள் ஏற்படவும் காரணமாயிற்று. உலக அளவில் மனிதர்களிடையேயான சமநிலையை அது குலைத்துப்போட்டது. சில இனங்கள் உயர்ந்தவை வேறுசில இனங்கள் தாழ்ந்தவை என்னும் தவறான கருத்தியலுக்கும் இட்டுச் சென்றது.

அதனால் பெரிதும் பயனடைந்தவர்கள் ஐரோப்பியர்கள் அவர்களது வெள்ளைத்தோல் காரணமாக அவர்கள் உயர்ந்தவர்கள் என்னும் எண்ணம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது. அத்தோடு அது நிற்கவில்லை கருப்புத் தோலை உடையவர்கள் கீழானவர்கள் என்னும் கருத்தியலுக்கு இட்டச் சென்றதால் நீக்ரோக்களை அடிமைப்படுத்தவும் செய்தது.

**வைதீக சமயமும், எருமை மாடுகளும்**

“நீண்ட காலமாகத் தமிழகக் கோயில்களில், பசு, எருமை, ஆடு ஆகியவற்றின் நெய் ‘நந்தா விளக்கு’ எரிக்கப்பயன்பட்டிருக்கிறது. இதற்கு மாறாக, வைதீக சமயத்தில் பசு மட்டுமே புனிதமானதாகக் கருதப்பட்டது. எனவே வைதீக சமயத்தின் இடையீட்டிற்குப் பிறகு தான் அதுவரையிலும் பயன்படுத்தப்பட்டு வந்த எருமை, ஆடு ஆகியவற்றின் நெய் கோயில்களின் புனிதத்தைக் காப்பதற்காகக் கோயில்களின் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டது. அவற்றிற்குப் பதிலாக விளக்கெரிக்க தாவர எண்ணை பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதன் காரணமாக ஆட்டு நெய் என்பது தமிழர்களின் பயன்பாட்டில் இருந்தது என்னும் செய்தியே மறைக்கப்பட்டுவிட்டது. எருமை நெய், பசு நெய்யை விடவும் தாழ்வானது என்னும் எண்ணம் தமிழக மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியனின் ‘பிராமண போஜனமும் சட்டிச்சோறும்‘ என்னும் நூலிலிருந்து.

சங்க காலத்தில் பசுக்கள் செல்வமாகப் பார்க்கப்பட்டனவே தவிர, அவை புனிதமாகப் பார்க்கப்படவில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பசுக்களைக் கொன்று அவற்றின் கொழுப்பைத் தின்றதற்கான சான்று ஒரு அகநானூற்றுப் பாடலில் உள்ளது.

**“கலங்குமுளைச் சீரூர் கைதலை வைப்ப**
**கொழுப்புஆ தின்ற கூர்ம்படை மறவர்”**

–(அகம், பாடம் 129, வரிகள் 11, 12)

ஆக, வைதீக சமயத்தின் இடையீட்டிற்குப் பிறகே, பசு புனிதமாக்கப்பட்டிருக்கிறது என்பதும், அதன் காரணமாக எருமைத் தாழ்வானது என்னும் கருத்தியல் உருவாகியிருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

**கருப்பில் வெளுப்பு**

பூமியின் வடபாதியில், நிலநடுக் கோட்டிற்கு அருகில் இருக்கும் நாம் அதிக அளவில் சூரியக் கதிர்களைப் பெறுவதால் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தைக் குறைப்பதற்காக நமதுத் தோலின் நிறம் இயல்பாகவே கருப்பாக உள்ளது. அது, அறிவியல், புவியியல் அடிப்படையிலானது. நாம் அனைவருமே கருப்பு நிறம் தான். வெள்ளையன் நம்மை அதிகாரம் கொண்டு நீண்ட காலம் அடக்கி ஆண்டதால் அல்லது ஆரியர்கள் கடவுள் சடங்கு போன்ற தந்திரங்களால் நம்மை அடிமைப்படுத்தியதால் வெள்ளைத்தோல் உள்ளவர்கள் உயர்ந்தவர்கள் என்னும் அடிமைப்புத்தி நமக்கு வந்திருக்கக் கூடும்.

அதன் விளைவாக ‘கருப்பர்களாகிய நமக்குள்ளும்‘ கொஞ்சம் வெளுத்தத் தோல் (சிவப்பு என்பது பேச்சுவழக்கு) உடையவர்களை மேலானவர்களாகவும் அழகானவர்களாகவும், அறிவுடையவர் களாகவும் பார்க்கும் பொதுப்புத்தியும் உருவாகியிருக்கக் கூடும். கருப்பு மாப்பிள்ளைக்குச் சிவப்புப் பெண்ணைத் தேடி அலைவதும் கருப்புப் பெண்ணுக்குச் சிவப்பு மாப்பிள்ளையைத் தேடி அலைவதும் வெள்ளைத்தோல் அழகானது உயர்வானது என்னும் போலிப் புரிதல்கள் காரணமாகவே உருவாகிற நடைமுறைகள் ஆகும்.

தோலின் நிறத்திற்கும் மனிதர்களின் பண்பிற்கும் எந்தவிதமானத் தொடர்பும் இல்லை என்பது அறிவியல் கூறும் உண்மை.

திரைப்பட நாயகன் கருப்பாக இருந்ததால் கருப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு என்று நாயகி பாடும் பாடல் வெற்றிபெறுகிறது. ஆனாலும் பாருங்கள் நம் தமிழ்த்திரைப்படங்களில் நாயகிகள் அனைவருமே வெளுத்தத் தோலுடையவர்களாகவே இருக்கிறார்கள். அதற்காகவே அப்படிப்பட்ட கோதுமை நாயகிகள் வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறார்கள். காரணம், கருப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு என்று எந்த நாயகனும் பாடமாட்டான். அதனால் அது நாயகிகளுக்குப் பொருந்தாது.

நாயகி கருப்பு என்பதனால் வெறுத்து ஒதுக்கப்பட்டதாலேயே, கருப்புநிறக் கண்ணனிடம் (கருப்பாக இருந்தாலும் கடவுள் ஆயிற்றே) முறையீடு செய்கிறாள்,

ஒரு பெண்,

**“கண்ணா கருமை நிறக்கண்ணா**
**உன்னைக் காணாத கண் இல்லையே**
**உன்னை மறுப்பாரில்லை, கண்டு**
**வெறுப்பாரில்லை**
**என்னைக் கண்டாலும் பொறுப்பாரில்லை”**

– கவிஞர் கண்ணதாசன்
(பாடல் ‘நானும் ஒரு பெண்’)

இதைவிடவும் எளிமையாக யார் தான் சொல்லிவிட முடியும்?

மனிதர்களிடம் காணப்படும் இப்படிப் பட்டத் தோலின் நிறப்பாகுபாடு தான் (நிறப்பிரிகை) அவர்கள் வளர்க்கும் மாடுகளிடமும் வெளிப்பட்டிருக்க வேண்டும். கருப்பு நிறம் கொண்ட எருமைத் தாழ்ந்தது. வெள்ளைத் தோலுடையப் பசு உயர்ந்தது என்னும் உளவியலாக மாறியிருக்கக்கூடும் ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுவது போல வைதீக சமயத்தின் தலையீடும், அது கட்டமைத்த பசு புனிதமானது, எருமை புனிதமற்றது என்னும் அறமற்ற மதக்கூறும் கூடுதல் காரணம் எனலாம். அதுவே மனிதர்களைத் திட்டும் ‘எருமை மாடு’ என்னும் வசைச் சொல்லாக மாறியிருக்க வேண்டும்.

சிந்திக்கத் தெரிந்த மனித வாழ்வில் நிறம் அல்ல, அறம் மட்டுமே உயர்ந்தது, சிறந்தது. ●

## அன்பான வேண்டுகோள்!

**கண்ணாமூச்சிக்கான ஆண்டுக்கட்டணம் சென்ற இதழோடு நிறைவடைந்தவர்கள் தாங்களாகவே ஆண்டுக் கட்டணத்தைப் புதிப்பித்து கண்ணாமூச்சி ஆட்டத்தில் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.**

**- கண்ணாமூச்சி**

கட்டுரை

# அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா!

## க.தங்கபாபு

"அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பா என்பார்கள்!" எங்கள் ஊர் கிராமங்களில். மேலாட்டமாகப் பார்த்தால் சிரிப்பு சொலவடையாக அது தெரிந்தாலும் ஒரு உறவு முறையையே மாற்றி விடும் வல்லமை மீசைக்குத் தான் உண்டு.

சின்ன வயதிலிருந்தே நானொரு மீசைப் பிரியன். பூனைகளின் மீசைகளைக் கூட பார்த்து மலைத்து ரசித்ததுண்டு, கிண்ணத்தில் வைத்த பாலை அருந்தி விட்டு மீசையில் ஒட்டியிருக்கும் பாலை நாவால் சுழற்றியபடி ஒற்றியெடுக்கும் பூனைகளின் லாவகமே... பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு கவிதை ரகம் தான்.

மீசைகளில் தான் எத்தனை எத்தனை வகைகள்.. பென்சிலால் கோடு போட்ட மாதிரி மெலிசான மீசை. இரண்டு உதடுகளையும் மறைக்கும் அளவுக்கான அடர் மீசை, கிருதாவோடு தாடி இணைந்த கூட்டணி மீசை, பாரதிதாசன், ஹிட்லர், சார்லி சாப்ளின் வகையறா செவ்வக வடிவிலான கணித மீசை ஒரு எலுமிச்சை பழத்தை குத்தி வைக்கும் அளவிற்கு மேல் நோக்கிய கூர் மீசை, புலி வால் மீசை, எலி வால் மீசை... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

சின்ன வயசுல மகாகவி பாரதியாரோட படத்தைப் பார்க்குறப்பல்லாம்... அவரு மாதிரி கவிதை எழுதனும்னு தோணிச்சோ இல்லையோ அவரு மாதிரி மீசை வளர்க்கணும்னு தோனிருக்கு. கம்பீரம் கொப்பளிக்கும் இரட்டைமலை சீனிவாசனின் அடர்த்தியான கூர் மீசை, உதடுகளை ஒளிச்சி வச்ச ம.பொ.சி.மீசை, சோவியத் யூனியன் ஜோசப் ஸ்டாலினின் நேர்த்தியான கம்பீரமான முறுக்கி விடப்பட்ட மீசை புலவர் புலமைப் பித்தனின் கரு'மை' சுமக்காத வெண்மை மீசை, கவிஞர் வைரமுத்துவின் "கரு...



கரு.." அடர்மீசை, திருமாவளவனின் கருப்பும், வெளுப்பும் கலந்த அசல் மீசை இப்படியான மீசைகளால் கவரப்பட்டவர்களுள் நானும் ஒருவன்.

நிச்சயம் பெரியவனாகி மீசை வளர்க்கனும்னு தோணிச்சே தவிர இந்த வகை மீசைதான்னு ஒரு குறிக்கோள், லட்சியம்(!?) எல்லாம் அப்போது இல்லை. ஆசைப்பட்டதெல்லாம் உடனே நடந்திடவாப்போகுது? ஒரு ஜென் துறவியின் அதீத நிதானத்தோடு தான் எனக்கு மீசையே வளர ஆரம்பிச்சது இதுல சாமி கும்பிடும் போதெல்லாம், "சாமி.. எனக்கு படிப்பு நல்லா வரணும்னு வேண்டாமல், சாமி, எனக்கு நல்லா அடர்த்தியா மீசை வளரணும்னு.." உலகத்துலேயே வித்தியாசமா வேண்டுன ஒருத்தன் நானாத்தான் இருப்பேன் போல. பதின் பருவ வயதுகளில் கண்ணாடிகளின் முன் நெருங்கி நின்று வலை வீசி தேடாத குறையாக என் மீசையைத் தேடியதும் உண்டு.

சரியா இருபத்தி இரண்டரை வயசுல அரசாங்க வாத்தியார் வேலை. எங்க நம்மளயும் பசங்க ஸ்டூடண்டா நெனச்சிடுவாய்ங்களோன்னு பயம் வேற. அப்பல்லாம் மீசைக்கு நைட்ல தேங்காய் எண்ணெய் தடவாமல் படுத்த இரவுகள் பெரும்பாலும் இல்லை. மேலும் எண்ணெய்க்கு எறும்பு மொய்த்து விடுமோ எனும் மெல்லிய பயம் வேறு.

கமல், கார்த்திக் ரசிகனான நான் களத்தூர் கண்ணம்மாவில் கமலையும், அலைகள் ஓய்வதில்லையில் கார்த்திக்கையும் ரசிச்ச எனக்கு, மீசையில்லாமல் கமல் நடிச்ச பேசும் படம், கொஞ்ச நேரக் காட்சிகளில் கோபுர வாசலிலே படத்துல சில நிமிடங்கள் மீசையில்லாமல் பஸ் ஸ்டாப்பில் நிற்கும் பானுப்பிரியாவை குறுக்கும், நெடுக்குமாக நடந்து கரெக்ட் பண்ண செய்யும் அலப்பறைகளைப் பார்த்து தியேட்டரே பார்த்து சிரித்துக் கொண்டிருந்த போது எனக்கு மட்டும் அழுகையே வந்ததுண்டு.

கோபுரவாசலிலே கார்த்திக்கும் மீசையில்லாமல் என்னை கலங்க வச்சதை கமலின் தேவர் மகன் மீசையும், கார்த்திக்கின் பொன்னுமணி மீசையும் பின்னாளில் என்னை ஆசுவாசப்படுத்தின. அந்த அளவிற்கு நான் மீசைப் பிரியன் என்பதை விட மீசைகளின் வெறியன்.

சினிமாவுல எனக்குத் தெரிஞ்சி மீசையில செம வெரைட்டீஸ் காமிச்ச ஆளு நம்ம வடிவேலு தான். அதுல அவரை மிஞ்ச ஹாலிவுட் ரேஞ்சிலும் ஆளில்லை. அதிலும் 23 ம் புலிகேசி செம்ம வெரைட்டி ரகம் தூங்கும் காவலாளி மூக்கில் வடிவேலு தனது கூர் மீசையை விடும் காட்சிகளைப் பார்க்கும் போது, சிரிப்போடு சேர்ந்து நமக்கு தும்மலும் வந்து விடும்.

மூக்கு அடி நுனிக்கும் மேல் உதட்டு ஆரம்பத்திற்குமான அகலம் அதிகம் இருந்தா அந்த ஆளுங்களோட மீசையே ஒரு அம்சமாத்தான் இருக்கும். அந்த வகைக்குள்ள மம்முட்டி, மோகன்லால், தலைவாசல் விஜய், சீமான், இவங்களோட மீசை ஒரு ஸ்பெஷாலி(ஸ்)ட்'டி'யானது தான்.

'கண்களின் மீசை புருவம். உதட்டின் புருவம் மீசை!'ன்னு மீசை மேல் மேல உள்ள ஆசையால இப்படி கவிதை எழுதுன காலம் கூட அடர்த்தியா கருகருன்னு மீசை மாதிரியே மனசுக்குள்ள இன்றும் இருக்கு.

நான் வேண்டிய தெய்வங்கள் என்னைக் கைவிடல போல எனக்கும் "கரு... கரு" அடர் மீசை. கண்ணாடி முன் நின்று நான் முதலில் ரசிக்கிறதே என் மீசை தான். என் மீசையில் வெரைட்டி காட்ட முடியாத அளவிற்கு பால் வடியும் முகம்( ? ) என்பதால் எவ்வித முறுக்கலோ, கிருதா இணைப்புக்கோ முயற்சித்ததில்லை. மழுமழு வென ஷேவ் சய்யப்பட்டு "கருகரு" வென இருக்கும் என் மீசை மீது எனக்கும் எப்போதும் ஒரு காதல், கிக் உண்டு.

அதற்கும் ஒரு நேரத்தில் ஆப்பு வந்தது எனக்கு. இதய அறுவை சிகிச்சைக்காக என் கருகரு மீசை இழக்க வேண்டியிருந்தது. மருத்துவ மனையில் நெல் அறுவடை செய்யும் இயந்திரம் கணக்காய் "டிரம்பர் மெஷின் ஓடிக் கொண்டிருந்தது என் ஆசையான, உயிரான மீசை மீது. அப்படியே யாரும் அறியாத கானல் நீரென என் கண்ணீரும் கண்ணாடி முன் நின்று என் முகம் பார்க்கவே பயமாய் இருந்தது. முதலில் பார்ப்பதே என் மீசையைத் தான். அந்த என் முகத்தின் "முதலும்" போச்சே எனும் பதட்டம் ஒருவழியாய் மனதை தேற்றிக் கொண்டு, கண்ணாடியில் பார்த்தேன். என் தாய்மாமன் குணசேகரன் தெரிந்தார் அவர் எப்போதும் மழுமழுவென மீசையை தினசரி ஷேவ் செய்பவர்.

உடனே ஒரு செல்பி எடுத்து, "யோவ் சேகர் மாமா.. இத்தன நாளும் என் மீசைக்குள்ளயா ஒளிஞ்சிருந்தியா ? !" எனும் வரிகளுடன் பகிரியில் பகிர்ந்தேன் அவரும் மகிழ்ந்தார்.

சாதி ஆதிக்கத்தின் அடையாளமாக, திமிர்த்தனத்தின் முகவரியாக, ஆணாதிக்கத்தின் குறியீடாக கருதுபவர்களைப் பார்த்து நொந்து போய் கவிதையொன்றின் வரிகளில் கவிஞர் ஆதவன் தீட்சண்யா "மீசை என்பது வெறும் மயிர்!" என சாட்டை சுழட்டியிருப்பார்.

மேற்கண்ட எந்த ஒன்றின் அடையாளமாகவோ முகவரியாகவோ, குறியீடாகவோ கருதாது, ஆண் அழகியலின் குறியீடாக கருதும் என் போன்றவர்களுக்கு மீசை என்பது எப்போதுமே பெரும் உயிர் தான்.

●

சிறுகதை

# தோழர்

## த.ரெ.தமிழ்மணி

"கடைசி நேரத்துல மாநாட்டுக்குத் தடை விதிப்பாங்கன்னு நெனச்சுகூடப் பார்க்கல" புலம்பினார் இளமுருகு.

"செஞ்ச வேலையெல்லாம் வீணாக போயிடுமா அண்ணே?" வருத்தமாய்க் கேட்டான் வண்டி ஓட்டிக் கொண்டிருந்த செந்தில்.

"ச்சேச்சே வழக்கறிஞர வச்சி பேசிக்கலாம். இல்லேன்னா நீதிமன்றம் போயிடலாம். எப்படியோ மாநாடு திட்டமிட்டபடி நடக்கும்"

செந்தில் அணிந்திருந்த தலைக்கவசத்தில் மோதி விடாமல் விலகியபடி பதில் சொன்னார்.

"தோழர் சுசாராவை காவல் நிலையத்துக்கு வரச் சொல்லிட்டியா?"

"காலையிலே பேசிட்டேன். வந்துடுறேன்னு சொன்னாங்க. ஆனா மறுபடி நாலஞ்சு தடவ அடிச்சுப் பார்த்தேன் எடுக்கல. காவல் நிலையத்துக்கு வரத் தயங்குறாரோ?" ஒரு வண்டு நச்சென்று மோதிப் பறந்தது.

"அவரு அப்படியெல்லாம் கிடையாது. விசாரணை காலத்துலயே பத்தாண்டு சிறை இருந்தவரு. அதற்குப் பிறகும் தளராமல் களவேலைகள்ல முன் நிக்கறவரு. அவரைப் போய் இப்படி நெனச்சிட்டியே... நீ அமைப்புக்கு புதுசுல்ல? அதுதான் இப்படி கேக்குற?" விசனப்பட்டார்.

"சரிண்ணே... ஒரு தடவையாவது எடுத்து பேசியிருக்கலாம்ல?" திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"இல்ல தம்பி! அவரோட தன்னிழப்பைப் பத்தி சொன்னா உனக்குப் புரியல. எதுக்கும் தோழர் வீட்டுக்கு வண்டியவுடு. ஒரு எட்டு போயி பாத்துட்டு வந்திடலாம்" அதன் பின் அவன் எதுவும் கேட்கவில்லை. இவர் எதுவும் சொல்லவில்லை.

வண்டி வேகமெடுத்தது இடையிடையே வாய்க்காலே இல்லாத இடத்தில் பாலம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அங்கெல்லாம் போடப்பட்ட மாற்றுச் சாலையில் நைய்ப்பு காயாத பொருக்கில் வழுக்கி நிதானித்து பிறகு வண்டியின் ஓட்டம் சீரானது. பச்சைக் குடையைப்போல தோற்றமளித்த சாலையோரம் பெரு மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு அது மாரமல்லாக்கக் கிடந்தன.

"தம்பி! கொஞ்சம் மெதுவா போ... அந்த வேகத்தடைக்கு அடுத்த, வலப்பக்க சந்துல திரும்பு"

சொன்னவாறு வேகம் குறைத்துச் சந்தில் திரும்பினான். அதுவரை ஓரமாக நின்ற நாயொன்று விர்ரென்று குறுக்கே ஓடி மறுபுறம் நின்று விழுந்து விட்டார்களா? எனத் திரும்பிப் பார்த்தது. அதைப் பார்த்ததும் இளமுருகிற்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"கொஞ்சம் கவனக்குறைவா இருந்திருந்தா நம்மள காலி பண்ணியிருக்கும். நாயிக்கு வேலை இல்ல; குந்த நேரமில்லன்னு சொல்வாங்க. அதுக்குன்னு இப்படியா?"

அவனுக்கு உடம்பு நடுங்கியது. ஊன்றிய கால்களை உந்தி உந்தி மெதுவாக நகர்ந்தான்.

சாலை நடுவில் ஆங்காங்கே வெயிலுக்கு உணக்கையாய்ப் படுத்திருந்த ஆடுகள் அசைந்து கொடுக்க மறுத்தன. அவற்றின் மேல் மோதி விடாமல் வளைந்து நெளிந்து ஒட்டிக் கொண்டிருந்தான்.

"அந்த ஓட்டு வீட்டுக்கு முன்னாடி நிறுத்து இளமுருகு கைகாட்டிய இடத்தில் நிறுத்தினான்.

பராமரிப்பு அற்ற சிறிய ஓட்டு வீடு அது. வாசலில் உள்ள திண்ணையில் உட்கார்ந்திருந்த அப்பாவிற்குச் சோறு ஊட்டிக் கொண்டிருந்த தோழர் சுசாரா இவர்களைப் பார்த்ததும் முகமலர்ந்தார்.

"ஏது இவ்வளவு தூரம்?" கேட்டுக் கொண்டே கிண்ணத்தில் இருந்த பிரண்டைத் துவையலை அப்பாவின் நாவில் தடவினார். அதை அவர் சப்புக் கொட்டிச் சாப்பிட்டார். பழைய

சோற்றுக்கும் பிரண்டைத் துவையலுக்கும் ஏகப் பொருத்தமில்லையா? அந்த நாச்சுவையோடு இருவரையும் பார்த்து "வாங்க... வாங்க" என்றார்.

"அப்பாவுக்கு என்ன? ஏன் கையில முட்டைப் பத்து போட்டுருக்கீங்க?"

"அத ஏன் கேக்குறீங்க? தொடர்ந்து நாலு நாளா நீதிமன்றத்துக்குப் போற மாதிரி ஆயிடுச்சு. அண்ணன் மக பொன்னியைக் காவலுக்கு வச்சிட்டு போயிருந்தேன். குழாயடியில வழுக்கி விழுந்து கைய ஊன்றன்னு முறிச்சிட்டாங்க" என்று சொல்லிவிட்டு சுற்றியும் நின்ற பூனைகளை "ச் சூ! எனத் துண்டை உதறி விரட்டினார். அவை ஓடியதும் அந்த இடத்தைக் காட்டி உட்காரச் சொன்னார்.

"உங்களுக்கு பல தடவ அழைப்புவிட்டும் நீங்க எடுக்கல. நிலைமைய சொல்லியிருந்தீங்கன்னா, நாங்க வந்து அப்பாவ விடங்கலூர் அழச்சுகிட்டு போயிருப்போம்ல?" என்றார் இளமுருகு இரக்கமாகப் பார்த்தபடி.

"தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு தான் கூப்பிடல" என்றவர் ஊட்டிக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு தண்ணீர் கொடுத்தார். குடித்ததும் பழையது ஒழுகியிருந்த தாவங்கட்டையைத் துடைத்து விட்டு கை கழுவினார்.

தோழரின் அப்பாவிற்கு 80 வயதிருக்கும். கூன் விழுந்த முதுகு, எலும்புகளை எண்ணி விடலாம் என்பது போன்ற மெலிந்த உடல். வீங்கிய பகுதியில் முட்டைபத்து போட்டு கையை மடக்கிக்கட்டி தொங்கவிடப்பட்டிருந்தது.

"இளமுருகு! கொஞ்சம் அப்பாவ பாத்துக்கங்க. நான் போயி அம்மாவுக்கு மருந்து தடவிட்டு வர்றேன் தம்பி! கொஞ்சம் என் கூட உள்ள வாயேன்..."

"ஏன்? அம்மாவுக்கு என்னாச்சு?" பதறினான்.

"நான் வீட்ல இருந்த கையப் பிடிச்சு நடக்க விடுவேன். பொன்னியால அப்படி செய்ய முடியல. பகல் முச்சூடும் படுத்தே கிடந்ததால படுக்கைப் புண் வந்துடுச்சு" என்றார் வேதனையாக.

"முதல்ல போய் அம்மாவ பாருங்க. தம்பி! கூட நின்னு ஒத்தாசை பண்ணு. என்ன இது... துன்பத்துக்கு மேல துன்பமா வந்து சவட்டுதே..."

இருவரும் உள்ளே காலடி வைத்தவுடனே "மருந்து வேணாம்.. மருந்து வேணாம்!" அம்மா அலறத் தொடங்கினார்.

"மருந்தில்லம்மா.. குப்பைமேனி சாறுதான். எரிச்சல் தராது" என்று பயத்தைப் போக்கிவிட்டு செந்திலிடம் சொல்லத் தொடங்கினார்.

"மருத்துவமனைல வாங்குன மருந்து தாங்க முடியாத எரிச்சலா இருந்திருக்கு. அதுதான் பயப்படுறாங்க... தோள்பட்டையில புடவைய போட்டு முன்னால தர்றன். ரெண்டு தலைப்பையும் புடிச்சிகிட்டு நின்னா போதும். முதுவ சுத்தம் பண்ணிட்டு பச்சிலையை தடவிடுவேன்" என்றபடி மெதுவாக நிமிர்த்த புடவையைக் கோத்து முன்னால் நீட்டினார். செந்தில் இறுகப் பிடித்துக் கொண்டான்.

முதுகில் புண் இருந்த இடத்தைச் சுற்றி பழுத்து மினுமினுவென்றிருந்தது.

"தொடாதே! வலிக்குது..."

"செத்த சும்மா இரும்மா... சாற்றை தடவ வேண்டாமா?"

சின்ன துணியை வைத்து சாற்றைத் தொட்டுத் தொட்டு தடவியவர்,

"உள்ளே.. சீழ் வச்ச மாதிரி இருக்கு கொஞ்சம் வலியைப் பொறுத்துக்கம்மா" பேச்சுக் கொடுத்துக் கொண்டே ஒரு அழுத்து அழுத்தினார். அம்மாவின் அலறலோடு சீழ் வழிந்தது. பஞ்சை வைத்து எல்லாவற்றையும் துடைத்த பின் ஒருக்களித்துப்படுக்க வைத்தார். முனகல் வலியோடு படுத்தவரின் கண்களில் நீர் வழிந்தது. பார்க்க பார்க்க செந்திலுக்குக் கொடுமையாக இருந்தது.

"இவ்வளவு துன்பத்த தாங்கியபடி தான் நீங்க இயக்க வேலை பாக்குறீங்களா?" தாங்க முடியாமல் கேட்டான்.

"இதை விட துயரமெல்லாம் கடந்து தான் வந்திருக்கோம். தெம்பா இருந்தப்ப ஒடுக்கு முறைய எதிர்கொண்டு போராடினோம். அண்ணன் சிறையில் இருக்காரு. அண்ணி தற்கொலை பண்ணிக்கிட்டாங்க. அண்ணன்

மகள் பொன்னிய நான் வளக்குறேன். நா இல்லாதப்ப அவதான் அம்மா அப்பாவ கவனிச்சுக்குவா” சொல்லிக் கொண்டிருக்கும் போதே பொன்னி வந்தாள்.

“சித்தப்பா! நீங்க கெளம்பலாம்” என்று சொன்னவள், கடையில் வாங்கி வந்த காய் கறியை அடுப்படியில் வைத்தாள். தன் பாட்டியிடம் போய் உட்கார்ந்து கொண்டு “வலிக்குதா ஆத்தா” என்று கேட்டவாறு முதுகை ஆறுதலாக வருடினாள்.

செந்தில் பித்துப்பிடித்தவன் போல நின்றான். திண்ணையில் உட்கார்ந்திருப்ப அப்பாவை கைத்தாங்கலாக உள்ளே அழைத்து வந்த சாய்வு நாற்காலியில் உட்கார வைத்தார்.

“கொஞ்சம் இருங்க” என்று சொல்லி விட்டு துவைத்து வைத்திருந்த துணிமணிகளைப் பரபரக்க பரக்க கொடியில் காயப்போட்டார்.

“படுக்கையிலேயே ஒண்ணுக்குப் போயிடுறாங்க. மாத்து துணிக்காக அடிக்கடி துவைக்க வேண்டியிருக்கு என்றதும் உள்ளே சென்றவர் சில மணித்துளிகளில் கிளம்பி வந்தார்.

“இளமுருகு! நீங்க புறப்படுங்க நான் பேருந்துல வந்துடுறேன்” என்றவரை செந்தில் இடைமறித்தான்.

“இந்த சூழல்ல நீங்க வரவேண்டாம். நாங்க பாத்துக்குறோம்” அவன் குரல் பிசிறடித்தது.

“என்னைப் பொறுத்தவரை வீடும் நாடும் ஒன்று தான். சொல்லப் போனா வீட்டை விட நாட்டு நிலைமை இக்கட்டுல இருக்கு. நாம் சோர்ந்துபோய் விடாமல் செயல்பட்டுத்தான் ஆகனும். நீங்க கிளம்புங்க.. நான் வந்துடுறேன்”

பதிலை எதிர்பாராமல் விடுவிடுவென பேருந்து நிலையம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

செந்தில் வண்டியைக் கிளப்பினான். தலைக்கவசத்தை மடியில் வைத்துக் கொண்டு இளமுருகு உட்கார்ந்தார். மெதுவாகச் சந்தைக் கடந்தார்கள்.

சாலைக்கு வந்ததும் வண்டி வேகமெடுக்கிறது.

“தம்பி! இப்ப புரிஞ்சுகிட்டியா? மக்களுக் காகப் குடும்பத்தோட சிறையிலிருந்தவரை போயி தப்பா நெனச்சிட்டியே...”

இளமுருகின் கேள்விக்குப் பதிலாய்ச் செந்திலின் கண்ணீர்த்துளி ஒன்னு இளமுருகின் முகத்தில் பட்டுத் தெறித்தது.

●

கவிதை

# ஆசை

தொட்டிலை ஆட்டும் போதே என்னை
டாக்டராக்கிவிட
அப்பாவுக்கு ஆசை.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் வரை
கலெக்டர் ஆகிவிட ஆசை.

பத்தாம் வகுப்பு ஆசிரியரின்
கைக்கடிகாரத்தை பார்த்தபோது
ஆசிரியர் ஆகிவிட ஆசை

பக்கத்து வீட்டில் புதுமனை புகுவிழா
பார்த்தபோது
சொந்த வீடு கட்டும் ஆசை

கல்லூரிக் காலங்களில்
நடிகனாகிவிட ஆசை

நண்பர்கள் வாங்கிய புதிய பொருட்கள்
புதுப்புது ஆசைகளை உண்டாக்கியது

வேலை தேடி அலைந்த போது
ஆசைகள் இருந்ததாய் நினைவில்லை

இன்று குழந்தையை தொட்டிலிட்டு
ஆட்டிக்கொண்டிருக்கிறேன்
இவனாவது ஆசையில்லாமல் வளர
வேண்டுமென ஆசை!

– மகிழினி

கட்டுரை

# தேவக்கார பெரியம்மா

## இரா.மோகன்ராஜன்



"என்னாங்கடி பண்ணிட்டுருக்கிங்க! நா வந்துட்டுருக்கன்ல" இது தான் பெரியம்மா. அவரது வருகையை இப்படித்தான் அறிவித்தபடியே வருவார். அவரது பிரசன்னம் இப்படித்தான் நிகழும். இப்படி நிகழவில்லை என்றால் அந்த விசேசக்காரர் வீடு களைக் கட்டாது.

சிறிய, ஆர்ப்பாட்டம் இல்லாத வீடு, ஆர்ப்பாட்டமான வீடு எந்த ஒரு வீட்டுத் தேவையென்றாலும் சாதி வேறுபாடின்றி பெரியம்மாவைப் பார்த்துவிடலாம். எவ்வளவு பேரு இருந்தும் ஆள் அரவமற்ற வீடு போல இருக்கும் இடத்தில் பெரியம்மா வந்துவிட்டால் நூறு ஆட்களை சொல்லிவைத்து அழைத்து வந்தது போல அவர் ஒருவரால் சபை நிறைந்துவிடும்.

ஆளுக்கொரு பக்கமாக தேமேன்னு ஒக்காந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு நடுவே பெரியம்மாவின் கணீர் குரல் கேட்டதுமே சலசலக்கவும், கலகலக்கவும் தொடங்கிவிடும். ஆளப் பாத்தா ஏன் அத்தாட்சி பம்முறே! ஏய் அசேசத்தா... அங்க என்னாடி பண்றே ஓ வீடுனா இப்டி வேடிக்கபாத்துட்டு நிப்பியா... எடுடி அந்த தாம்பாளத்தட்ட... தேங்காயில மஞ்ச தடவுனியாடி... இது என்னாடி மஞ்ச குங்குமத்த இனுக்கி வச்சிருக்க, ஒனக்கு மட்டும் கொழச்சு பூசிக்கவா, ஊருக்கு குடுக்க வாணாமா...? என்பார்.

பேரு சொல்லி பெரியம்மா கூப்பிட்டா எங்க போயி ஒளியிறது? இந்த வந்துட்டன் அத்தாச்சி, என்னமோ அங்க இருந்தத பாக்கல அத்த... என்று ஜகாவாங்கும் பெண்கள் கூட்டம் கூடத்தின் நடுவில் பெரியம்மா கால் நீட்டி ஒக்காந்தா தாம்பாளம், பூக்கள், பழம் தேங்காய் என்று மங்களப் பொருட்களின் வரிசை அணிவகுக்கத் தொடங்கிடும்.

நல்லநேரம் தொடங்கி, நல்ல நேரத்தில் முடிக்க வேண்டிய காரியங்களை பெரியம்மாவை விட்டால் வேறு யாராலும் அவ்வளவு பாய்ச்சல் காட்டி செய்துவிட முடியாது. அவர் வரவில்லையானால் நல்ல நேரத்துக் காரியங்களைப் பெண்கள் ஊர்வம்பு பேசியும், சொணக்கம் காட்டியும் நேரம் கடந்து கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். அப்புறம் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களோ, பெண் வீட்டுக்காரர்களோ பெண்ணை அழைப்பதோ பெண்பார்க்க வருவதற்கோ பிறகு வரும் நல்ல நேரத்துக்காக கூட்டு வண்டியிலோ காரிலோ காத்து நிக்க நேரும். அதற்குப் பயந்தே பெரியம்மாவிடம் காரியத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்காரர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள் அப்புறம் பெரியம்மா பாடு, பெண்கள் பாடு.

வீட்டுக்காரவுக சொன்னா குத்தத்துல முடிஞ்சுடும். பெரியம்மா காரியத்தோட வசவுனாலும் திட்டினாலும் பதவிசா

கூப்பிட்டுச் செய்யச் சொன்னாலும் கோச்சுக்க ஆள் கிடையாது. பெரியம்மா அப்படித்தான் என்பது எல்லோருக்கும் தெரியும்.

என்னாடி மயிலம்பா நேத்து ரோட்டில பாக்காம சாடையா பாத்துட்டே போனே இப்பவும் ஒதுங்கி ஓரமா நிக்கிற பேசமாட்டியா? தேவக்கார வீட்டு கொழுக்கட்டைய தெரியமா எடுத்து வாயிக்குள்ள அடச்சி வெச்சிருக்கியா?'' என்று பேசி கொல்லென பெண்கள் கூட்டத்தைச் சிரிக்கப்பண்ணிவிடுவார். ஏதோ நெனைப்புல அல்லது மெய்யாவே பெரியம்மா பார்வையில் படக்கூடாது அல்லது முன் தேவக்கார வீட்டில் பெரியம்மா பேசியது புடிக்காது போன பெண்கள் இப்படி ஒதுங்கும் போது, வலிய பேசி அவர்களைத் தன்னோட பேச வெச்சிடுவார்.

எத்தனைபேர் தன்னை அலட்சியப்படுத்து பவர்களைத் தேடிப் போய் ஏன் பேச மாட்டுற என்று கேட்டுவிட தன்மானம் இடம் கொடுத்துவிடும்? பெரியம்மா கேட்டுவிடுவார். அதுதான் பெரியம்மா.

ஒடிசல் உடம்புப் பெரிய குங்குமம்; கொஞ்சம் தள்ளாட்டமான நடை; எவ்வளவு கூட்டத்திலும் பெரியம்மாவை அடையாளம் காட்டிவிடும் கணீர் குரல்.

பொங்கல், தீபாவளி என்று அவர் வீட்டுக்குப் போவது வழக்கம். பொங்கல் அன்று பெரியம்மா வீட்டு சாப்பாடு, அவர் வைக்கும் கோட்டுக்கறி சாப்பிடாமல் பொங்கல் திருநா போகாது. அதற்காகவே வீட்டில் சாப்பிடாமல் வயிறை காலியாக வச்சுட்டு பெரியம்மா வீட்டுக்குப் போய்விட வேண்டும். நமக்குப் பொங்கல் அன்னைக்குத்தான். ஆனா பெரியம்மாவை நம்பி தெனைக்கும் சாப்பிடும் கூட்டம் ஒண்ணு இருக்கதான் செஞ்சுது. அதுங்களுக்கு நெதமும் பொங்கலுதாம்.

மாட்டாசுபத்திரி தெரு பெரியம்மா என்றால் உறவு தண்டியும் தெரிஞ்ச பெத்த பேரு. வயாசாளிங்க ஒண்ணுக்கு ரெண்டு காலையில உச்சி வெயிலுக்கு ரா சாப்பாடு என்று பெரியம்மா வடிச்சு போட்டுட்டே இருப்பாங்க. வீட்டுக்கு போனா மொத கேள்வி சாப்பிட்டியாடி. இது அவரை விட வயசுல சின்னவங்க, மூத்தவங்க அப்படின்லாம் கிடையாது. எல்லாருக்கும் சாப்பாடு. எல்லாருமே சாப்பிட்டியாடி, சாப்பிடுடிதான்.

பேசிட்டே அடுக்களை சாப்பாடு கூடத்துக்கு வந்துடும். பெரியப்பா பேரூராட்சி மேஸ்திரி. ஊர அவர் சுத்தமா வச்சிருக்காப்போல பெரியம்மா மனசு சுத்தம். எங்க சாக்கட அடப்புனாலும் பெரியப்பா வந்தாதான் நடக்கும். எங்க விசேசம்னாலும் பெரியம்மா போனாதான் களைக்கட்டும். ரெண்டு பேரும் ஊருக்குனு பொறந்தவங்க.

பிள்ளைதாச்சி வீட்டு காப்புக்கட்டு, பேரு சூட்டுறதுன்னா வீட்டுக்கு ஆள்போயிடும். மோட்டுநாச்சிக்கு கோழிக்கறி படைச்சு, மொறத்துல பச்சமண்ண போட்டுப் பொட பொடனு பொடச்சு, காதுல பேர சொல்லி, நாக்குல தேன விட்டு நக்கவெச்சு, அப்பா கையிலயும், அம்மா கையிலயும் கொடுக்குற வரைக்கும் பெரியம்மாவ புடிக்க முடியாது.'' என்னாடியிது பச்ச மண்ண இப்படி கைபொறுத்து வாங்கத் தெரியாத நீ கொழந்த பெத்துப்புட்ட'' என்பார். அது செல்லத் திட்டல்.

''படி உசரத்துலேந்து தோளு வளந்தது வரைக்கும் பெரியம்மா இப்படி ஒண்ண என்னக்காவது மொறத்துல போட்டு பொடைக்கத்தான் போறம் பாத்துக்க'', என்பார்கள்.

''நீ அப்பப்போட்டு பொட பொடனு பொடச்சது இப்ப வரைக்கும் முதுகுல வலிக்கிது'', என்பார்கள்.

இந்த நிக்கிறானே சின்னவண்டு. இவன் இப்பவரைக்கும் அழுமூஞ்சியா இருக்கான்னா நீ மொறத்துல பொடச்சு எடுத்தது தான்'', என்று சொல்லி கொல்ன்னு சிரிக்கும் வயசுப்புள்ளைங்க கூட்டம்.

ஆளு, பேருனு கிடையாது. இந்த சின்னாத்தா பேத்தி இருக்காள்ல, இப்போ கல்யாணம் கட்டிப் போயிட்டா. அவ பொடைக்குறப்போவே என் பொடவையில

பேஞ்சு உட்டுட்டா; மூத்திரம் போயிட்டா. இப்ப அத சொல்ல முடியுமா? மொறத்துல பொடச்சு கீழ போடுறதுக்குள்ள வளந்து கல்யாணமாகிப் போயிடுறாளுக. இந்த பெரியம்மாவ, பாட்டிய ஆருக்கு ஞாவகம் இருக்கு என்பார். ரெண்டு கண்ணுலயும் அப்போ கண்ணுதண்ணி முட்டிக்கும். பெரியம்மா அழுது பாத்ததுல்ல. அது அழுகையா? அதும் தெரியாது.

பெரியம்மா மொறம் பொடைச்சு வளந்த கூட்டம் தெருவெங்கும் நண்டும் சிண்டுமா குறுக்கும் நெடுக்குமா அலைஞ் சிக்கிட்டுதான் கிடக்குது. பெரியம்மா மோட்டுநாச்சிய படையலுக்கு கூப்பிட்டா கெடக்குற வேலய போட்டுட்டு கொழந்த பொறந்த வூட்டுக்கு பொசுக்குனு ஓடிவந்துறுவா. இல்லேனா யாரு பெரியம்மாட்ட திட்டுவாங்கித் தொலையிறதுன்னு.

மூனுதரம் கெழக்கு சுவத்துல நாச்சியா வந்துட்டேனு சொன்னா உண்டு இல்லேனு பண்ணிடும் பெரியம்மா. ''ஏட்டி சுவத்துப் பல்லி சொல்லிடுச்சிடி நாச்சிய கும்பிட்டுட்டு புள்ளய மொறத்துல ஏத்துங்கடி'' னு சொல்லிட்டே எல்லாத்தையும் பெரியம்மாவே செய்வார்.

கையில மொறத்த பெரியம்மா ஏந்துற வரைக்கும் அழாத புள்ள பெரியம்மா பொடைக்குற பொடையில அதுக்கு பூமி சுத்தி அழுவ வந்துடும். ஆனா அது கொஞ்ச நேரந்தான். காதுல அது பேர பெரியம்மா மூணுதர(ம்) ஓதி நாட்டுச் சக்கர, மலைநாட்டுத் தேன் நாக்குல விட்டதுக்கு அப்புறம் கம்முனு ஆயிடும். ''இனி நா தனி ஆளு; தாயும் புள்ளயும் ஒண்ணுதான்; ஆனா வெளில வந்தாச்சு; பெரியம்மா பேரு வச்சுட்டா; இப்போ வாயும் வவுறும் வேறெ பாத்துக்க; அழுதா, ஆர்ப்பாட்டம் பண்ணினாதாம் கெடைக்குறது கெடைக்கும்'', அப்புடின்னதும் உசாராகிடும் கொழந்தைங்க.

"எத்தன புள்ளைங்க பெரியம்மா பொடச்சுருக்க.. ஒரு நூறு இருக்குமா..?"

"ஏ ஒண்ண பொடச்சுருக்கேன். ஒப்பன பொடச்சுருக்கன். ஏ இந்தத் தெரு கோடி வரைக்குந்தா பொடச்சுருக்கே" ம்பாங்க பெரியம்மா!

"எல்லாரையும் பொடைச்சுருக்க செரி ஒண்ண யாரு பொடச்சா பெரியம்மா..!" குட்டிகள்லாம் கேலியா கேக்குதா கிண்டலா கேக்குதா இல்ல மெய்யாவே கேக்குதான்னுல்லாம் பாக்காம பதில் வரும்.

ம்.. சாமி பொடச்சுருக்கும், மோட்டு நாச்சியா பொடச்சுருப்பா, இல்லேன்னா நா சிரிச்ச சிரிப்புக்கு வுட்டுட்டு ஓடிருக்காதா தெய்வமல்லாம்?"

என்ன சிரிச்சியா..! அப்போ நீ எங்களப் போல அப்போ அளுவலியா நாச்சியா வலிக்காம ஒண்ண பொடச்சுப்போட்டுச்சா.." ''ஆமாண்டிங்கிற எங்க அம்மாச்சி அப்படித்தாண்டி சொன்னுச்சு. மொறத்துல சிரிச்ச மேனிக்கு நீதாண்டி கெடந்தே. அது அபூர்வமுண்டி; பொளச்சுக்குவேன்னு இப்பமூட்டும் சொல்லும்ல!" என்பார்.

பெரியம்மா தேவக்கார வீட்டு தாம்பாலம் நெறச்சு வரிச எடுக்குற வரைக்கும் பேச்சுலயும், செயல்லயும் சுவாரசியம் கூடுமே தவிர கொறயற மாதிரி இருக்காது.

சாவு வீட்டுலயும் அப்படித்தான். எழவு விழுந்த வீடுனு சொல்றதே காரியமும் சோந்து போயி கெடக்குங்குறத சொல்றது தான். பொம்பளங்கள அம்சடங்கி ஆம்பள சவத்த எடுக்க வைக்கிறது அவ்வளவு லேசுப்பட்ட காரியமில்லே. உரிமைக்காரிய இழுத்து அணைச்சு ஆறுதல் சொல்லிட்டே உறவுக்காரிகள ஏவல் வாங்கி, பொம்பளபக்கம் செய்ய வேண்டிய எல்லா சடங்கையும் சட்டுபுட்டுனு செஞ்சு முடிச்சுட்டு, சவத்த கௌப்பிவிட்டு விடுவார். இருக்கற வரைக்கும்தான் வீட்டுக்கு சொந்தம். வேள வந்து வுழுந்துட்டா இடுகாட்டுக்குத் தான் சொந்தம். சொந்தத்த தேடி போறது தாம் சவத்துக்கு மரியாதை என்பார்.

அப்படிப்பட்ட பெரியம்மாவுக்குச் சாவு வரும்னு சாவே நெனைச்சுப்பாக்கல.

சொமங்கலியா இருக்குறதாலதானே ஒண்ண எல்லா தேவகாரங்களும் கூப்பிடுவாங்க. நீயும் அலுக்காம சலிக்காம ஓடிட்டுருந்தே. அதான் முன்னாடியே போய் சேந்துட்டேன்னு பாட்டி ஒண்ணு ஒப்பாரி வெச்சுது.

தெரு முச்சூடும் பொம்பளங்க படைதான் பெரியம்மா சாவுக்குத் தெரண்டு கிடந்துச்சு. தனியா கெடந்த கௌங்கட்டகளுக்கு யாரு கூப்பிட்டு சாப்பாடு கொடுப்பாகனு கேட்டழுதுச்சு மரவக்காட்டு பெரிசு ஒண்ணு.

"டீ என்னாடீ பண்றீங்க"னு மொளச்சு மூனு எல வுடாத சின்ன புள்ள ஒண்ணு பெரியம்மா போல பேசி காமிக்குது கேக்குறவங்களுக்கு காது சிலுத்துப் போகுது.

சாவு கண்ண மறைக்கும் வரைக்கும் பெரியம்மா நோவுன்னு படுத்ததேயில்ல. கொரோண காலத்துலயும் காதும் காதும் வச்சாபோல தேவக்காரங்க வந்து காருவச்சு அழைச்சுட்டுப் போனாலும் ''கூப்பிட்ட மொகத்துக்கு போகாம இருக்கப்படாதுப்பா'', என்று போய்விடும் பெரியம்மாவுக்கு கொரோனா வந்தது ஊருல மொதல்ல பெரியம்மாவுக்குத் தாண்டானு பேசிக்கிடாங்க. ஆனால் கொள்ள நோயிக்கும் பெரியம்மா பேரே தெரில போல.

சரோசான்னா வாடாத மொகம். அவங்களுக்கு சாவுலயும் வாடல. "சீக்குல கெடந்து சீல நனைஞ்சு மருமவ மவ(ன்) பாக்குறமாதிரி வச்சுக்க மாட்ன்டீ. போனா உசுரு பொசுக்குனு போயிறனும் அப்படி இருக்கனும் சாவுன்னு,'' சொன்ன சொல்ல அந்த சாவு சத்தியத்த போல நின்று காப்பாத்திட்டு.

செத்தும் கொடுத்த சீதக்காதினு சொல்றாபோல பெரியம்மா சாவும் கல்யாண சாவுதான். தேவக்கார வீட்டு சாவு தான். தெருக்கோடி வீட்டுல மோட்டு நாச்சியாவ கும்பிட்டு, கொழந்தைய மொறத்துலப் போட்டு பொடச்சு, புள்ள பேர காதுல ஓதி உரிமைக்காரிக்கிட்ட ஒப்படச்சிட்டு, அபபடியே குனிஞ்சாப்ல ஒக்காந்த பெரியம்மாதான். அப்பறம் எந்திரிக்கவே இல்ல.

''குழந்தய சேதாரமில்லாம பச்ச ஒடம்புகாரிகிட்ட ஒப்படச்சுட்டுதான் போய் சேந்தா மவராசி'',ன்னு நேருல பாத்தக் கூட்டம் சாவன்னிக்கு விடிய விடிய பொலம்புச்சு. பெரியம்மா சாவுக்கு மொதல்ல அழுதது மொறத்தால பெரியம்மா பொடச்ச புள்ளயாதான் இருக்கனும்.

சாவு வூட்டுல முப்பதுக்குப் படைக்குறதுக்குனு பெரியம்மாவத்தான் கூப்பிடுவாங்க. ஏன்னா அவங்க மேல பிரியப்பட்ட கூட்டம் அவ்ளொ இருக்கு. தெருக் கோடிலேந்து கோலம் போட்டு, சொம்பு தண்ணி எடுத்து மாவில நனைச்சு தெரு முச்சூடும் தெளிச்சிட்டே'' காட்டுக்குப் போன நீங்க வீட்டுக்கு வந்துடுங்கன்னு பெரியம்மா கணீருன்னு அழைச்சா, போன எந்த உசுரும் தெய்வமா வீட்டுக்குத் திரும்பி நா வந்துட்டன் என்பதை கெவுலி சொல்லியும் தெரிஞ்சுக்கலாம்.

இன்னைக்கு பெரியம்மா காட்டுக்குப் போயிட்டாங்க. பேரு வெச்ச புள்ளங்க தெகைச்சு கிடக்குங்க. தெரு வெறிச்சோடி போச்சு. செத்தவங்கள எல்லாம் வீட்டுக்கு தெய்வமா அழைச்சுட்டு வந்த பெரியம்மாவ வீட்டுக்கு அழைச்சுட்டு வர எந்த தெய்வம் இருக்கு சொல்லுங்க! ●

**படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!**

கதை சொல்லிகளிடமிருந்து கதைகள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரையாளர்களிடமிருந்து கட்டுரைகள், பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள். தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்: 9659335462 மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

**கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே 9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.**



# நண்டு

## கலைபாரதி

சென்ற வாரம் மலரக்கா வீட்டிற்கு சென்று இருந்தேன். மதியம் சாப்பிட்டுவிட்டு மாலை ஒரு நான்கு நான்கரை மணிவாக்கில் அப்படியே பேசிக் கொண்டிருந்தோம். அப்போது குறுக்காலே ஒரு பெரியவர், “நல்லா இருக்கீங்களா தம்பி பார்த்து ரொம்ப நாளாச்சு?” என்றார்.

‘இருக்கிறேன்’

என்றேன். அவர் கையில் ஒரு வாளி. வாளிக்குள் கலகலவென ஒரே சத்தம். என்னக்கா அது? நண்டுடா என்றது. “ஏன் மத்தியானம் நண்டு வாங்கி ஆக்கியிருக் கலாமே.. ஏன் கோழியும் மீனும்?

இப்ப ஆக்கிடுறேன் சாப்பிடுறியா...?

“அதெல்லாம் ஒன்னும் வேணாம் நீ அந்த நண்டுகளை அப்படியே வாங்கி சுத்தம் செய்து கொடு நான் வீட்டுக்கு எடுத்துட்டு போய் விடுகிறேன்.”

மருத நில உழுகுடிகளின் முதன்மையான உணவு நண்டு. நாலு நண்டும் ரெண்டு கீரைக்குச்சியும் இருந்தால் இராத்திரி கறிக்கு ஆயிடும் என்பது மருதநில மக்களின் வாழ்வியலாக இருந்திருக்கின்றது. இருக்கின்றது. மழைக் காலங்களில் வளைக்குள் கைவிட்டு வயல் நண்டுகளைப் பிடித்த அனுபவம் எனக்கு உண்டு. மழை பெய்தாலே சோத்துவாளியோடு தரிசு வயல்களில் முளைத்துக் கிடப்போம். வளைக்குள் முழுகையும் உள்ளே போய்விடும். நண்டின் முதுகுப்புறத்தில் கை வைத்துப் பிடிக்க வேண்டும். நண்டின் கடிகால்களில் கைவிரல் மாட்டினால் அவ்வளவு தான். பதம் பார்த்துவிடும். மென்மையாய்த் தூறல் போட்டால் மிகுந்த கும்மாளமாய் வெளியே வந்து எட்டிப் பார்த்து ஆட்டம் காண்பிக்கும். சத்தம் காட்டாமல் வரப்பில் மறைந்து நின்று குச்சியை ஆழச் சொருகி அப்படியே தூக்கி விடலாம்.

பெருமழைக்காலம் என்றால் நண்டுகள் வெளியே வராது. தவிரவும் மழையில் இருந்து தன்னை தற்காத்துக் கொள்ள வயல் சேற்றை எடுத்து வளை அடைக்கும். இதனை மழைக்கால முன்னறிகுறியாக

**ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி**
**“மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே”**
**நேற்றும் இன்றும் கொம்பு சுற்றி காற்றடிக்குதே**
**கேணி நீர்படு சொரித் தவளை கூப்பிடுகுதே**
**சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே.**
**மழை தேடி ஒரு கோடி வானம் பாடி ஆடுதே..”**

என்று முக்கூடற்பள்ளு பதிவு செய்யும்.

கோடைக்காலம் என்றால் கிளுக்கி ஆட்டி நண்டுபிடிப்போம். பாப்லோ அறிவுக்குயிலின் ஆகச்சிறந்த சிறுகதை கிளுக்கி.

அது என்ன கிளுக்கி?

மெல்லிசான கம்பியில் பத்துப் பதினைந்து காய்ந்த ஊமைச்சிகளைக் கோர்த்து நத்தாங் கூட்டில் சிறியது. நீண்ட மூங்கில் குச்சியில் சேர்த்துக் கட்டினால் கிளுக்கி. நண்டு வளையின் முன் பகுதியில் கிளுக்கி வைத்து ஆட்ட வேண்டும். அப்போது எழும் சத்தம் வளைக்குள் இருக்கும் நண்டுக்கு மழையும் காத்தும் சேர்ந்து வருவது போல இருக்கும். மழைச் சத்தம் கேட்டு கொழுத்த கோடை நண்டுகள் கும்மாளம் போட்டபடி மேலே வரும் போது கிளுக்கியின் மறுமுனையில் உள்ள நூலினை நண்டின் கால்களுக்கு இடையே கொண்டு போனால் நூலினை கடித்துக் கொள்ளும் நூலினை முறுக்கி கவட்டை குச்சியை நண்டின் பக்கவாட்டில் கொடுத்து தள்ள வேண்டும்.

கிளுக்கி ஆட்டி நண்டுபிடித்தால் வளைக்கு ஒன்றாகத்தான் பிடிக்க முடியும். ஆனால் காத்தாடி வைத்து நண்டுபிடித்தால் ஏராளம் கிடைக்கும். தகரத்தில் சிறிய காத்தாடி செய்து நொச்சிக்குச்சியில்

இணைத்து காத்தடிக்கின்ற திசைக்கு எதிர்க்க ஊன்றி வைத்தால் சும்மா அள்ளுகின்ற காற்றில் நண்டுகள் வந்து எட்டிப் பார்க்கும். பிசுக்குடப்பாவில் நீர் ஊற்றி எட்டிப் பார்க்கும் நண்டுகள் மீது பொய்த் தூறல் பெய்யச் செய்தால் மழைத்தூறலில் நனைந்து மகிழ நண்டுகள் வெளியே வரும்போது வரப்பில் மறைந்து நின்று கூர்முனைக் குச்சியால் நண்டினைத் தள்ளி விடுவோம். எடுத்துப் பைக்குள்ளோ வாளிக்குள்ளோ போடுவதற்கு ஒத்தாசையாய் வேறொரு ஆள்.

நகரத்து வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் வசிக்கும் மகனுக்கு கிராமத்து அம்மா வயல் நண்டு கொண்டு வந்து கொடுப்பதை ஒணக்கை என்ற சிறுகதையில் முனைவர் அ.குணசேகரன் பதிவு செய்திருப்பார். அதனையும் அடுத்தவருக்குத் தெரியாமல் சமைக்க வேண்டும். அடுத்தவருக்குத் தெரியாமல் சமைத்து விடலாம். ஆனால் நண்டு வறுவல் எழுப்பும் அதன் மணத்தை..? உண்பதில் கூட உயர்வு இழிவு பார்க்கும் சமூகத்தில் தான் வாழவும் வேண்டியிருக்கிறது!

கள்ளுக்கடையில் முட்டி முட்டியாய்க் குடிக்கின்ற சித்தப்பா வகையறாக்களுக்கு தொட்டுக்கறி நண்டு. சாக்கணக் கடையில் நண்டும் நத்தையும் எலிக்கறியும் கல்லா களைக்கட்டும்.

ஐங்குறுநூறு பத்துப் பாடல்களை கள்வன் பத்தாக நண்டிற்காக ஒதுக்கி வைத்திருக்கிறது. நண்டினை சங்க இலக்கியம் அலவன், களவன், கள்வன் என்ற பெயர்களில் பதிவு செய்திருக்கின்றது. சிவந்த நிறத்தில் உள்ள வயல்நண்டு செக்கர் நண்டு. ஐங்குறுநூற்று பாடல்களில் புள்ளிகளை உடைய நண்டு புள்ளிகள்வன். வளைதோண்டி மறைந்து வாழ்கின்ற கள்வன். நண்டு, பதுங்கி வாழ்கின்ற திருடர்களுக்கும் பெயராக இருக்கின்றது.

நண்டின் கண்களுக்கு உவமையாக வேப்பம்பூ சொல்லப்பட்டுள்ளது.

**“வேப்பு நனை அன்ன நெடுங்கண்கள்வன்**
**தண்ணக மண்ணளை...”**

*– ஐங்குறுநூறு 30*

குளிர்ந்த சேற்றில் வாழ்கின்ற வேப்பம்பூ போன்ற கண்களை உடைய நண்டு. நேற்று வேப்பம்பூக்களை உற்றுப் பார்த்து நண்டின் கண்களை நினைத்து மகிழ்ந்தேன்.

நாய் ஓடும். பூனை ஓடும், முயல் தவ்வும், நண்டு என்ன செய்யும்? முன்னோக்கி நடக்கின்ற கால்கள் உடைய விலங்கினங்கள் ஓடும். நண்டிற்குப் பக்கவாட்டுக் கால்கள். அது என்ன செய்யும்? சென்ற வாரம் பெரிய கோயில் திருவிழாவின் போது மனைவி சொன்னாள்.

“ஏங்க சின்னவனை பாருங்க.. நண்டு மாதிரி இழையிறான். அவன் கையை பிடிங்க..”

பக்கவாட்டுக் கால்களை உடைய நண்டு இழையும். இழையும் என்றும் சொல்லிவிட முடியாது. ஏதோ பேச்சு வழக்கில் அப்படிச் சொல்லிக் கொண்டு இருக்கின்றோம். கால்கள் இல்லா உயிரினங்கள் இழையும், புழு இழையும், பாம்பு இழையும், பக்கவாட்டுக் கால்களை உடைய நண்டு நகரும்.

சேற்றில் நண்டு மெல்லிசான தன் குச்சிக் கால்களை பதிய வைத்துச் செல்வது வரைந்து வைத்தலைப் போல இருக்கின்றது என்பதை

**“உண்டுறை அணங்கிவள் உறைநோய்**
**ஆயின்**
**தன் சேறு கள்வன் வரைக்கும் ஊறற்கு”**

*– ஐங்குறுநூறு 28*

வரித்தல் என்கிறது ஐங்குறுநூற்று பாடல்.

சங்ககால மகளிர் விளையாட்டுகளில் நண்டுபிடித்து விளையாடுவது உண்டு. சேற்று வளைகளைத் தோண்டி நண்டு பிடித்து விளையாடுவதை அலவனாட்டம் என்கிறது சங்க இலக்கியம். ஆனால் நம் திரைப்பட கதாநாயகர்கள் நண்டுபிடித்து கதா நாயகியின் இரவிக்கைக்குள் விட்டு விளையாடி விடுவர்! புவனா ஒரு கேள்விக்குறி.

வளைகளைத் தோண்டி நண்டு பிடித்து விளையாடும் செய்தி

**“செக்கர் ஞெண்டின் குண்டளைக்**
**கெண்டி...**
**வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி”**

*–அகநானூறு 20*

என்று பதிவாகி இருக்கின்றது. நண்டு பிடிப்பது போல் மெய்ப்பாடு தோன்ற

*நடனமாடி பார்ப்பவரைத் திண்டாட வைக்கும் நங்கையின் நடனத்தை நண்டாட்டம் என்கிறார் கம்பர்.*

**“நண்டாட்டிய நங்கை நாட்டங்களால்**
**இந்த நாட்டை எல்லாம்**
**திண்டாட்டிய கண்கள் போல் செய்யுமோ**
**கயல் தீங்குகளே”**

*– சடகோபரந்தாதி 96*

*குஞ்சு நண்டுகள் பிறந்த பின்பு தாய் நண்டுகள் இறந்து விடும் என்ற செய்தியை*

**“தாய் சா பிறக்கும் புள்ளிக் கள்வன்...”**

*– ஐங்குறுநூறு 24*

*இது பற்றி தா.ரெ.தமிழ்மணியிடம் கேட்டபோது நண்டு குஞ்சுகளைப் பீய்ச்சிய பிறகு அது பால் நண்டுகளாக மாறி இறந்துவிடும் என்றார்.*

*குஞ்சு வெளி வந்த பிறகு தாய் நண்டு இறந்துவிடும் என்பதை ஔவையாரின் நல்வழியிலும் காணலாம்.*

**“நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங்**
**காலத்தில்**
**கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்**

*–நல்வழி 36*

*அதாவது, நண்டு, சிப்பி, மூங்கில், வாழை போன்றவை கருக்கொண்டு தன் வாரிசுகளை வெளித்தள்ளிய பின்பு இறந்துவிடும் என்று நல்வழி கூறுகிறது. குஞ்சு நண்டுகள் தாயைத் தின்று வளரும். முத்துக்கள் கிளிஞ்சல்களைக் கிழித்துக் கொண்டு அதன் வயிற்றிலிருந்து பிறக்கும். மூங்கில்கள் நெல்விளையும் இறுதிக் காலத்தில் அதன் அடியிலிருந்து குருத்துமண் வெடித்து வெளிக்கிளம்பும். தாய் வாழை நாசமடையும் காலத்தில் கன்று வாழை முளைக்கும் என்பதாகும்.*

*நரி நண்டுபிடிக்கும் கதையும் இங்கு உண்டு. வளைக்கு அருகில் சென்று நரி வளைக்குள் வாலை விட்டு ஆட்டுமாம். வாலின் முனையைக் கடித்துக் கொள்ளும் நண்டை அப்படியே வெளியே இழுத்து நரி சாப்பிடுமாம். நண்டை நரியுண்ணி என்கிறது போகர் நிகண்டு.*

*மறுநாள் ஆசிரியர் அறையின் மதிய உணவு வேளையில்,*

*“எங்கய்யா நண்டு கிடைத்தது ரொம்ப அருமையாக இருக்கு. அடிக்கடி அக்கா வீட்டுக்கு போயிட்டு வாங்க எங்களுக்கு நண்டு கொழம்பு கிடைக்கும்“ என்றார் நண்பர் முருகானந்தம்.*

*வயல் நண்டு கொழம்பின் மணம் அறை முழுவதும் பரவிக் கிடந்தது.*

*– நகரும்*

---

**கவிதை**

# கழுத்து

சமையலறை
சாகசங்கள்
மூன்றுமணி நேரம்
உடற்பயிற்சி
தினம் பழக
அரைமணி நேரம்
உண்ண ஊட்ட
பரிமாற
ஒருமணி நேரம்
புறப்படவும்
காத்திருக்கவும்
ஒருமணி நேரம்
பேருந்தில்
மல்லுக்கட்டு
இரண்டுமணி நேரம்
கணினி முன்னே
கட்டுண்டு
எட்டுமணி நேரம்
உடல் களைத்திருந்தும்
மனம் அலுத்திருந்தும்
பயனொன்றுமில்லை
ஆண்டுக் கணக்காயிற்று
இரவில் தூங்கி
நரம்பியல் நிபுணர்கள்
சொன்னார்கள்
தேய்ந்துவிட்டதாம்
கழுத்து.

– அமரந்த்தா

சிறுகதை

# நாற்பது பைசா

அமரந்த்தா



எண்பதுகளில் தில்லியில் வேலை பார்த்து வந்த நேரம். வீட்டிலிருந்து அலுவலகம் செல்ல இரண்டு பேருந்துகளில் பயணிக்க வேண்டும். வருமானவரி அலுவலக நிறுத்தம் வரை ஒரு பேருந்து அங்கிருந்து எங்கள் அலுவலகம் வரை மற்றொரு பேருந்து திரும்பும் போதும் அப்படியே.

எப்போதும் போல அன்று மாலையும் அப்படித்தான் அலுவலகத்திலிருந்து புறப்பட்டேன். பேருந்து வழக்கம் போல நிரம்பி வழிந்தது. மிகுந்த முயற்சிக்குப் பின்னர் தான் பற்றிக் கொள்ள வசதியாக கம்பி கிடைத்தது. புறப்படும் போதே வழக்கம் போல முப்பது பைசா கையில எடுத்து வைத்திருந்ததால் உடனே பயணச்சீட்டு வாங்கச் சொல்லி அருகிலிருந்தவரிடம் கொடுத்து அனுப்பினேன். சற்று நேரத்தில் டிக்கெட் வந்து சேர்ந்தது. ஒவ்வொரு நிறுத்தத்திலும் ஆட்கள் ஏற, வண்டி பிதுங்கி வழிந்தது.

பின்னாலிருந்த ஆசாமி ஒரேயடியாக என் தோளில் பாரம் விழுமாறு சாய்ந்து நின்றிருந்தார். நகர்ந்து கொள்ள துளி இடைவெளி கூட இல்லை. தடுமாறாமல் கால்களை அகட்டி வைத்து நிற்பதே பெரிய வித்தை போல இருந்தது. இறங்குபவர்கள் முன்புறம் செல்ல முண்டியடித்துச் செல்லும் ஒவ்வொரு முறையும் பின்னாலிருந்தவரின் பாரம் முழுவதும் என் முதுகைப் பதம் பார்த்தது. கஷ்டப்பட்டு அசைந்து என் கால்களை உறுதியாக பதித்துக் கொள்ளவே படாத பாடுபட்டேன்.

இன்னும் சிறிது தூரம் தான். அடுத்த நிறுத்தத்தில் இறங்க வேண்டும். எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு தவித்தவாறே புடவையையும் கைப்பையையும் பற்றிக் கொண்டு முன் வாசல் புறமாக நகர்ந்தேன். பலபேர் இடித்துத் தள்ளிக்கொண்டு இறங்கினார்கள். ஒருவழியாக நானும் இறங்கினேன். இறங்கினேன் என்பதை விட எல்லோருமாக சேர்ந்து என்னைத் தள்ளி இறங்க வைத்தார்கள் என்பதே பொருத்தம். வியர்வையில் குளித்து விட்டிருந்தேன்.

வெளிக்காற்று முகத்தில் பட்டதும் சற்று நேரத்தில் வியர்வை ஊறுவது நின்றது. அடுத்த பேருந்தக்கான கட்டணத்திற்கு

நாற்பது பைசாவை எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டு தான் பேருந்தில் ஏற முடியும். பேருந்துக்குள் பர்சைத் துழாவ முடியாது. கைப்பையைக் கண்டதும் திடுக்கிட்டேன். ஜிப் திறந்திருந்தது. உள்ளே பர்ஸ் இல்லை. ஐயோ... எப்போது நடந்தது இது? இப்போது எப்படி பேருந்துக்கு டிக்கெட் வாங்குவது? நாற்பது பைசா வேண்டுமே? பையைத் துழாவிப் பார்த்தேன். எங்கும் சில்லரை இல்லை. எல்லாம் பர்சோடு போய்விட்டது. வீட்டுக்கு நேரத்தில் போயே ஆக வேண்டும் என் மகள் வந்து காத்திருப்பாள்.

பக்கத்தில் யாராவது தெரிந்தவர்கள் தென்படுகிறார்களா என்று பார்த்தேன். ஒருவருமில்லை. கைப்பையில் சில்லரையாவது போட்டு வைக்கும் பழக்கம் இருந்திருந்தால்? இப்போது நினைத்து என்ன செய்வது? வேர்த்து வடிந்தது. மாதத்தின் முதல் வாரம் பணம் அதிகமாக இருக்குமென்று நினைத்தானோ? என் பர்சில் அதிகமாகப் போனால் பதினைந்து இருபது ரூபாய் இருக்கும். சரி, இப்போது நாற்பது பைசா வேண்டுமே?

அசடு தட்டாமல் முகத்தை சாதாரணமாக வைத்துக் கொள்ள முயன்றேன். எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அடுத்து வந்த பேருந்தில் ஏறி விட்டேன். நடத்துனர் அருகில் நிற்காமல் நடுவரிசையில் நின்றேன். முன்புறத்திலிருந்து பலரும் சில்லரை கொடுத்து டிக்கெட் வாங்க அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நடத்துனர் என்புறம் திரும்பிக் காசு கேட்டு விடுவாரோ என்று பயந்து நடுவரிசையிலேயே நின்றேன். கூடுமானவரை முகத்திலும் பயம் தென்படக் கூடாதென்று எண்ணி இயல்பாக இருக்க முயன்றேன். ஆனாலும் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்வது எனக்கே கேட்டது.

எனக்கு முன் வரிசையில் நின்றிருந்த நபர் இறங்கிவிட்டார். பின்னாலிருந்து யாரோ தள்ளியதில் நடத்துனர் அருகே வந்துவிட்டேன். வேறு வழியின்றி முன்புறத்திலிருந்து டிக்கெட் வாங்க சில்லரை அனுப்பியவர்களுக்கு நடத்துனரிடம் டிக்கெட்டை வாங்கி வாங்கி அனுப்பினேன். அதிலேயே கருத்தாக முகத்தில் கலக்கமின்றி இருக்க அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தேன். நசநசவென்று உடல் முழுதும் வியர்த்து விட்டது.

அப்போது நடத்துனர் இருக்கைக்கு முன் இருக்கையில் ஜன்னலோரம் இருந்த பெண்மணி இறங்குவதற்காக எழுந்தார். அருகே வேறு எந்தப் பெண்ணும் இல்லாததால் அந்த ஜன்னல் இருக்கையைப் பிடித்து உட்கார்ந்து விட்டேன். சிறிது நேரத்திலேயே என்னைப் பிடித்திருந்த பயம் மெல்ல விலகியது. இயல்பாக மூச்சு விட்டேன். வியர்வை கூட உலர்ந்து விட்டது.

இன்னும் நான்கு நிறுத்தங்கள் தான் நான் இறங்க ஐயோ இறங்குமிடத்தில் டிக்கெட் பரிசோதகர் இருந்தால்...? முந்தைய பேருந்து டிக்கெட்டையும் வழக்கம் போல இறங்கியபின் எறிந்துவிட்டேன். டிக்கெட்டும் இல்லை பணமும் இல்லை என்றால் நேராக காவல் நிலையம் போக வேண்டியது தான்... எது நடந்தாலும் பர்ஸ் திருடு போனதைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுவிடுவது என்று முடிவு கட்டிக்கொண்டு இறங்க வேண்டியதற்கு முந்தைய நிறுத்தத்தில் எழுந்து நின்று கொண்டேன்.

இறங்கி விறுவிறுவென்று வீடு நோக்கி நடந்தேன். சாலையை விட்டு தெருவினுள்ளே இறங்கி நடந்தபோது வேறுயாரும் தென்படவில்லை. மடைதிறந்தாற்போல கண்ணீர் வழிந்தது. கைக் குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டேன். வீட்டை அடைந்து பக்கத்து வீட்டிலிருந்த மகளை அழைத்து வந்து சேர்ந்த போது மனம் லேசாகி விட்டது. முதல் வேலையாக கைப்பையில் எல்லா ஜிப்புகளிலும் சில்லரைகளைப் போட்டு வைத்தேன்.

●

# தாங்கல்

ஆ.அரிமாப்பாமகன்

‘கரிகாலன் கட்டி வைத்தான் கல்லணை’ நான்
கண்களுக்குள் கட்டி வைத்தேன் கண்ணனை

காவிரி பெருக்கெடுத்தால்
கொள்ளுமிடம் கொள்ளிடம்!
காதல் பெருக்கெடுத்தால்
புகலிடம் பெண்ணிடம்!

பன்னிரண்டு நூற்றாண்டு சென்றது! - அணை
பழுதில்லாமல் காலங்களை வென்றது!
(கண்ணதாசன், தபால்காரன் தங்கை)

வட்டார வழக்கில் தாங்கல் வருத்தம் என்னும் பொருளது
‘அவன் மனத்தாங்கலாய் இருக்கிறான்’

*ஏங்கி வருவார்க்குத் தாங்கலாக இருப்பது ‘ஏங்கல் தாங்கல்’ எனப்படுகிறது. இது பேச்சு வழக்கு.*

‘கொழுஞ் சுளைப் பலவின் பயம் கெழு கவாஅன்
செழுங் கோள் வாங்கிய மாச் சினைக் கொக்கினம்
மீன் முடை நாற்றம் தாங்கல் செல்லாது.
துய்த் தலை மந்தி தும்மும் நாட!

நினக்கும் உரைத்தல் நாணுவல் இவட்கே
நுண் கொடிப் பீரத்து ஊழ் உறு பூ எனப்
பசலை ஊரும் அன்னோ, பல் நாள்
அரி அமர் வனப்பின் எம் கானம் நண்ண,
வண்டு எனும் உணரா வாகி,
மலர் என மரீஇ வரூஉம், இவள் கண்ணே - (நற்றிணை 176)

*கருத்து கொழுத்த கிளையுடன் பலாப்பழம் பழுத்திருக்கும் மலைச்சாரலில் செழுமையான மீனைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு கொக்குக் கூட்டம் மீனைக் கொத்தித் திண்பதால் வீசும் முடை நாற்றம் தாங்கமுடியாமல் தலையில் மெல்லிய மயிர் கொண்ட மந்திக்குரங்கு (பெண் குரங்கு) தும்மும். இப்படித் தும்மும் மலைநாடன் நீ.*

*உன்னிடத்தில் கூட ஒன்று சொல்ல இவளுக்கு வெட்கமாக இருக்கிறது.*

*படரும் கொடியில் பூக்கும் பீர்க்கம்பூ போல இவள் கண்ணில் பசலை படர்கிறது. நாங்கள் தினைப்புனம் காக்கும் கானத்துக்கு நீ பல நாள் வந்து செல்கிறாய். இவள் கண்ணில் தோன்றுவது காதல் பசலை என்கிறாள், தோழி*

*(அரி அமர் வனப்பின் வண்டு – எனக் கூட்டுக.*

*கோடுகளுடன் விரும்பத்தக்க – அழகினைக் கொண்ட வண்டு என்க)*

*இவள் கண் தன்னை வண்டு என உணராமல், மலர் என மருவி வருகிறது. அதில் பீர்க்கம்பூப் போலப் பசலை ஊர்கிறது என்கிறாள். இவளுக்கு இன்பம் தருக என்கிறாள் தோழி.*

*'தாங்கல் – பொறுத்துக் கொள்ளல்;*

*மீன் முடை நாற்றம் தாங்கல் செல்லாது – மீனைக் கொத்தித் தின்பதால் வீசும் முடை நாற்றம் தாங்க முடியாமல்,*

*"நாற்றம், கெட்ட வாடை என்ற பொருளிலும் சங்கக் காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*தாங்கல் என்பது ஏரி என்னும் பொருள் தாங்கியது.*

*ஏர்த் தொழில் சிறக்க அமைக்கப்படுவது ஏரி*

*குளிக்கப் பயன்படுமாறு அமைவது குளம்.*

*உண்ணுநீராகப் பயன்படுத்த அமைவது ஊருணி*

*(பேராவூருணி, மயிலூருணி)*

**"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்**

**பேரறிவாளன் திரு" (திருக்குறள் 715)**

*பொழிப்பு (மு.வரதராசன்) ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது.*

தேங்கு தேங்கல்

**தேக்கு தேக்கம், பூண்டி நீர்த்தேக்கம்**

**தாங்கு தாங்கல் நீரைத் தாங்கி நிற்கும் நீர்நிலை**

*(தாக்கு, தாக்கம்)*

*வேடந்தாங்கல், பாவந்தாங்கல் (பல்லவன் தாங்கல்), ஐயப்பன் தாங்கல், ஈக்காட்டுத் தாங்கல், போன்ற ஊர்ப் பெயர்களும் உண்டு.*

**"வருவிசை புனலைக் கற்சிறை போல**

**ஒருவன் தாங்கிய பெருமையானும்"**

*(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 8:78)*

*பொருள் விசையோடு வரும் நீரை ஒரு கற்சிறை அணைக்கட்டு தடுத்து நிறுத்துவது போல வேகமாக முன்னேறி வரும் ஒரு படையை உறுதியோடு முதலாவதாக முன் சென்று அதனைத் தடுத்து நிறுத்தக் காரணமாவதன் மூலம் ஒரு வீரன் பெருமையடைகிறான்.*

**'நீருக்குக் கற்களால் கட்டப்படும் சிறை**

**கற்சிறை கல்லணை.'**

**"நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்**

**தட்டோர் அம்ம இவண் தட்டோரே**

**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"**

**- (புறநானூறு 18:28:30)**

*கருத்து: வளைந்து செல்லும் ஆழமான இடங்களில் விரைந்து நீரைத் தடுத்து நீர்நிலைகளை உருவாக்கியவர்கள்தாம் இவ்வுலகில் தாம் விரும்பியவற்றைத் தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்டவர் ஆவர். அவ்வாறு செய்யாதவர்கள், இவ்வுலகில் தாம் விரும்பியவற்றை நிலை நிறுத்திக் கொள்ளாதவர் ஆவர்.*

*"புகழ் வேண்டுவார்" அணைகட்டி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது.*

**"இடி உடைப் பெரு மழை எய்தாது ஏக**

**பிழையா விளையுள் பெரு வளம் கரப்ப**

**மழை பிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க**

**என"**

**- (சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம் 11:27:29)**

*"மழையைப் பிணித்து வெள்ளப்பெருக்கு ஏற்படாது தடுத்து ஆண்ட மன்னவன்.*

**"சிதரற் பெரும் பெயல் சிறத்தலின்**

**தாங்காது.**

**குண கடற்கு இவர்தரும் குரூஉப்புனல்**

**உந்தி"**

**(மதுரைக் காஞ்சி : 244-245)**

"இடியுடன் கூடிய பெருமழையானது எங்கும் தாங்காது / தேங்காது. கீழ்க்கடலுக்கு விரைகிறது.

மழை வெள்ளத்தைத் தாங்க / தாங்கி வைப்பது தாங்கல்.

தாங்கச் செயற்கையாகக் கட்டுவதும் தாங்கல்.

நீர் நிலைகளை எப்படி அமைப்பது என்பதைக் கூறும் பாடல்.

**"குளந்தொட்டுக் கோடு பதித்து வழி சீத்து**
**உளந்தொட்டு உழுவய லாக்கி -**
**வளந்தொட்டுப்**
**பாகு படுங்கிணற்றோடு என்றிவ் ஐம்**
**பாற்படுத்தான்**
**ஏகும் சுவர்க்கத் தினிது"**
**- (சிறுபஞ்ச மூலம் 64)**

பொருள்: குளம் (குளம் தொட்டு) கலிங்கு (கோடு பதித்து), வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை அமைத்தல் (வழி சீத்து), பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மூலம் ஆயக்கட்டுப் பகுதிகளை உருவாக்குதல் (உழுவயலாக்கி) பொதுக்கிணறு அமைத்தல் (கிணறு), ஒரு ஏரியை இந்த ஐந்து அங்கங்களுடன் அமைப்பவன் சுவர்க்கத்துக்குச் செல்வான்."

"கோடு பதித்து = மரக்கிளைகள் நட்டுக் கா அமைத்தல் என்று பொருள்.

**"கொடுக்கும் வள்ளியோர் மனையினிற்**
**செறிநிதிக் குவைபோல்**
**வடுப்படாதநன் னெறியுறு தீன்வளர்**
**வதுபோல்**
**அடுக்கு மன்பருக் குதவிசெய் நபிமனத்**
**தருள்போல்**
**தடுக்க லாத்துறைப் பெருக்கெனப்**
**பெருகின தாங்கல்"**
**- (சீறாப்புராணம் 4834)**

உரை: அவ்வாறு பொழிய, அக் குளமானது கொடுக்கின்ற வள்ளல்களது வீட்டின் கண் செறிந்த திரவியக் குவியல் போலவும், குற்றப்படாத நல்ல ஒழுங்கைப் பொருந்தி தீனுள் இஸ்லாமென்னும் மெய்ம்மார்க்கம் வளர்வதைப் போலவும், வந்து சேர்நத அன்பர்களுக்கு உதவி செய்கின்ற நமது நாயகம் நபிகட் பெருமானார் நபி செய்யிதுனா செய்யிதுல் முறுசலீன் ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அன்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லல மவர்களது மனத்தின் காருண்ணியத்தைப் போலவும், தடை செய்ய முடியாத துறையினது பெருக்கைப் போலவும், பெருகிற்று.

**"நீங்கருஞ் சேற்றி லீற்றுளைந் தலறி**
**நிலாவெனச் சங்கமுத் துயிர்க்கப்**
**பூங்கருங் குவளை யலர்ந்திடும் விரும்பிப்**
**புள்ளறு கால்படத் தகர்ந்து**
**தீங்கரும் பெருத்திற் றூங்குதே னுடைந்து**
**சிதறிடும் பணைபுடை சூழுந்**
**தாங்கல்சேர் வளமை செறிந்திடுங் காபா**
**வென்னுமத் தலத்தினைச் சார்ந்தார்."**
**- (மேலது 4923)**

உரை: அவ்வாறு போய்ச் சங்கங்கள் நீங்குதற் கருமையான சேற்றில் சூலினால் வருந்திச் சத்தித்து நிலாவைப் போலும் முத்தங்களை யீன, அதனால் அழகிய நீலோற்பல மலரானது மலர்ந்திடுமண் இச்சித்து வண்டுகளின் ஆறுபாதங்களும் பட, அதனால் உடைந்து இனிய கரும்பினது பிடரில் தொங்கா நிற்கும் தேன்கூடானது தகர்ந்திடும் வயல்களை பங்கங்களிற் சூழப் பெற்ற குளங்களைப் பொருந்திய செல்வமானது நெருங்கிய காபாவென்று சொல்லும் அந்தத் தானத்தைச் சேர்ந்தார்கள்.

(உரையாசிரியர் மகாமதி சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர்)

"தாங்கல் = குளம்"

தாங்கல் – Tank

இச்சொல் இந்தியாவிலிருந்து போர்த்துகீசியரால் கொணரப்பட்ட சொல் எனக் குறிக்கப்பட்டாலும் அதன் மூலத்தைக் குசராத்தியிலும் மராத்தியிலும் தேடி இறுதியாகச் சங்கதம் என முடித்து விட்டார்கள். அவர்கள் தமிழ் மொழியை அறிந்திருந்தால் தமிழே மூலம் எனக் கூறியிருப்பார்கள்.

Tank (n.)

1610s, "pool or lake for irrigation or drinking water, "a word originally brought by the portuguese from India, from a hindi source, such as Gujarati tankh "cistern, underground reservoir for water," Marathi tanken" reservoir of water, tank. Perhaps ultimately from Sanskrit tadagam "pond, lake pool," and reinforced in later sense of "large artificial container for liquid" (1680s) by portuguese tanque "reservoir," from estancar "hold back a current of water" from Vulgar Latin.

●

கட்டுரை

# ஊரும் பேரும்

## சூர்யகலா சரவணன்

பெயர் ஒருவரின் அடையாளத்திற்கான முதல்வழி. சுயஅறிமுகத்திற்க்கான முதல்வரி. உயிரற்ற பொருட்களுக்கு அதன் பெயர் தான் உயிர்.

உயிருள்ள மனிதர்களுக்கோ அது உணர்வு.

தம் மொழி, இனம், பண்பாடு சார்ந்தே இங்கே பெயரிடப்பட்டாலும் அந்தப் பெயர்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் உணர்வுகள். பெயர்களைப் போலவே வித்தியாசமானவை.

உணர்வுகளின் மொழிபெயர்ப்பாகவும் இங்கே பெயர் இருக்கிறது. அதிலே ஆழமான அன்பும், தீராத ஏக்கமும், சொல்லப்படாத சோகமும், இருக்கும். சொல்லக்கூடாத ரகசியமும், சொல்லப்படாத காதலும் இருக்கும். வீரமும் விசுவாசமும் நிறைந்திருக்கும் வேட்கை தலைதூக்கி யிருக்கும். ஈர்ப்பு மிளிர்ந்திருக்கும்.

தமிழ் மக்கள் பெயருக்கு அளிக்கும் முக்கியத்துவம் என்பது அபரிவிதமானது. ஊர்ல பேர் சொல்ற மாதிரி வாழணும். என் பேரை கெடுத்துடாதே. நல்ல பேர் எடுப்பது கடினம் என பெயருக்கென்று பல பழமொழிகள் இங்குண்டு.

தமிழர்களின் பெயரியல் காலாச்சாரம் என்பது அன்றைய மன்னராட்சி தொட்டு இன்றைய மக்களாட்சி வரை பல்வேறு மாற்றங்களை கொண்டுள்ளது. பிறமொழி ஈர்ப்பும், கலப்பும் காலம் காலமாக உள்ளது. அந்த ஊடுருவலுக்கு பின்னால் உள்ள காரணங்கள் உயரியதாகத்தான் உள்ளது.

தன் பிள்ளையே பேர் சொல்லும் பிள்ளை என்றழைக்கும் தமிழ்ச்சமூகம் பிறந்த குழந்தைக்கு பெயர் வைப்பதையே விழா எடுத்துக் கொண்டாடி வருபவர்கள்.

நீங்க யாரு எந்த ஊரு உங்க பேரு என்ன.? இப்படித்தான் எங்களின் அறிமுகம் இருக்கும். ஆளப்பார்த்தா நம்மூர் மாதிரி தெரியலையேன்னு சொல்லிக்கிட்டே பேர விசாரிச்சு எந்தூர்ன்னு கண்டுபிடிப்போம் என சொல்லும் பாங்கே அத்துணை சுவாரசியமானது.

மண்ணின் மொழி போல்,மண்ணின் மணம் போல் மண்ணில் வைக்கப்படும் பெயருக்கும் இங்கே சிறப்புண்டு தனித்துவமுண்டு.

ஊர் பெயர் தெரியாதவர் இங்கே யாரேனும் உண்டா. அது நம்மோடு வாழ்வது. நாம் மறைந்த பின்னும் தொடர்வது.

அந்தக் காலத்துல பொறந்த தேதி குறிப்பெல்லாம் அரிது. புள்ளைய என்னிக்கு பொறந்துச்சுன்னு கேட்டா..?

ஆத்துல தண்ணி வந்தனைக்கு,மாட்டு பொங்க கூர்ணப்போ, மாசேக்குற அன்னிக்கு,ஆடி வெள்ளி அன்னைக்குன்னு பொறந்த நேரம் கூட சரியாத்தெரியாது. ஒன்னு ரெண்டு புள்ளைங்க இருந்தான தெரியும்.

அப்படி கணக்கில்லாமல் பெத்த புள்ளைகளுகக்கெல்லாம் பெயர் வைக்கிறதுதான் பெரிய கதை.

வாய் நிறைய கூப்பிடுற பேரு, வாய்க்குள்ள நுழையாத பேரு,வாயில வந்தத சொல்லி அதுவே பேரான பேரு, அப்பேர்பத்த பேரு,பேரப்பாரேன், உனக்கு போய் யாரு இப்படி பேரு வைச்சது, நல்ல பேரு, கெட்ட பேரு, யாருமே வைக்காத பேரு,கிழவன் கிழவி பேரு,

சாமி பேரு, ராசா, ராணி பேரு,

நாட்ட ஆண்டவமூட்டு பேரு, கட்சிக்காரர் பேரு, பேச்சாளர் பேரு, வெள்ளைக்காரன் பேரு, சினிமாக்காரன் பேரு, ஆளுக்கு தகுந்த பேரு, அவ்வளவுதான்

இதுதான் எங்கள் பெயரியல். எளிமையாகத் தோன்றலாம்.அதற்குள்

எத்தனையோ உணர்வுகள் ஒளிந்திருக்கும் நம் ஊருக்கு மன்னார்குடி என பெயர் வந்ததற்கு கதைகள் பல உண்டு.

எதனையும் உணர்வோடு அணுகும் நம் மண்ணின் மக்கள் தங்கள் பெயருக்கு உணர்வூட்டிய கதையினை காண்போம்.

மன்னை மண் ஆன்மிகம் நிறைந்த அறம் செறிந்த பூமி. இதிகாச, புராண வேத உபன்யாசங்களை நாடகங்களாகவும் சொற்பொழிவுகளாகவும் நாள்தோறும் நடந்தேறிய காலம்.

நிறை மாச கர்ப்பத்தோட இராமாயண நாடகத்தை மூன்று நாளும் பார்த்து பட்டாபிஷேகம் நடக்கறப்போ பூத்தூவ போய் அங்கயே பிறந்த பிள்ளைக்கு சீத்தாலெட்சுமின்னு பேர் வைச்சாங்களாம். இரட்டைப்பிள்ளைகள் பிறந்தால் அப்போ ராமன் இலட்சுமணன் தான்.சிவனும், பிள்ளையாரும், முருகரும் பரமசிவமாகவும், லிங்கமாகவும் கணேசன், சுப்ரமணியன் போன்ற அவர்களது எண்ணற்ற புனைப்பெயர்கள் ஆண்களுக்கும்.

பொம்பளைப்புள்ள பொறந்தா கள்ளிப்பால் ஊத்தி கொல்லும் கலாச்சாரமெல்லாம்

எங்க ஊரில் இல்லை. கடைசி காலத்துல அதுதான் கஞ்சி தண்ணியாச்சும் ஊத்தும் என ஒன்றுக்கு இரண்டாய் இருந்தாலும் வருந்தவில்லை நாங்கள்.

பார்வதி, இலட்சுமி, சரசுவதி, வள்ளி தெய்வானை, ருக்மணி என பெண்களுக்கும் குறைவில்லாத கடவுள் பெயர்கள் இடப்பட்டக்காலம் அது.

அய்யப்பனோ மணிகண்டனாக ஊர் முழுவதும் இருக்கிறார்.

வடக்கு மலையான் (திருப்பதி பெருமாள்) அந்த பெயரெல்லாம் நாம வைக்கக்கூடாது. பொரட்டாசி விருதக்காரசாமி பொல்லாதது, வீட்டையே துடைத்துவிடுமென விருதம் புடிப்பவர்களிடம் விட்டுவிட்டனர்.

ஆண்கள் பெயர்களுக்கு பின்னால் அவரவர் சாதிப்பட்டமும் பெண்களுக்கோ நான் வழிபடும் தெய்வம் நீ வாசல் தாண்டி வந்துவிடாதே என பெயருக்கு பின்னாள் அம்மாள் என்ற வேலி போடப்பட்டிருக்கும்.

ராமனுக்கு நிகராக ஆங்காங்கே ராவணண், கும்பகர்ணன், அர்ஜுனன், பீமன், நகுலன் முதல் கண்ணகி மாதவி வரை காப்பியங்கள் முதல் பழங் கதைகள் வரை புராணங்கள் முதல் படித்த புத்தகங்கள் வரை எந்த பெயரையும் வைக்க மறக்கவில்லை நாங்கள்.

ஒருபக்கம் குடும்பக் கட்டுப்பாடு இல்லாத காலம் என்பதால் வேண்டா வெறுப்பா புள்ளையப் பெத்து காண்டா மிருகமுன்னு பேரு வச்ச கதையா.. வதவதன்னு பெத்துப்போட்டு வாய்க்கு வந்ததையெல்லாம் பேர வைச்சவங்களும் உண்டு. அவர்களுக்கு மேலோகத்து சாமிய பத்தியெல்லாம் தெரியாது. நம்ம வீட்ல நமக்கு முன்னாடி வாழ்ந்து மறைந்த குலதெய்வத்தைத் அவங்க தாண்டினது இல்லை.

வவுத்துல புள்ள இருந்தப்போ அம்மா வந்து உடபெல்லாம் இறங்கிட்டான்னு மாரியம்மனுக்கு வேண்டிக்கிட்டு பொறந்த புள்ளன்னு தெருவுக்குத்தெரு மாரியப்பன் மாரியம்மாள் என்ற பெயர் இருக்கும்.

அவளோடு சேர்ந்து அம்பேத்கரும் இங்கே வந்து விடுவார் என நம்புவோம்.

காத்தான், வீரன், அய்யனார், காத்தாயி, காளியம்மன், திரௌபதி, கருப்பசாமி, நொண்டி வீரன் என நீ கொடுத்த உன் குஞ்சிக்கு உன்பேரை குடுக்கிரேன்னு குலத்தெய்வப் பெயர் வரும்படி பெயர்வைக்கும் முறையும் உண்டு.

விடியகாலமற சொப்பனத்துல நம்ம தூண்டிகாரன் சாமி கையில அரிவாளோட வந்து ஆடி கிட்டு உனக்கு தலைச்ச ஆம்பளைப்புள்ள பொறக்கும் எனக்கு ரெட்டைகிடா வெட்டி பொங்க வைன்னு சொல்லி பொறந்த பயலுக்கு அது பேர வைச்சோம்ன்னு ஊர் காவல் தெய்வங்களின் பெயரும் வைக்கப் பட்டது.

புள்ளை வரம் வேண்டி போற கோயில்லையெல்லாம் புள்ளப்பொறந்த உன்

பேரை வைக்கிற சாமின்னு வேண்டிகிட்டு கன்னியாகுறிச்சி கோவிலுக்கு போய் உப்பு வாங்கி கொட்டிப்புட்டு உண்டஉருளை புடிச்சு வைச்சு வேண்டிக்கிட்டு பிறந்த புள்ளைக்கு வடிவழகின்னு பேரு வைச்சு வருசமொட்டை அடிச்சவோதான் நம்ம சனங்க.

அங்கிட்டு மதுக்கூர் போன பெரமையனும், பெரமாயியும் தான். பக்கத்துல பட்டுகோட்டையா நாடியம்மாளும், நாடிமுத்தும் தான் பெயர்.

மாரியம்மாளுக்கு ஒரு மாமாங்கமா புள்ளையில்லன்னு வேளாங்கண்ணிக்கு வேண்டிகிட்டு கால்நடையா போய் பிறந்த பிள்ளைக்கு மேரின்னு பெயர் வைக்கும் அளவுக்கு மதசார்பற்ற மக்கள் நிறைந்தது எம் மண். ஆண்டவர் (நாகூர் ஆண்டவர்) கோயிலுக்கு போய் மொட்டையடிச்சு வேண்டிகிட்டு பொறந்த பிள்ளைக்கு நாகூரான்னு பேர் வைத்து நன்றி தெரிவிக்கும் நன்னெறி நிறைந்தவர்கள் எம் மக்கள் அவர்களுக்கு எல்லா சாமியும் ஒன்றுதான். போக, வரையில கையெடுத்து கும்பிட்டா அது நம்மள கைவிடாது அவ்ளோதான்.

எங்களுக்கு குழந்தையும் தெய்வமும் ஒன்றுதான்.

மண்ணையும்,மொழியையும் தாயோடு ஒப்பிடும் சமூகம் தாய்மார்களை வீட்டு மூத்தவர்களையும் மாமனார் மாமியார், கணவர், கொழுந்தன் பெயர் என எந்த ஆண்களின் பெயரைச் சொல்லவும் பெண்களை அனுமதிக்கவில்லை.

மாமனார் பேரு சீனிவாசனா இருந்தா மருமகமாருங்க சீனியக்கூட வெள்ளை சக்கரைன்னு தான் சொல்லுவவோ. மாமியார் பேரு முருகாயின்னா முருங்க மரத்த ஒத்தமரம்ன்னு (அத்தைமரம்) சாகும் வரை அப்பெயரைச் சொல்லாத கிழவிகளும் உண்டு.

வீட்டில் இறந்தவங்க பேரை பிள்ளை களுக்கு நினைவாக வைக்கும் பழக்கத்தில் தாத்தாவின் பேரை பேரனுக்கு வைச்சா அந்த ஆத்தாகிழவி தன் புருசன் செத்துப் பத்துவருசம் ஆனபிறகும் பேரனை பேர் சொல்லி கூப்பிடாது.மத்தவங்களையும் கூப்பிடவிடாது.

அக்கம் பக்கத்தில் அந்த பேர் யாருகாச்சும் இருந்தாங்கூட பேர்சொல்லாதவனேன்னு தான் கூப்பிடும். தப்பித்தவறி யாராவது தன் புருசன் பேரை சொல்லிவிட்டால் கூட தலையில அடிச்சமாதிரி அவோ பேரை சொல்றியேன்னு சண்டைக்கு வந்துவிடும். அது அந்த கிழவிக்குள் விதைக்கப்பட்ட தீராத வியாதி அது.

வெள்ளைக்காரர்களின் நிறமான வெள்ளையின் மீது வந்த ஈர்ப்பால் நமது நிறமான கருப்பின் மீது வந்த வெறுப்பு நமக்கு இன்னும் போகவில்லை. கருப்பாயியும்,கருப்பனும் கேலிப்பெயரானது. வாயிக்குள் நுழையாத அவர்களின் பெயர்களை உச்சரிக்கவே தெரியாத நம்மவர்கள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டவர்களை ஆச்சரியத்தோடு பார்த்து அவங்கள மாதிரி நம்ம பிள்ளைங்க ஆகனும்னு ஆசைப்பட்டு வைச்ச நினைத்து வைத்த பெயர் தான் துரைசாமியும் துரையம்மாளும் மௌண்பேட்டன் பிரபு மீது மட்டும் என்ன ஈர்ப்போ அவர் பெயர் மட்டும் ஆங்காங்கே காணப்படும்.

கொஞ்சம் புள்ளைங்க வெள்ளையா பொறந்துட்டா போதும் வெள்ளக்காரவோ மாதிரி இருக்குப்பாருன்னு வெள்ளையனோ, வெள்ளையம்மாளோதான் பேரு. மேலும் ஆங்கிலேயர்கள் மீதான ஈர்ப்பில் அவர்களின் நாட்டையும், மொழியையும் கூட விட்டுவைக்காமல் இங்கிலிசு, இங்கிலாந்து எனப் பெயரிடப்பட்ட கிழவன், கிழவிகளும் நம் பகுதியில் இருந்தனர்.

அதே காலகட்டத்தில் மற்றொருபுரம் தீராத சுதந்திர தாகத்தை தங்கள் பிள்ளைகளின் பெயரின் மூலம் தீர்த்த பெற்றோரும் இருந்த பெருமைமிகு மண்ணும் இதுதான்.

தர்மகப்பலில் சிங்கப்பூருக்கும் மலேசியாவிற்க்கும் சென்று மண்ணை பொன்னாக்கிய நம்பகுதி மூதாதையர்கள் இந்திய தேசிய ராணுவத்தில் (INA)இணைந்து

அங்கிருந்து பிள்ளையார் சுழிக்கு பதிலாக ஜெய்ஹிந்த் என்று தலைப்பிட்டு போட்ட அந்த கடுதாசியில் பிள்ளைக்கு நேதாஜியின் பெயரை சுபாஷ்,போஸ் என்று ஆணுக்கும், இந்தியா என்று பெண்ணுக்கும் பெயர் வைக்கச்சொல்லி எழுதினார்களாம்.

மன்னைப்பகுதியில் மண் வீடுகளையெல்லாம் மாடி வீடுகளாக மாற்றித்தந்து தமிழை தன்நாட்டின் ஆட்சிமொழியாக்கி அழகுப்பார்த்த சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூவின் பெயரையும் மக்களுக்கு வைத்து சிறப்பித்துள்ளோம்.

காந்திரோடு, காந்தி சிலை போல் மகாத்மா காந்தியின் பெயர், காந்தி, மோகன்தாஸ் என்று ஊரெங்கும் உணர்வோடு இடப்பட்டிருக்கிறது. மேலும் குமரனும் வாஞ்சிநாதனும், பாரதியாரும், திலகரும், சிதம்பரனாரும், தன் பெயர் சுமந்த மனிதர்கள் மூலம் இன்றும் நடமாடிக் கொண்டுத்தான் இருக்கிறார்கள்.

சுதந்திரப்போராட்ட காலகட்டத்தில் காங்கிரஸ் பேரியத்தின் மீது ஏற்ப்பட்ட காதலால், காமராசு, நேரு, சத்தியமூர்த்தி, இந்திரா, ஜவகர்லால்,தொடங்கி ராஜிவ், சஞ்சய் தொட்டு பிரியங்கா ராகுல்,வருண் என்ற பெயர்கள் இன்றளவும் இடப்படுகிறது.

பிறமொழிப் பெயர்கள் கூட அந்த பெயர் மீதுள்ள அழியாப்புகழினாலும், அன்பினாலும் அவை நம்மொழிப் பெயராகியது.

இதிகாசப்புராணங்கள் இல்லையென்றும் வேத, பேதங்கள் எல்லாம் பொய்யென்றும் உரைக்க வந்த கடவுள் மறுப்பு கொள்கை கொண்ட சுயமரியாதை இயக்கங்கள்,பொதுவுடமை இயக்கங்கள்,திராவிட கட்சிகள் போன்ற சமூகசீர்திருத்த அமைப்புகளால் இங்கே பெயரிடல் முறையில் மிகப்பெரிய மாற்றம் வந்தது.

ஆன்மீக சொற்பொழிவுகளில் கடவுளை கண்ட மக்கள் சொற்பொழிவாளர் களையே கடவுளாக கருத ஆரம்பித்தார்கள். குழந்தை பிறந்தால் தாய்மாமன்தான் பெயரிட வேண்டும்.படித்த சட்டாம்பிள்ளைகளிடம் சென்று பெயர் வைத்துக்கொண்டிருந்த சமூகம். தன் தலைவர்கள் பேசும் கூட்டங்களுக்கு கொண்டு போய் பெயர் வைத்தனர்.

தந்தை பெரியார் எங்க ஊருக்கு பேசவந்தப்போ அரையணா குடுத்து பேர்வச்சோம். பொம்பளைப் புள்ளைங்களுக்கு வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி, மணிமேகலை அழகா பேர் வைச்சாரு. தவமிருந்து பெத்த ஆம்பளை புள்ளைங்கைய்யா நல்லாப் பெயரா வைங்கையான்னு சொன்னப்போ அப்படீன்னா இன்னொரு அரையணா குடுன்னு கேட்டு வாங்கிட்டு அண்ணாத்துரைன்னு பேரு வைச்சாராம்.

அண்ணா நம்ம ஊர்ல பள்ளிக்கூடம் தொறக்க வந்தப்போ தூக்கி கொண்டுப்போய் பெரியப்பாவுக்கு அவர் வைத்தபெயர் காமராஜ்.அப்படி அவர்களிடமெல்லாம் பெயர் வைத்த நிகழ்வை சுவாரசியமாக பெரியவர்கள் சொல்லும் முகத்தில் அவ்வளவு பெருமை மிளிரும்.

மொழிபற்று நிறைந்த காலம். மொழியின் பால் கொண்ட உணர்வால் உள்ளன்போடு பெற்றோர் வைத்த பெயரையே உதறித்தள்ளி தூயத்தமிழ்ப்பெயர்களை தலைவர்கள் வைத்துக்கொண்ட காலம்.

அண்ணாத்துரை, கருணாநிதி, ராமசந்திரன், சம்பத், ஆசைத்தம்பி, அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன், ராசேந்திரன் என்கின்ற பெயர்கள் இல்லாத ஊர்களே இங்கு இல்லை. அந்த அளவுக்கு திராவிட இயக்கங்களின் தாக்கம் இங்கே இருந்தது.

தமிழ்ச்செல்வியும் தமிழ்ச்செல்வனும் செந்தமிழ் இளந்தமிழ் என தாய்மொழியையும் நாங்கள் பெயரின் மூலம் இன்றளவும் முன்மொழிகிறோம்.

பெண்ணடிமை பேணிய இயக்கங்கள் பெண்களை மலராகவும், காற்றாகவும், மென்மை கலந்த பெண்மையாகவே பூங்கொடி, மலர்கொடி, தென்றல்,

செந்தாமரை, மல்லி, அல்லியாகவே அழைக்க விரும்பியது முரண்.

நம்மை அடிமைப்படுத்த வந்த ஆங்கிலேயர்களையே ரசித்தவர்கள். அனைவரும் சமம் என்று போதித்த பொதுவுடமைத் தோழர்களையும் போற்றாமல் விடுவார்களா என்ன..???

ஜீவா, பாலதண்டாயுதம் போன்ற பெயர்கள் மட்டுமல்ல ரஷ்யா எனப் பெண்களுக்கு பெயர் வைத்து அக்கொள்கை பிறந்த நாட்டையும் போற்றினார்கள். சோவியத் யூனியனையும் சொந்தமாக்கி லெனின், காரல்மார்க்ஸ், ஃப்ரடரிக் ஏங்கஸ், பெட்ரணன் ரசல், மாசேதுங், கோசிமின் என மக்களின் பெயரோடு தாங்கள் வசிக்கும் தெருவிற்கே தாஸ்கண்ட் தெருவென்று பெயர்வைக்கும் அளவிற்கு பொதுவுடமை பற்று பெயர்களில் மூலம் இங்கே எதிரொளித்தது.

மாட்டுக்கு நீதி சொன்ன மனுநீதிச்சோழன் ஆண்ட மண்ணில் ஆங்காங்கே மரங்கள் நட்ட அசோகரின் பெயர் தான் அசோகனாக இங்கே ஊர்களில் அடிக்கொருத்தருக்கு வைக்கப்பட்டிருக்கிது.

ஆயிரம் ஆண்டுகள் கடந்து நிற்கும் அதிசயக்கோயிலை கட்டிய ராசராசனின் பெயர் பத்து ஊருக்கு ஒருத்தருக்கு தான் இருக்கும்.

ஆனால் அவர் மகன் ராசேந்திரன் பெயரே ஒரு ஊரில் பத்து பேருக்கு இருக்கும். அவரை அருண்மொழியாகவே தமிழில் அழைக்க விரும்பி பெயர் வைத்து மகிழ்கிறோம்.

மன்னை பெரிய கோவிலை கட்டிய முதலாம் குலோத்துங்கனின் பெயரை விட கோபாலனின் பெயர் தான் எங்களுக்கு முதன்மை. வீட்டில் மூத்தவனுக்கோ, மூன்றோ, நான்கோ எல்லார் வீட்டிலும் ஒருவருக்கு வேணுகோபாலான், இராஜகோபாலான் என்ற பெயர் குடிக்கொண்டிருக்கும்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பெயர் இங்கே பொற்செழியன், இளஞ் செழியன் என இன்னும் இளைஞர்களுக்கு வைக்கப்படுகிறது.

கரிகாலன் இல்லாத ஊரே இல்லை. காவிரி,பொன்னியும் ஊருக்கு ஊர் பெயராக ஓடிக்கொண்டே இருக்கிறது.

சோழதேசத்தில் பாண்டியன், வீரபாண்டியன் என்ற பெயரும் வீதிக்கு ஒருவருக்கு இருக்கிறது.

வரலாற்று மாவீர்களையே பெயர் வைத்து போற்றியவர்கள். முப்படைகொண்டு கண்முன்னே களம் கண்டு வாழ்ந்த மாவீரனை விடுவார்களா என்ன..?

பிரபாகரன் பெயர் இல்லாத இல்லங்களே இங்கில்லை.

கூத்துக்களிலும் நாடகங்களிலும் ஆரம்பித்த அந்தப் பெயர்கவர்ச்சி சினிமா காலத்திலும் தொடர்ந்து பாகவதர்,

எம்.ஜீ.ஆர், சிவாஜி காலம் தொடங்கி இங்கே பிரபலம்.

கார்த்திக் மாதிரி கணவர் கிடைக்காத அத்தை தன் மகனுக்கு அப்பெயரை வைத்தது. நதியா மாதிரி மனைவி கிடைக்காத சித்தைப்பாவோ மகளுக்கு நதியானு பெயர் வைச்சாரு.

இன்றுவரை அந்த ஏக்கம் மயக்கமாகி, வெறியாகிப்போய் சினிமா நட்சத்திரங்கள் மற்றும் அவர்கள் ஏற்ற கதாபாத்திரங்களின் பெயர்களும் இயக்குனர்கள், இசையமைப்பாளர்களின் பெயர்களும் இன்றும் வைக்கப்படட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

இன்று எண்கணிதத்தின்படி இணையத்தில் தேடி வடமொழி சத்ததிலும், சந்தத்திலும் நாட்டம் கொண்டு அர்த்தம் அறியாமல் ஆசையாய் பெற்ற பிள்ளைக்கு அருவருக்கும் பெயர்வைக்கும் கலாச்சாரமும் நடந்தேறி வருகிறது.

உணர்வோடும் பெற்றோர் இட்ட இயற்பெயரை சோதிடத்தின் மீதுள்ள நம்பிக்கையால் ராசி நட்சத்திரம் பார்த்து மாற்றிய அறிவிலிகளும் இருக்கிறார்கள் இன்றைய அறிவியல் வளர்ச்சியடைந்த தலைமுறையில்

விளம்பரம் தேடி வினோதமாக பெயர் வைப்பவர்களும் எங்கள் ஊரில் உண்டு.

பெயரியல் முறைதான் மாறியிருக்கின்றது. ஆனால் பெயருக்கான முக்கியத்துவம் மட்டும் இங்கு மாறுவதேயில்லை. மாறப்போவதுமில்லை.

அழகான பெயர்கள் ஆயிரம் வைத்தாலும் பெண்களை ஆயி, பிள்ளை, தங்கச்சி, என்றழைப்பதும், ஆண்களை தம்பி,பய என்றழைப்பதும் இன்றுவரை நம் பகுதியில் நடைமுறையில் உள்ளது.

இட்டப்பெயர்களுக்கு மத்தியில் பட்டப் பெயர்களும் இங்கே பல உண்டு.

உருவத்தையும், நிறத்தையும், செயல் பாடுகளை வைத்தே அவை கேலியாக அழைக்கப்படும்.

ஒருவரின் பட்டத்தையோ பதவியையோ பெயராக்கி கூப்பிடும்போது பெயருக்கான தேவை மறந்து அந்த நபருக்கான மரியாதை தெரியும்.

வாத்தியாரு, புலவரு, பஞ்சாயத்தாரு என பெயர் சொல்ல முடியாத பெரியவர்களும் உண்டு. ஒருவரின் பெயரே கடைசி வரை தெரியாமல் அவர் செய்யும் தொழிலை சொல்லி பால்காரர், வண்டிக்காரர் என அழைப்பதுமுண்டு.

பிழைப்புத்தேடி வெளியூரிலிருந்து வந்து ஊரில் குடியேறிவர்களை அவர்கள் ஊரை குறிப்பிட்டு தஞ்சாவூரார், கும்பக்கோணத்தார் என்றழைப்பதும்,

இந்த வீடு அந்த வீடு என வீட்டுப் பெயரை சொல்லியும் பங்காளி வகையறா பெயர் சொல்லி அழைப்பதும், அதனை பெயருக்கு முன் சொல்வதும் நம் பழக்கவழக்கம்.

ஒரு வீட்டுல இரண்டு மூன்று மருமகள்கள் இருந்தா அவங்க பிறந்த ஊரைச்சொல்லி ஏட்டி வடசேரியா, பட்டுக்கோட்டையான்னு

மாமியார்கள் கூப்பிடும்போதும்

பெயருக்கு முன்னே ஊரைச்சேர்த்து

பெருமை கொள்ளும்போது ஊரும் பேரும் ஒன்று சேருகிறது.

இசுலாமியர்கள் எந்த பெயர் வைத்தாலும் எங்களுக்கு சாயுபும்,பாயும்தான், அவர்கள் எங்கள் மாமாக்கள் தான். கிறிஸ்தவர்கள் எல்லாம் நாடார்தான்.

செட்டியார், முதலியார் என சாதிப் பெயர் சொல்லி அழைத்தாலும் அதில் சகோதரத்துவமே இங்கு நிறைந்திருக்கும்.

உன் அப்பன் பேர் எடுக்கனும்.பேர் போன குடும்பம், பேர் பெத்தவங்க என ஒருவரின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை விளக்கும் ஒற்றைச்சொல்தான் பெயர்.

பெயரியல் அரசியலும் இங்கே உண்டு.

இப்படிப்பட்ட பெயர்கள் தான் உங்களுக்கானது என ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றம் கூட பெயரிலிருந்து தான் தொடங்குகிறது.

பெயர்தான் இங்கே எல்லாம். இல்லாமையும் வறுமையும் நிறைந்த ஏழைத்தந்தை கூட தன் மகனுக்கு கோடீஸ்வரன் என பெயர் வைத்து தான் வாழாத வாழ்வை அவன் வாழ வைக்கும் முதல் நம்பிக்கை பெயர். செல்வங்கள் பல உண்டு. தன் பெற்ற பிள்ளைச் செல்வத்திற்கு பட்டும்,பவுனும் போட இயலாத தாயோ பட்டென்றும் பவுனென்றும் பெயர் வைத்து அழைத்தாள்.

அப்பேர்பத்த பேர் வைச்சேன்

இப்படி பாழாய் போய்டீயே..??

அந்த பேருகாச்சும் நீ வாழ வேணாமா.?

என அப்படி பெயர் வைத்தும் இப்படி வீணாய்ப்போன பிள்ளையிடம் கண்ணீர் சிந்தும் தாயும் இங்கே உண்டு.

இன்னும் இங்கே குறிப்பிடாத பல பெயர்கள் இருக்கலாம். வட்டாரம் முழுக்க வகைவகையான பெயர் இருக்கலாம். அதற்கான வரலாறு அதிலிருக்கலாம்.

பார்த்து பார்த்து பெயர் வைத்தவரும் இங்கே வாழ்ந்துவிடவுமில்லை.

வாயில் வந்ததை பெயரா வைத்தவரும்

வீழ்ந்து விடவும் இல்லை.

வைத்த பெயருக்கு புகழ் சேர்ப்போம். பிறந்த ஊருக்கு பெருமை சேர்ப்போம்.

பேர் விளங்கட்டும் ●

கவிதை

# இடங்காண்கோட்டை சிவகுமார் கவிதை

பூக்களின் இளவரசி நீ
கருவுக்குள் முகிழ்த்த காலம் கார்காலம்..
வையத்தை வானம் தன் மழையாய் வாழ்த்திக்
குளிர்வித்த கார்காலம்..
இம்மண்ணில் வந்து நீ பிறந்த காலம்
பூஞ்செடிகள் முளைவிட்டு இலைவிட்ட காலம்..
நானிலத்தில் நீ நலுங்காமல் பாதம் வைத்து நடைபயின்ற காலம்
அன்னங்கள் நடக்க அஞ்சிக் கிடந்த காலம்..
நீ ஓடியாடி விளையாடிக் களித்த காலம்
மயில்கள் ஆடுவதை நிறுத்தி அயர்ந்துபோன காலம்..
போது நீ பூப்பெய்த போது என் காதல்போது பூப்பெய்த காலம்
உன் நினைவுகள் மனத்தி;ற்குள் மழையாகிப் பூப்பெய்த காலம்..
பூக்களெலாம் பூப்பெய்த காலம்
இதழ் விரிந்து மணம் திறந்த நறுமணக்காலம்
அரிதினும் அரிதான அழகியற் கோலம்..!



உன் தாவணிக் காலம் என் பாவணி காலம்
புலன்களில் பூவணி காலம் தேன் இனி காலம்..
மணப்பெண்ணாய் நீ மனம் மணந்து மகிழும் காலம்
பூக்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளும் காலம்..
ஒற்றைக் காலில் தவமிருந்தும்
ஒப்பனை செய்து வந்தும் பூக்களெலாம்
ஒதுங்கி நின்று ஓரவிழிப் பார்வை பார்த்து
உனைப்போல் இல்லையேயென உணர்வு மறந்த காலம்..
நீ தாய்மையடையும் காலம் தளிர்க்காலம்
ஆயிரமாயிரமாண்டு தவக்காலம் முடிந்து
கடவுளைக் கண்டுணரும் காலம்..
மலர்கள் தங்கள் மணமுணரும் காலம்
நீ குழந்தைப் பேறடையும் காலம் பேறுபெற்ற காலம்..
கடவுள் குழந்தையாகிக் களித்திருக்கும் காலம்
முப்பது நாளும் முழுமதிக் காலம்..
கதிரவனுக்குக் கார்காலம்
வானவெளியெங்கும் வானவிற்கோலம்
நீ துயிலும் காலம் இரவுப் போர்வையை
வானம் இழுத்துப் போர்த்திக் கொள்ளும் காலம்..
நீ கண்விழிக்கும் காலம் இருட்டிமை திறந்து
இயற்கை கதிரவக் கண்ணால் காணும் காலம்
நீ பல் துலக்கும் காலம் முத்துகள் முளைக்கும் காலம்..!

நீ முகம் கழுவும் காலம் பூக்களின் பனிக்காலம்
இதழின் ஈரக்கோலம் பூவிதழின் தேன்சுரக்கும் காலம்..
நீ குளித்து வரும் காலம் மண்மணக்கும் கார்காலம்
களித்து வரும் காலம் பூக்களின் புன்னகைக் காலம்..!

நேர்பார்வை பார்த்தபோது நெஞ்சிற்குள் சிறகுமுளைத்த காலம்
ஓரப்பார்வை பார்த்தபோது அக்காலம் களவுகாலம்..
ஒளிந்து பார்க்கும் காலம் பிறைநிலாக் காலம்
கருங்கூந்தல் பார்த்தால் கும்மிருட்டுக் காலம்..
முகம் காட்டினால் அது முழுமதிக் காலம்
பகலில் உனைப் பார்த்தாலும் அது பால் நிலாக் காலம்..!

நீ தள்ளி நடந்து வந்தால் மான்கள் மருளும் காலம்
துள்ளிக் குதித்து வந்தால் மயில்களாடும் மழைக்காலம்..
கொஞ்சிப் பேசினால் கிள்ளைக் காலம்
கொஞ்சம் நகைத்தால் அது குயில்காலம்..
மெய் தீண்டாது ஒதுங்குவது முல்லைக் காலம்
நம் கண்கள் தீண்டியது காதல் கனிந்த கூதிர்காலம்..
கண் தீண்டி மனம் தீண்டி உயிர் தீண்டி உணர்வு தீண்டி
உள்ளுக்குள் உணர்வுகள் கரைந்த காலம்..
நிறை மனமும் இறை மணமும் மணந்த காலம்
பேரண்டமெங்கும் பெருகுதடி எழிற்கோலம்..!

---

கவிதை

# நின்னைச் சரணடைந்தேன்

நினைவில் நின்றவளே
நெஞ்சமதில் வாழ்பவளே

வெண்மதியாய் ஒளிவீசும்
தாரகை நீதானே

அன்பால் என்னை
அரவணைத்தக் காரிகையே

விழிகளால் விந்தை
புரியும் வித்தகியே

செவ்விதழால் கன்னத்தில்
கோலமிட்டக் கோதையே

இமைமூடிய பொழுதெல்லாம்
கனவில் வருகிறாயே

கண்ணெதிரே தோன்றுகிறாய்
கவிதை எழுதுகிறேன்

இளந்தென்றலாய் மேனியை
தழுவிச் செல்கிறாயே

இதயத்தில் இருப்பவளே
இனிமையைத் தருபவளே

உயிராய் வந்தவளே
உணர்வில் கலந்தவளே

அரவணைப்பில் ஆனந்தமாய்
ஆசைகளின் ஆலாபனையே

உள்ளத்தில் உறவானவளே
உலகையே மறக்கிறேன்

சொந்தமாகி வந்தவளே
சோகங்களை போக்கியவளே

காதலால் கவர்ந்தவளே
கானமாய் இசைத்தவளே

பாசத்தில் விழுந்தேன்
நேசத்தில் நெகிழ்ந்தேன்

நின்னைச் சரணடைந்தேன்
நிழலாய்த் தொடர்ந்திடுவேன்....

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்

கடிதம்

# ஆசிரியருக்கு



## ஔரங்கசீப்

**வரலாற்றில் இடம் பெற்ற புகழ்பெற்ற கடிதங்களில் ஔரங்கசீப் தன் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் மிக முதன்மையானது. ஆசிரியர்கள் இன்றியமையாது படிக்க வேண்டியது. கல்வியியல் பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டியது.**

**1658 ஔரங்கசீப் ஹிந்துஸ்தானத்தில் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டார். அவருடைய இளம் வயது ஆசிரியர் முல்லாசாஹப் தனக்கு அரசசபையில் பதவியும் பரிசும் தர வேண்டும் என்று கோரியிருந்தார். அதற்கு ஔரங்கசீப் எழுதிய பதில் கடிதம் தான் இது.**

**அன்று ஔரங்கசீப் கற்ற கல்வியைப் பற்றியும், ஆசிரியர் தனக்கு வாழ்வியலைக் கற்பிக்கவில்லையே என்ற ஆதங்கத்தையும் அக்கடிதம் உணர்த்துகிறது. 350 ஆண்டிற்கு முன்னே கல்வி எப்படி இருந்திருக்க வேண்டும்? என்று விவாதிப்பது இன்றும் பொருத்தமுடையதாகவே இருக்கிறது. இந்தப் பின்னணியில் கடிதத்தைப் படியுங்கள். பயனுள்ள செய்திகளை (வாழ்வியல்) இளமைப் பருவத்திலேயே கற்றுக் கொடுக்காமல் போய் விட்டார்களே என்று வயிறெரிந்து எழுதுகிறார் ஔரங்கசீப்.**

*கற்றவரே!*

*நீர் என்னிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன? நான் உங்களை என்னுடைய அரசவையில் ஒரு முதன்மைப் பதவியில் அமர்த்த வேண்டும் என்று உங்களால் நியாயமாக எதிர்பார்க்க முடியுமா?*

ஒன்று சொல்கிறேன் – நீங்கள் எனக்கு எப்படிக் கல்வி போதித்து இருக்க வேண்டுமோ அப்படிச் செய்திருந்தால் உங்களுக்கு நான் பதவியைத் தருவது போன்று நியாயமான காரியம் வேறு எதுவுமே இருக்க முடியாது.

*ஏனென்றால், நான் ஒரு செய்தியை உறுதியாக ஒப்புக் கொள்வேன். ஒரு குழந்தை தன்னுடைய தந்தைக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்குக் தனக்கு முறையான கல்வியைப் போதித்த ஆசிரியருக்கும் கடமைப்பட்டிருக்கிறது.*

*ஆனால், நீங்கள் எனக்குப் போதித்த முறையான கல்வி என்பது எங்கே இருக்கிறது? ஐரோப்பாவை ஒன்றுமில்லாத ஒரு சூன்யப் பிரதேசம் என்று போதித்தீர்கள் போர்ச்சுக்கீசிய நாட்டு மாபெரும் மன்னரைப் பற்றியோ, அவருக்கு அடுத்த ஹாலந்து மன்னரைப் பற்றியோ இங்கிலாந்து மன்னரைப் பற்றியோ, நீர் எனக்கு ஒரு விபரமும் கூறவில்லை. பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாட்டு மன்னர்கள் எல்லாம் நமக்கு அடங்கிய, மிகச் சிறிய குறுநில மன்னர்கள் என்று கூறினீர்கள்.*

ஹிந்துஸ்தான் மன்னர்களின் பெயரைக் கேட்டாலே, உலகத்தில் எந்த நாட்டு மன்னனும் நடுங்கினான் என்று கதை கட்டினீர்கள். எங்கள் பரம்பரையைப் புகழ வேண்டுமே என்பதற்காக உலகத்தில் உள்ள மற்ற நாடுகள் எல்லாம் நமக்கு அடங்கினவையே என்று கூறினீர்கள். ஆழமான வியந்து பாராட்ட வேண்டிய சரித்திர அறிவு!

எனக்கு நீங்கள் என்ன கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்? உலக நாடுகளில் எல்லாம் என்ன நடக்கிறது? அந்த நாடுகளின் பலம் என்ன? அவர்களின் போர் முறைகள் என்ன? மதக் கோட்பாடுகள் என்ன? ராஜ தந்திரங்கள் என்ன? இவற்றையெல்லாம் எனக்கு நீங்கள் கற்றுக் கொடுத்திருக்க வேண்டாமா?

உண்மையான சரித்திரத்தை எனக்குக் கற்றுக் கொடுத்து, பல நாட்டு மன்னர்களின் வாழ்வையும் தாழ்வையும் அவர்களது எழுச்சியையும், வீழ்ச்சியையும் நான் உணரும்படிச் செய்திருக்க வேண்டாமா?

எந்த விதமான தவறுகள் அல்லது எதிர்பாராத நிகழ்ச்சிகளால், அங்கே புரட்சிகள் தோன்றின. எந்தச் சாம்ராஜ்யங்கள் அழிந்தன என்றெல்லாம் நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டாமா?

உங்களிடம் இருந்து என்னுடைய முப்பாட்டனார்கள் பெயர்களைக் கூட நான் அறிந்து கொள்ளவில்லை ஹிந்துஸ்தான் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த புகழ்பெற்ற என்னுடைய முன்னோர்களைப் பற்றிக்கூட உங்களிடமிருந்து நான் ஒன்றும்

தெரிந்து கொள்ளவில்லை. இந்த மாபெரும் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த அவர்களுடைய சரித்திரத்திற்கும், நீங்கள் எனக்குக் கற்பித்ததற்கும் எவ்வளவு பெரிய இடைவெளி இருந்திருக்கிறது?

எனக்கு அரேபிய மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுக்க முனைந்தீர்கள். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக விழுந்து விழுந்து படித்தாலும், முழுமையாகக் கற்றுக் கொள்ள முடியாத ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்ததன் விளைவாக எனது வாழ்நாளில் அவ்வளவு நேரத்தை வீணடித்ததற்காக உங்களுக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு வருங்கால அரசன் பன்மொழிப் புலவனாக இருந்து தான் தீர வேண்டுமா என்ன? அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் பேசும் மொழியை விடுத்து, இப்படி ஒரு கடினமான மொழியில் புலமை அடைவது தான் ஓர் அரசனுக்குப் பெருமையா? ராஜ பரிபாலனம் செய்வதற்கான அவசியமான முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டிய நான் அரேபிய மொழியைக் கற்பதில் காலம் கழித்தேன்.

ஒரு மனிதன் தன்னுடைய இளம் வயதில் நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டால், அந்த நினைவு வாழ்நாள் முழுவதும் நிலைத்து, அவனைப் பெரும் சாதனை செய்யத் தூண்டும் என்பது உங்களுக்கு தெரியாது போலும்.

சட்டம் – மத வழிபாட்டு முறைகள் – விஞ்ஞானம் – அவற்றையெல்லாம் எனது தாய்மொழியில் நான் சுற்றிருக்க முடியாதா? அரேபிய மொழியை ஏன் என் தலையில் சுட்டினீர்கள்?

என் தந்தை ஷாஜஹானிடம் எனக்கு மத தத்துவங்களைப் போதிக்கப் போவதாக நீங்கள் சொன்னது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அர்த்தமே இல்லாத இருந்தாலும் புரிந்து கொள்ள முடியாத புரிந்து கொண்டாலும் மனத் திருப்தி அளிக்காத மனத் திருப்தி அளித்தாலும் கூட இன்றைய சமுதாயத்தில் எந்தவிதப் பயனுமே இல்லாத புதிர்களையெல்லாம் என்னிடம் போட்டுக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் கற்றுக் கொடுத்த தத்துவங்களைப் பற்றி இப்படித் தான் புகழ முடியும். அவையெல்லாம் புரிந்து கொள்ள மிகக் கடினமானவை. மறப்பதற்கு மிக எளியவை.

நீங்கள் போதித்த மத தத்துவங்களைப் பற்றி என் நினைவில் மீதம் இருப்பதெல்லாம் காட்டு மிராண்டித்தனமான இருள் அடைந்த மிகப் பெரிய வார்த்தைகள் தாம் மேதாவிகளைக் கூடக் குழப்பக் கூடிய பயங்கரமான வார்த்தைகள். உங்களைப் போன்றவர்களின் அறியாமையையும், இறுமாப்பையும் மறைக்க உங்களைப் போன்றவர்களாலேயே கண்டுபிடிக்கப்பட்ட வார்த்தைகள் உங்களுக்குத் தான் எல்லாம் தெரியும்.

உங்களைப் போன்ற மேதாவிகளுக்குத்தான் இந்தப் பயங்கர வார்த்தைகளில் அடங்கியிருக்கக் கூடிய அரிய தத்துவ ரகசியங்கள் புரியும் என்று மற்றவர்கள் நினைத்து போவதற்காக உங்களைப் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட வெறும் வார்த்தைகள்.

சாதாரண காரியங்களை மட்டுமே பார்க்கும் மனப் பக்குவத்தை ஏற்படுத்தக் கூடிய மத தத்துவங்களை நீங்கள் எனக்குப் போதித்திருந்தால், மனத்தை ஒரு நிதானத்தில் அடக்கி வைக்கப் பயன்படும் அரிய தத்துவங்களை எனக்கு நீங்கள் போதித்திருந்தால்,

அதிர்ஷ்டத்தினால் தாக்கப்பட்டு, செல்வத்தில் திளைத்தாலும் சரி, துரதிர்ஷ்டத்தினால் தாக்கப்பட்டுத் தோல்வியைத் தழுவினாலும் சரி, இரண்டுக்குமே மயங்காத மனோ தைரியத்தை அளிக்கக் கூடிய தத்துவங்களை நீங்கள் எனக்குப் போதித்திருந்தால்.

நாம் யார்? உலகத்தின் மேன்மை என்ன? எப்படி இந்தப் பூமி இயங்குகிறது? என்பதையெல்லாம் நான் உணர்ந்து கொள்ள உதவி செய்யும் வகையில் நீங்கள் எனக்குக் கல்வி போதித்திருந்தால்,

இப்போதும் சொல்கிறேன். இந்த மாதிரி விஷயங்களையும் தத்துவங்களையும் நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தால், நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருந்திருப்பேன்.

அலெக்ஸாண்டர் அவனுடைய குரு அரிஸ்டாடிலுக்கு எவ்வளவு கடடைப்பட்டிருந்தானோ அதை விட உங்களுக்கு நான் கடமைப்பட்டிருப்பேன். அலெக்ஸாண்டர் அரிஸ்டாடிலுக்குச்

செய்ததற்கும் மேலாக உங்களுக்குச் செய்திருப்பேன். நன்றி காட்டியிருப்பேன்.

சதா என்னை முகஸ்துதி செய்து கொண்டே இருந்ததற்குப் பதிலாக, ராஜ பரிபாலனத்துக்குத் தேவையான விஷயங்களை எனக்குக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டாமா?

எனது வாழ்க்கைப் பாதையில் ஒரு கால கட்டத்தில் என்னுடைய பதவிக்காகவும் உயிருக்காகவும் கூட, என்னுடைய உடன்பிறந்த சகோதரர்களுடனேயே நான் வாள் எடுத்துப் போரிட நேரிடும் என்பதையும் உணரும் அளவிற்கு நீங்கள் போதித்த கல்வி அமைந்திருக்க வேண்டாமா?

ஒரு நகரத்தை எப்படி கைப்பற்றுவது? ஒரு போர்ப்படையை எப்படி நடத்திச் செல்வது என்பதையெல்லாம் நான் அறிந்து கொள்வதில் நீங்கள் அக்கறை காட்டினீர்களா?

பயனுள்ள விஷயங்களை ஏதாவது நான் அறிந்து கொள்வதில் நீங்கள் அக்கறை காட்டினீர்களா? பயனுள்ள விஷயங்களை ஏதாவது நான் இப்போது அறிந்து வைத்திருந்தால் அதற்காக நான் மற்ற பலருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக உமக்கல்ல.

‘போங்கள்! நீங்கள் எந்தக் கிராமத்திலிருந்து வந்தீர்களோ, அந்தக் கிராமத்திற்கே போய் சேருங்கள்! நீர் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? என்ன ஆனீர்கள்? என்பதையெல்லாம் எவரும் தெரிந்து கொள்ள வேண்டாம்.

●

கவிதை

# மௌனம்



நான் தட்டாத கதவை
நீ திறக்கப் போவதில்லை
நீ திறக்காத கதவை
நான் தட்டப் போவதுமில்லை
தட்டுவேன் என நீயும்
திறப்பாய் என நானும்
உடைபடா மௌனத்தின்
இறுக்கத்தோடு காத்திருக்கிறோம்
திறவா நெடுங்கதவின்
உள்ளும் புறமுமாக
புண் உமிழும் சீழ் போல்
நமக்கிடையே
இம்மௌனம்

●

அதிகாலையில் உன்
அழகான தூக்க மௌனத்தைக்
கலைப்பதென்பது
மொட்டுக்குள்ளிருக்கும்
பூவின் மௌனத்தைக்
கலைப்பது போன்றது.

●

பூசல்களின் திசையிலிருந்து
எழாத மௌனம்
பேரழகின் சமவெளி
சச்சரவுகளின் உச்சியில்
முகிழ்க்கும் மௌனம்
விபரீதத்தின் தமுக்கொலி

●

ஆழ்கடலின் மௌனத்தையே வேண்டுவது
மேற்புற அலைகளின் இரைச்சலில் தான்
வாழப் பணித்திருக்கிறது பாழும் காலம்.

●

தீ நாக்காய், கூரம்பாய், கொடுவாளாய்
சொற்களை ஏவி விடுகிறாய்
ஏதும் ஆகிவிடாது
நீ சொல்லெறிந்தால்
கலங்க குட்டையல்ல
என் மௌனம்
ஒரு மகாநதி

●

வார்த்தைகளின் சுனை
தூர்ந்த பின்
எழும்
மௌனத்தைச் சிலாகிக்க
என்ன இருக்கிறது..?

– பா. உஷாராணி, பரமக்குடி

பதிவு

# போகிறபோக்கில்

## சின்னப்பயல்

அன்று கிராமத்தில் ஒரு பஞ்சாயத்து. அண்ணன் விவேகானந்தன் தனக்கே உரிய வசீகரப் பேச்சால் நிகழ்விடத்தைக் கலகலப்பாக்கிக் கொண்டிருந்தார். போகிறபோக்கில் பழமொழி ஒன்றையும் உதிர்த்துவிட்டுச் சென்றார். அது...இது,

"பாவாடை கிழிஞ்சா தப்பில்ல... அதப் பார்த்தால் தான் தப்பா..?" என்று. கூட்டம் ஆகா போட்டுச் சிலாகித்தது. எனக்கோ என்னவோ போலாகிவிட்டது.

இவர் என்ன சொல்ல வருகிறார். எப்படி இவரால் இப்படியெல்லாம் பேசமுடிகிறது. நாம் யாருடைய கண்களால் இந்த சமூகத்தைப் பார்ப்பது, இரவு ஒன்பது மணிக்குமேல் ஒருபெண் தனியாக வெளியில் வந்தால் வன்புணர்வு செய்யப்படலாம். இங்கு வன்புணர்வுக்கு எதிராகத் திரளாமல், பெண்ணானவன் ஒன்பது மணிக்கு மேல் இரவு நேரத்தில் வெளியில் வந்ததைத் தான் இந்தச் சமூகம் தவறாகப் பார்க்கிறது.

இங்கு கலவரமோ, கருமாதியோ முதலில் குறிவைத்துத் தாக்கப்படுகிறவள் பெண்ணாகத் தான் இருக்கின்றாள். மணிப்பூரை நினைத்தால் நெஞ்சம் பதறுகிறது. நிர்வாணத்தை ஆயுதமாக்கிய மணிப்பூர் பெண்களை அம்மணமாக்கி அலங்கோலப்படுத்துகிறது. பழங்குடியினப் பெண்களின் ஆடைகளை அவிழ்த்து தன்னை அம்மணமாக்கிக் கொண்டது தேசம்.

புத்தகரம் கவிஞர் மருத.குமரேசன், ஆறாம் வகுப்பு படிக்கும் சிறுவன் தன் அம்மாவிடம் சொல்வது போல,

"பின்பக்கம் பிஞ்சிபோன
கால்சட்டையைத் தைக்க
ஐம்பதுகாசு கொடும்மா..
உப்பு வாங்கத்தான்
ஐம்பது காசுன்னா
ஒருவாரம்
உப்பில்லாமல் கஞ்சி குடிக்கிறேன்.."
என்று.

உப்பில்லாமல் கூட கஞ்சி குடிக்கின்றேன். ஆனால் உடை கிழிசலாய் இருக்கக் கூடாது என்கிற சுயமரியாதை உணர்வே மேலோங்கி நிற்கிறது. மக்களிசைப் பாடகர் கே.ஏ.குணசேகரனின் புகழ்பெற்ற பாடலொன்று,

"பாவாடை சட்டை கிழிஞ்சு போச்சுதே
இங்கு பள்ளிக்கூட புள்ளை எல்லாம்
கேலி பேசுதே.."

என்று ஏழைச் சிறுமியின் வறுமை வாழ்வை பதிவு செய்யும்.

ஒரே காட்சி, இரண்டு பார்வை. பொருள் ஒன்றாக இருக்கலாம். பார்வை வேறாக இருக்கலாம். காதல் வசப்பட்டவனுக்கு அது நிலா. பசி மயக்கத்தில் இருப்பவனுக்கு அது தோசை. பொருள் ஒன்று. பார்வை வேறு. வாசலில் தண்ணீர் தெளித்துக் கோலமிடும் பெண்ணை இருவர் பார்க்கின்றனர். ஒருவர் கல்யாண்ஜி. மற்றொருவர் மக்கள் பாவலர் இன்குலாப்.

கல்யாண்ஜியின் பார்வையில்,

"கருப்பு வளையல்
கையுடன் ஒருத்தி
குனிந்து நிமிர்ந்து
கூட்டிப் பெருக்கினாள்
வாசல் சுத்தமாச்சு
மனசு குப்பையாச்சு!"

ஆனால், மக்கள் பாவலர் இன்குலாப்போ,

"பரங்கிப் பூவினும்
பெரிதான
பாவாடைக் கிழிசலைக்
கோலம் போட்ட மாலதி
என்னைக் கண்டு
கூசி மறைத்தாளே..
அதன்பின்
மலர்ந்த முகமும்

சிவந்த விரலும்
ரசனைக்கு உகந்த
காட்சியாய் இல்லை.”

என்பார். ஏனெனில் கோலமிடும் பெண்ணின் ஏழ்மை பாவலரை வாட்டமுறச் செய்கின்றது.

இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார் தம் உரையில் குறிப்பிட்டு ஒன்றைச் சொல்வார். பெண்ணின் உடைக்கிழிசலின் வழியே தேகத்தைப் பார்ப்பவன் பிற்போக்குவாதி. தேசத்தைப் பார்ப்பவன் முற்போக்குவாதி என்று. இப்போது சொல்லுங்கள் நாம் யாருடைய கண்களால் இந்தச் சமூகத்தைப் பார்ப்பது இனியாவது கிழிசலைத் தைப்பதற்கு நூலெடுப்போம்.

– பேசுவோம்.

---

கவிதை

# பாமரக்கோடை



நெலமகளின் பச்சசேல
நெறமெங்கும் வெளுத்திருக்கும்
ஊத்துவெளி நத்தையெல்லாம்
அசந்துறங்க மண்பறிக்கும்.

நீரடையும் குளங்களெல்லாம்
நீறுபூத்து வறண்டிருக்கும்
வறண்டிருக்கும் குளத்தினிலே
வரைபடமாய் வெடிப்பிருக்கும்

குளிந்திருக்கும் மரநெழலில்
குறும்பாடு ஓய்வெடுக்கும்
ஓய்வெடுக்கும் குறும்பாட்ட
ஊர்க்குருவி வம்பிழுக்கும்

கண்காணும் பொட்டலிலே
கானலாறு பெருக்கெடுக்கும்
பெருக்கெடுக்கும் கானலிலே
பெருங்காத்து அலையடிக்கும்.

கருவேலங் காட்டோரம்
கவுதாரி பாட்டெடுக்கும்
பாட்டெடுக்கும் கவுதாரியை
பதற வைக்கும் சிறுவுடும்பு

வெக்கைய வெலக்கி வைக்க
வெள்ளெலி வளைபறிக்கும்
வளைபறிக்கும் வெள்ளெலியை
வதைநாகம் குறிவைக்கும்

அடிவானம் கருக்காம
அவசரமா மழைதூறும்
மழைத்தூறல் பட்டதிலே
மண்வாசம் மனஞ்சேரும்.

பாடுபடும் சனங்களுக்குப்
பட்டாடை வெயிலாகும்
சூடுபடும் ஒடம்புக்கு
சும்மாடு குடையாகும்

அனலேந்தி கடும்வெயிலு
ஆட்டிப் படைச்சாலும்
கோடைக் காலச் சாயங்காலம்
குளிரேந்தும் விருந்தாகும்.

இளநீரு நொங்கு சோள
எலுமிச்ச நீர்மோரு
வெங்காயம் வெந்தயமும்
வெயிலுக்கு மருந்தாகும்.

– கடம்பை அறிவு


Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்
உங்கள் இல்ல
நிகழ்வுகளை துல்லியமாக
பதிவு செய்திட
4K
Nikon
D3100
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
OUT DOOR PHOTOGRAPHY
WEDDING VIDEOGRAPHY
SPOT MIXING & YOU TUBE LIVE
WALL LED DISPLAY



ST. SEBASTIAN'S HR.SEC.SCHOOL - KAMESWARAM - EAST
தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி
காமேஸ்வரம் – கிழக்கு, நாகை மாவட்டம் , செல் : 6380763723
2022 - 23 தொடர்ந்து 18 ஆவது முறையாக பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விலும்...
மேல்நிலைப் பள்ளியாகத் தரம்உயர்த்தப்பட்டு 6 ஆவது முறையாக +2 பொதுத்தேர்விலும்...
100% தேர்ச்சி
பத்தாம் வகுப்பு மாணவர்கள்
+2 மாணவர்கள்
Y.வில்சன் 465/500
V.நிஷாந்தன் 459/500
M.சுந்தரவேல் 457/500
V.தெய்வராணி 572/600
C.V.மாதேஷ்வர் 555/600
S.சந்துரு 543/600
வெற்றிக்கு உழைக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோருக்கும்
சாதனை படைத்த மாணவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளும்... வாழ்த்துகளும்...
தூய செபஸ்தியார் மேல்நிலைப் பள்ளி ,
தூய செபஸ்தியார் கல்வி அறக்கட்டளை, காமேஸ்வரம்.